
2017 மார்ச் 03 – 05
விலை: 30/-
ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 03 - 05 | பக்கங்கள் 16 | மணி 10 | ஒளி 010
QD / 154 / NEWS / 2017

# நவமணி

நவமணி சதி அன்த
NAVAMANI WEEKLY
தமிழ் பேசும் மக்களின் சுதந்திரமான குரல்



பிணைமுறி கையொப்பம் மஹிந்தவுக்கு கிடைத்த போனஸா?

04



பலஸ்தீன் நெருக்கடியும் ஐரோப்பிய ஒன்றியமும்

14

# விகிதாசார முறையில் உள்ளூராட்சி தேர்தல்

## இது ஐ.தே.க. வின் நிலைப்பாடு
## பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம்

சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகளது பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யக்கூடிய தேர்தல் முறை ஒன்றை உருவாக்கும் வரையில் பழைய முறையிலேயே உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அரச தொழில் முயற்சிகள் அமைச்சருமான கபீர் ஹாசிம்

15 »»»»



## ஜனாதிபதி தலைமையில் சு.க. நிறைவேற்றுக் குழு கூட்டம்

■ ஆதில் அலி சப்ரி

ஸ்ரீ லங்கா தந்திர கட்சியின் நிறைவேற்றுக்குழு கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

கட்சியின் அகில இலங்கை நிர்வாகக்குழு கூட்டத்துக்கு முன்னர் நடத்தும் கட்டாய கூட்டமே இவ்வாறு ஜனாதிபதி தலைமையில்

15 »»»»






## சபாநாயகர் தலைமையில் தூதுக் குழு ஈரான் பயணம்



இலங்கை பாராளுமன்றத்தின் உயர்மட்ட தூதுக் குழுவொன்று நேற்றிரவு ஈரான் பயணமானது.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான தூதுக் குழுவில் இலங்கை-ஈரான் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவர் இராஜாங்க அமைச்சர்

15 »»»»

## நீதிமன்றங்களின் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை

■ அ. அருண் பிரசாந்த்

கல்கிசை நீதிமன்றில் இரண்டு கைத்துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ள

15 »»»»

## கல்கிசை நீதிமன்ற விவகாரம்;
## கைதாகிய 20 பேருக்கும் 13 வரை விளக்கமறியல்

■ அ. அருண் பிரசாந்த்

கல்கிசை நீதிமன்றில் புதனன்று இரண்டு துப்பாக்கிகள் கண்டெடுக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 20 பேரையும் அடுத்த 13 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு கல்கிசை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தெஹிவளை, கல்கிசை நீதிமன்றில் வைத்து நேற்று முன்தினம் சுடுவதற்கு

15 »»»»

## நிலை தடுமாறுகிறது மு.கா. மீட்பதற்கு போராட்டம் ஆரம்பம்

### நிந்தவூரில் ஹசனலி



■ யூ.கே. காலிதீன், சாய்ந்தமருது

சமூக ஒற்றுமைக்காகவும், எங்களுக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கும் அநியாயங்களுக்கு நியாயங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் தொடங்கிய கட்சி தடுமாறி, நிலைமாறி போய்க் கொண்டிருக்கின்றது. இந்த அவல நிலையிலிருந்து கட்சியையும், சமூகத்தையும் மீட்டெடுத்து அஷ்ரப் காட்டிய நேர்மையான பழைய பாதையில்

15 »»»»

## வசீம் தாஜுதீனின் கடனட்டை குறித்து விசாரிக்க உத்தரவு



■ பீ.எப்.எம் றிஷாட்


மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்ட ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் பயன்படுத்திய கடன் அட்டையை விசாரணைக்கு உட்படுத்த கொழும்பு மேலதிக நீதவான் நேற்று அனுமதி வழங்கினார்.

15 »»»»

MOULANA
Since 1989
Travels & Tours (Pvt) Ltd
UMRAH | HAJJ | TICKETING | TOURS
Head Office: No 195, Level 01, Bambalapitiya, Colombo 4
T: +94 114 422 423, M: +94 720 999 555, +94 114 954 954
Email: info@moulanatours.com Website: www.moulanatours.com

நாம் ஏன் சொல்கிறோம்?
“சென்றவரை கேளுங்கள் செல்வோம் வாருங்கள்”
Since 1989
எமது கட்டணங்களையும், சேவைகளையும் எவராலும் உடைக்க முடியாது. உம்ரா, ஹஜ்ஜுக்கான இலங்கையின் 1ஆவது தெரிவு
வாராந்த குழுக்கள் | நட்பான ஊழியர்கள் | அனுபவமிக்க வழிகாட்டிகள் | நட்சத்திர ஹோட்டல்கள் | 24 மணி நேரமும் தொடர்புகொள்ளலாம்
விரையுங்கள்!!! ஏப்ரல் | ரமழான் | ஹஜ்ஜில் உங்களது உம்ரா பதிவுகளை உறுதிப்படுத்துங்கள்!
கொழும்பு: 0720 999 555 மட்டக்களப்பு: 0720 999 666 கண்டி: 0720 999 777

கல்வி நிதித்திட்டம்
உங்கள் உயர் கல்வி கனவினை நனவாக்கிடுங்கள்



உயர்தரப் பரீட்சையினை முகம் கொடுத்தவர்களுக்கு அமானா வங்கியின் கல்வி நிதி மூலம் உயர் கல்விக்கனவை நனவாக்கிடுவதற்கான சந்தர்ப்பம்.

அமானா வங்கியின் கல்வி நிதி கீழ்வரும் பாடநெறிகளுக்கு வழங்கப்படுகின்றன.

- வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவகங்களால் வழங்கப்படும் டிப்ளோமா, பட்டப்படிப்பு, பட்டப் பின் படிப்புக்கள் என்பவற்றுக்கு இட்டுச் செல்லும் அனைத்து பாடநெறிகள்.
- CIMA, ICASL, ACCA, CIM, CFA, CMA, ABE, மற்றும் வங்கியியல் போன்ற தொழில்வாண்மை தகைமைகள்.

நாம் வழங்கும் சலுகைகள்.

- பாடநெறிக்கான வகுப்புக் கட்டணம், பதிவுக் கட்டணம் மற்றும் பரீட்சை கட்டணங்களுக்காக நிதியுதவி
- 50,000 ரூபா முதல் 5,000,000 ரூபா வரை நிதியுதவி
- 5 வருட காலம் வரை நிதியுதவியளித்தல்
- பெற்றோர்களுடன் இணைந்து விண்ணப்பிக்கும் வாய்ப்பு

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk
இது உங்கள் வங்கி
Amãna Bank

# திரைக்குப் பின்னால்

- சஞ்சாரி

**ஜெனீவாவில் மனித உரிமை பேரவையின் மகாநாடு, களுத்துறை சிறைச்சாலை வாகனத்தை மறித்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், பிரதம நீதியரசர் ஸ்ரீபவனின் ஓய்வுடன் புதிய பிரதம நீதியரசர் டெப் பதவியேற்பு, மத்திய வங்கி பிணைமுறி தொடர்பான வர்த்தமானி சர்ச்சை, திவுலபிடியவில் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவும் ஐ.ம.சு. கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்தவுக்குமிடையிலான கைகலப்பு, தொடரும் சைடம் போராட்டம் போன்றன காரணமாக அரசியல் களம் இவ்வாரமும் சூடானதாகவே இருந்தது.**

## வர்த்தமானியில் மஹிந்தவின் கையொப்பம் எப்படி வந்தது?

மத்திய வங்கி பிணைமுறி தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நீதி அமைச்சின் செயலாளர் கலாநிதி எல்.எச்.எஸ். சமரதுங்க பிணை முறி தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பற்றி வெளியிட்ட கருத்தினை அடுத்து முழு விசாரணையும் வேறு திசைக்கு திருப்பப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டதே பெரும் சர்ச்சையை உருவாக்கியது. இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பான உண்மை நிலையைக் கண்டறிவதற்காக அரசாங்க அச்சகத்தின் பதில் அச்சகர் ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்தார். விசாரணைகளை இடைநிறுத்தி திங்களன்று அரசாங்க பதில் அச்சகர் கங்காணி கல்பனா தொம்பாகொடவின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது 2015 ஜனவரி முதலாம் திகதிக்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு திகதி ஒதுக்கிக் கொண்ட போதும் அது தொடர்பான தகவல்கள் 19 மாதங்களுக்குப் பின்பே தன் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அவர் சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். மஹிந்த ராஜபக்ஷவின் பெயர் இருப்பது பற்றி அறிவித்த போதும் வங்கி அதிகாரி அப்பெயர் அவ்வாறு இருக்கும் போதே வர்த்தமானியை அச்சிடுமாறு கோரியதாகவும் கங்காணி லியனகே சாட்சியத்தில் தெரிவித்தார்.

நீதியரசர் கே.ரி. சித்திரசிறி தவறான தகவல்களை உள்ளடக்கி வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டால் மக்கள் தவறாக வழி நடத்தப்படுகிறார்கள். அதற்கு சட்ட ரீதியான வலிதும் இல்லையல்லவா? இதற்கு யார் பொறுப்புக்கூற வேண்டும்.

சாட்சி அச்சிடுவதற்கு வழங்கும் நிறுவனமே அதற்குப் பொறுப்பு கூற வேண்டும். அச்சுக்கு வழங்கும் வர்த்தமானி மூன்று முறை மூவரால் வாசித்து பிழைகள் இருக்கிறதா என தேடிப் ஒப்படைத்துள்ளோம். இது ஒரு களவு, மோசடி இது தொடர்பாக நாம் நீதிமன்றம் செல்வோம் எனத் தெரிவித்தார். இதேநேரம், வர்த்தமானி அறிவித்தலை அச்சிடும் விடயத்தில் நிதி அமைச்சும் அரச அச்சகமும் சட்டத்துக்கு முரணாக நடந்துள்ளதாக இது தொடர்பாக நடத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தவுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் செய்தியாளர் மகாநாட்டில் கருத்துத் தெரிவித்த மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அலஹப்பெரும இந்த அரசின் கீழ் மத்திய வங்கி ஓர் சூதாடும் மையமாக மாறியுள்ளது என்று குறிப்பிட்டார்.

இதேநேரம், பிணைமுறி மோசடி வெளியானது முதல் இலங்கைக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருவது குறைந்துள்ளதாக கோப் குழுவின் முன்னாள் தலைவர் டியு குணசேகர தெரிவித்துள்ளார். 2015 ஜனவரி 9ஆம் திகதி ஜனாதிபதி பதவியிலிருந்து வெளியேறிய மஹிந்த ராஜபக்ஷவின் பெயரை மார்ச் மாதம் நடைபெறும் பிணை முறி மோசடியில் தொடர்புபடுத்துவதில் ஒரு சதி இருப்பதாகவும் முன்னாள் அமைச்சர் டியு குணசேகர கூறியுள்ளார். நாட்டின் உயர் நிறுவனமான மத்திய வங்கி வரலாற்றில் முதன் முறையாக இவ்வாறான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

## களங்கமற்ற அரசியலுக்கு இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்த சபாநாயகர்

இளைஞர் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள 225 பேருக்கு மூன்று நாட்களாக பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சியில் முதல்நாள் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விசேட அமர்வாகும். பாராளுமன்றத்தின் முதலாம் இலக்க குழு அறையில் நடைபெற்ற இந்த அமர்வில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க, பாராளுமன்ற பணிப்பாளர் குழுவின் பிரதானி நீல் இத்தவல பிரதிச் செயலாளர்களான டிகிறி ஜயதிலக, துசானி ரோஹனதீர ஆகியோர் பாராளுமன்ற முறைகளைப் பற்றி விரிவுரைகளை நடத்தினர்.

இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே உரையாற்றிய சபாநாயகர் கரு ஜயசூரிய, இளைஞர் பாராளுமன்றம் எதிர்காலப் பாராளுமன்றத்தின் நிழலாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டார். இளைஞர் பாராளுமன்றத்தில் பெண்களது பிரதிநிதித்துவம் அதிகரித்துள்ளது குறித்து சபாநாயகர் திருப்தி தெரிவித்தார்.

பாராளுமன்றத்திலுள்ள பெண் பிரதிநிதிகளது எண்ணிக்கையை விட இளைஞர் பாராளுமன்றத்தில் பெண் பிரதிநிதிகள் அதிகரித்திருப்பது தனக்கு மகிழ்ச்சியைத் தருவதாகத் தெரிவித்த சபாநாயகர், உலகில் வளர்ச்சி

அலியின் புதுப்பயணம் தொடர்பான முக்கிய அறிவிப்புக்களை இன்று நிந்தவூர் பிரதான வீதியில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அறிவிக்கவுள்ளார்.

## சிங்கப்பூரில் ரணில் மஹிந்தவைச் சந்தித்தாரா?

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் விக்கிரமசிங்கவும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சர் சாகல ரத்நாயக்கவும் சிங்கப்பூரில் சந்தித்ததாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள நிலையில் பிரதமர் கிராமியப் பொருளாதார அமைச்சின் புதுக் கட்டடத் திறப்பு விழாவில் மஹிந்த ராஜபக்ஷவை விமானத்தில் சந்திக்க மேற்கொண்ட முயற்சி பற்றிக் குறிப்பிட்டார்.

இம்முறை அவுஸ்திரேலியாவுக்குச் சென்று திரும்பும் வழியில் சிங்கப்பூர் பிரதமருடன் இராப்போசனம் எடுத்தேன். அப்போது சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சரையும் சந்தித்தேன். மஹிந்த ராஜபக்ஷ இன்று சிங்கப்பூரிலிருந்து போகவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். ஒரே விமானத்தில் சந்தித்திருக்கலாம் என நான் நினைத்தேன். அவ்வாறு சந்தித்தால் சுவிசிலாந்து மற்றும் உகண்டா முறையைக் கைவிட்டு சிங்கப்பூர் முறைக்கு வந்ததனையிட்டு பாராட்டுத் தெரிவிப்பதற்கு உத்தேசித்திருக்கிறேன். முன்னாள் ஜனாதிபதி தான் பயணித்த விமானத்திற்கு வரவில்லை அவர் அதற்கு பின் வந்த விமானத்திலே வந்திருந்தார். பாராளுமன்றத்தில் இது பற்றி கேட்க இருக்கிறேன். நாம் புதிதாக சிந்திக்கப் பழக வேண்டும். மஹிந்த ராஜபக்ஷவும் புதிதாக சிந்திப்பது நல்லது என்றும் பிரதமர் கூறினார்.

இதேநேரம், தேசிய நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்புவதன் அவசியத்தை அடிக்கடி வலியுறுத்தி வரும் பிரதமர் ரணில் விக்கிரமசி

அறிமுகப்படுத்துவதற்காக நடத்தும் கருத்தரங்கு வரிசையில் 50ஆவது கருத்தரங்கு வார இறுதியில் அரநாயக்க வில்பலையில் நடைபெற்றது. வழமைக்கு மாறாக இக்கருத்தரங்கினை பள்ளிவாசல் பரிபாலன சபை ஒன்று ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. வில்பலை பள்ளிவாசல் நிர்வாக சபையின் அனுசரணையுடன் அதன் தலைவர் பர்ஹான் உமரின் நேரடி வழிகாட்டலில் கருத்தரங்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்துக்காக பள்ளிவாசல் முன்றலில் பிரமாண்டமான மேடை ஒன்று அமைக்கப்பட்டு அதிலே இடம்பெற்றது. பள்ளிவாசல் நிர்வாக சபையினால் சமூகம் பயன்படக்கூடிய இவ்வாறான நற்பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதற்கு வில்பலை பள்ளிவாசல் காட்டிய முன்மாதிரி பலரதும் பாராட்டுக்குள்ளாகியது. இந்த நிகழ்வில் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் அப்துல் ஹலீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் பேசிய முன்னாள் பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க, அரநாயக்க தேர்தல் தொகுதியில் முஸ்லிம்களின் நலனுக்காக தான் செய்துள்ள சேவைகளை நினவுபடுத்தியதோடு, நாட்டில் நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்புவது குறித்தும் கருத்துத் தெரிவித்தார். பெரும்பான்மை பௌத்தர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரநாயக்க மக்களின் கருத்தாக வடக்குக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவதன் அவசியத்தை வலியுறுத்தினார். வடக்கிற்கு தெற்கிலுள்ள ஒருவரை நியமித்தால் அடுத்த வாரமே இடமாற்றம் கேட்கின்ற நிலையில் அந்த மக்களுக்கு அவர்களது விடயங்களைக் கையாளுவதற்கு இடமளிப்பதிலுள்ள தவறு என்ன? என அவர் கேள்வி எழுப்பினார்.

30 வருட யுத்த நிறைவின் பின்னர் வடக்கு மக்களுக்கு அபிவிருத்தி என்ற பெயரில் பாதைகள், கட்டடங்கள் அமைக்கப்படுவதைவிட அவர்களின் நிஜ தேவைகள் இனங்காணப்பட்டு,

பரவலாக பேசும் விடயமாகியுள்ளது. இந்த பேட்டி தொடர்பாக புதனன்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவைச் செய்தியாளர் மகாநாட்டில் சதுரவின் தந்தையான அமைச்சரவைப் பேச்சாளர் டாக்டர் ராஜித சேனாரத்னவிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

**கேள்வி - உங்களது மகன் இந்நாட்களில் சமூக ஊடகங்களில் பிரபலமான ஒருவராகத் திகழ்கிறார். தந்தை என்ற வகையில் மகனது பேட்டி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அமைச்சர் ராஜித - நல்லது தானே. டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றது எப்படி பொசிடிவ் பிரசாரத்திலா இல்லை நெகடிவ் பிரசாரத்தில்தானே. ஜனாதிபதியானது நெகடிவ் பிரசாரத்தில் தானே.

**கேள்வி - ஜனாதிபதியாவதற்கு திட்டமிட்டு நடத்திய பிரசார இயக்கமா இது?**

அமைச்சர் - ஆம். அந்த திட்டமாக இருந்தாலும் சிறந்தது தானே.

**கேள்வி - எனினும் சமூக ஊடகங்களில் செல்லும் பிரதிரூபம் ஓரளவு மாற்றமானதே?**

அமைச்சர் - அதற்கென்ன. (சிரித்துக் கொண்டே) மடையராக்கியாவது மடையர்கள். அதனை பிரபல்யப்படுத்துவார்களாயின் நாம் என்ன செய்வது?

சதுர சேனாரத்ன இந்த நேர்முகத்தில் இந்த நாட்டு அரசியல் வரலாற்றினை அவரது வயதினை விட தாண்டிச் சென்ற அனுபவங்களை கூறியிருப்பது பிரபல அரசியல்வாதிகளுக்கும் சவால் விடுத்தாகும். பி.பி.சி. சிங்கள சேவையில் ஒளிபரப்பான இந்த வீடியோ தொடர்பாக 17000க்கும் மேற்பட்டோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## சுபர் சிறைச்சாலையை திறப்பதற்கு விடுத்த அழைப்பை நிராகரித்த மைத்திரி

சிறைச்சாலைகள் தொடர்பாக கூடுதலாக இக்காலகட்டத்தில் பேசப்படுகின்றது. களுத்துறை சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றம் சென்ற வாகனம் தாக்கப்பட்டு ஏழு பேர் பலியெடுக்கப்பட்ட சம்பவம், வெலிகட சிறைச்சாலைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு அரசு தீர்மானம் எடுத்துள்ள நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறைச்சாலைகள் பற்றி கேகாலை சென் மேரிஸ் கல்லூரியின் 150ஆவது வருட




முஸ்லிம்களின் பிரச்சினைகள் மலையளவு இருக்கையில், முஸ்லிம் தலைவர்கள் இருவரும் இரு மையங்களில் இருந்து நாட்டுக்கு முன்மாதிரி காட்டி மரம் நடுவதை பாருங்களேன்....

# சதுர சேனாரத்ன, டொனால்ட் ட்ரம்ப் போன்றவரா?

பார்க்கப்படுகின்றது. அச்சகத்தின் மூன்று பிரிவுகளினால் பார்த்து மஹிந்த ராஜபக்ஷவின் பெயர் இருப்பதாக அறிவித்தும் அப்படியே அச்சிடுமாறு மத்திய வங்கி அறிவித்தது.

## ரவி கருணாநாயக்க சிறை செல்வாரா?

இதேநேரம், மோசடி ஆவணம் தயாரித்ததாக ரவி கருணாநாயக்க சிறைவாசம் அனுபவிக்க வேண்டி வரும் என்று பிவிதுர ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மோசடி ஆவணத்தைத் தயாரித்ததற்காக திஸ்ஸ அத்தநாயக்க விளக்க மறியலில் வைக்கப்பட்டது போன்று ரவி கருணாநாயக்கவுக்கும் சிறை செல்ல வேண்டி ஏற்படும் என்று தெரிவித்துள்ளார். மஹிந்த ராஜபக்ஷ பெயரைக் குறிப்பிட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்ட சகலரும் சிறை செல்ல வேண்டி ஏற்படும் என்றும் அது தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவில் முறைப்பாடு ஒன்றைச் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மத்திய வங்கி பிணை முறை வர்த்தமானி தொடர்பாக உருவாகியுள்ள சர்ச்சை காரணமாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பலத்த நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளார். நாட்டுக்குப் பொய் கூறும் நிதி அமைச்சரை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழு ஒன்று திங்களன்று மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசாமியைச் சந்தித்து பிணை முறி தொடர்பாக கலந்துரையாடியது. பிணைமுறி கொடுக்கல் வாங்கல் தொடர்பான விசாரணையை ஒரு மாதத்துக்குள் முடிப்பதற்கு ஆளுநர் குமாரசாமி வாக்குறுதியளித்ததாக கூட்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதேநேரம், மஹிந்த ராஜபக்ஷ பெயரில் வர்த்தமானி ஒன்றில்லாவிடில் அது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யுமாறு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க முன்னாள் ஜனாதிபதிக்கு சவால் விடுத்துள்ளார். கண்டியில் இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த மஹிந்த ராஜபக்ஷ இது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பந்துல குணவர்தனவுக்கு

கண்ட நாடுகளில் பெண் பிரதிநிதித்துவம் 30 சதவீதமாக இருப்பதாகவும் குறிப்பிட்ட கரு ஜயசூரிய, நாட்டின் 22 மில்லியன் மக்களில் உங்களில் 225 பேருக்கு இளைஞர் பாராளுமன்றத்திற்கு தெரிவாகக் கிடைத்தது பாக்கியம் என்றும் கூறிய அவர், அரசியல்வாதி ஒருவரிடம் மிக ஆழ்ந்த கொடுக்கல் வாங்கல் இருப்பது தமது மனச்சாட்சியுடனாகும் என்றும் கூறியதோடு, களங்கமற்ற கரங்களுடன் அரசியலுக்குப் பிரவேசித்து களங்கமற்ற கரங்களுடன் அரசியலுக்கு பிரியாவிடை கொடுக்க முடியுமாயின் அரசியலுக்குள் பிரவேசியுங்கள் என்றும் அழைப்பு விடுத்தார். முன்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமையளிக்க வேண்டும் என தான் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

## உம்றாவின் போது ஹஸனலியுடன் செல்பி எடுத்த நூற்றுக்கணக்கான இலங்கையர்கள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஹஸன் அலி கட்சி பேராளர் மகாநாடு நடைபெற்ற சில தினங்களில் உம்றாவை நிறைவேற்றுவதற்கு புனித மக்கா சென்று தாயகம் திரும்பியுள்ளார். பத்து நாட்களாக மக்கா மதீனாவில் தங்கியிருந்த ஹஸன் அலியை அங்கு சந்தித்த இலங்கையர்கள் பலரும் கட்சி உங்களுக்கு ஏன் இப்படி செய்து விட்டது என்ற கேள்வியை எழுப்பியுள்ளமை நூற்றுக்கும் அதிகமான இலங்கையர்கள் தன்னுடன் செல்பி எடுத்துக் கொண்டதாகக் கூறிய அவர், பத்து நாட்களிலும் தன்னைச் சந்தித்த நூற்றுக்கணக்கான கிழக்கு மாகாணத்தவர்கள் தனக்கு தெரிவித்த ஆறுதல் வார்த்தைகள் தனக்கு பெரும் உற்சாகத்தை அளித்ததாகக் கூறினார். மு.கா. தலைமைத்துவம் தனக்கு இழைத்த அநீதியை மக்கள் என்ற நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிப்பதாக தான் ஏற்கனவே தெரிவித்ததன்படி வெள்ளிக்கிழமை நிந்தவூரில் பகிரங்க கூட்டம் ஒன்றில் உரையாற்றுவதாகத் தெரிவித்தார். கிழக்குக்குச் செல்வதற்கு முன் ஹஸன் அலி செவ்வாயன்று ஜாவத்தை பள்ளிவாசலுக்குச் சென்று மு.கா. ஸ்தாபகர் எம்.எச்.எம். அஷ்ரபின் அடக்கஸ்தலத்தில் அவருக்காக விசேட பிரார்த்தனையிலும் ஈடுபட்டார். ஹஸன்

ங்க, விஹாரை ஒன்றில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழில் தேசிய கீதத்தைப் பாடுவதில் இருக்கும் தவறு என்ன எனக் கேள்வி எழுப்பியிருந்தார். தமிழ் பிள்ளைகள் தமிழில் தேசிய கீதம் பாடுவதனை விட வாயை மூடிக் கொண்டிருப்பது நல்லதா என பௌத்த பிக்குகள் பெருந்தொகையானோர் கலந்து கொண்ட சமய நிகழ்வில் கேள்வி எழுப்பியுள்ளார். இந்நாட்டில் தமிழ் பிள்ளைகள் நமோ நமோ மாதா என தேசிய கீதத்தைப் பாடுவது எவ்வளவு சிறந்தது. ஒரு தாயின் பிள்ளைகள் எனக் கூறுவது எவ்வளவு சிறந்தது. இப்போது இந்த நாட்டின் பிள்ளைகளுக்கு தமிழிலும் சிங்களத்திலும் தேசிய கீதம் இசைக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது என்றும் பிரதமர் கொடிகாவத்த ஸ்ரீ நாகருக்காராம விஹாரையின் இரு மாடிக் கட்டடம் திறப்பு விழாவில் பேசுகையிலே குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய உதவியுடன் பொலன்னறுவையில் நல்லிணக்கப் பாடசாலை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொலன்னறுவை ரோயல் கல்லூரியில் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். ஜனாதிபதியின் வழிகாட்டலில் பொலன்னறுவையில் பாரிய அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும் நிலையில் ரோயல் கல்லூரியில் ஒரு கோடி 90 லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய நீச்சல் தடாகம் ஒரு கோடி 40 லட்சம் ரூபாய் செலவில் விளையாட்டுத் திடல் மற்றும் விளையாட்டு மண்டபம் என்பவற்றை ஜனாதிபதி திறந்து வைத்தார். 2018ஆம் ஆண்டாகும் போது பொலன்னறுவையின் சகல பாடசாலைகளுக்கும் சகல பௌதிக வளங்களும் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். இவ்வாண்டு இறுதியில் பொலன்னறுவை நகரில் இந்திய அரசின் உதவியுடன் சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஒன்றாகப் படிக்கக்கூடிய நல்லிணக்கப் பாடசாலை ஒன்றை நிர்மாணிக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி இக்கூட்டத்தில் அறிவித்தார்.

## பாராட்டுக்குள்ளாகிய வில்பல பள்ளிவாசலின் முன்மாதிரி

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஊடகத்தை

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்திற்கமைய பொலிஸ் அதிகாரங்களும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இணக்கப்பாட்டு அரசாங்கத்தில் அதிகார பகிர்வினூடாக தேசத்தின் ஒற்றுமையைப் பாதுகாப்பது குறித்து சிந்திக்கவேண்டிய காலம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரங்களும் வழங்கப்படும் போது யாழ் பொலிஸ் செயற்பாடுகளுக்கு தெற்கில் உள்ளவர்கள் பொறுப்புக்கூறவோ பேச்சுக்கேட்கவேண்டிய தேவையோ ஏற்படாது. அவர்கள் அவர்களுக்கு மத்தியில் அதிகாரம் செலுத்தும் நிலைமை உருவாகும். ஒரே ஆட்சியில்அதிகாரங்கள் பிரிக்கப்பட்ட ஒற்றுமையான நாடாக இருக்கவேண்டும். வலுவேறாக்கம் குறித்து நாம் சிந்திக்க வேண்டிய காலம் வந்துள்ளது. இங்கிருந்து வடக்கிற்கு மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டால், ஓர் இரு நாட்களில் அங்கிருக்க முடியாதென்று வந்துவிடுகின்றனர். ஆனால் இன்னுமே வடக்கு, கிழக்கை நாம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கோஷமிடுகின்றனர். அங்கு செல்ல ஒருவரும் முன்வருவதில்லை. மக்களின் கலாசார அம்சங்களில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. இச்சிறிய நாட்டில் அனைவரும் நல்லிணக்கத்துடன் செயற்படவேண்டும்.

அரனாயக்க மண்சரிவு ஏற்பட்டபோது வில்பொலை முஸ்லிம்களே முதன்முதலில் உணவு, உதவிப் பொருட்களை எடுத்துச்சென்றனர். அனர்த்தத்தின்போது சிங்களவர்களின் தங்கம், பணம், பொருட்களை பாதுகாத்துக்கொடுத்ததும் இப்பிரதேசத்து முஸ்லிம்களே. இதுபோன்ற சகோதரத்துவமொன்றே இன்றைய தேவை.

உண்மையான தகவல்களே ஊடகங்களால் மக்களுக்கு சென்றடைய வேண்டும். இல்லாவிட்டால் அநியாயமாகும். ஊடகங்களை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்திருந்த பயிற்சி பாராட்டத்தக்கதாகும். ஊடகங்களுக்கு இலங்கையில் தடையில்லை. எனவே ஊடகங்கள் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும்.

## சதுர சேனாரத்ன டொனால்ட் ட்ரம்ப் போன்றவரா?

கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரத்ன அண்மையில் பி.பி.சி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டி ஒன்று நாட்டில் கடந்த சில தினங்களாக

நிறைவு விழாவில் பேசியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை முன்தினம் களுத்துறையிலிருந்து கடுவெல நீதிமன்றத்துக்கு சிறைக் கைதிகளை அழைத்துச் செல்லும் போது இடையில் காத்திருந்து துப்பாக்கிப் பிரயோகஞ் செய்து கொலை செய்திருக்கிறார்கள். இந்த இரு தரப்பினரும் குற்றவாளிகளாக இருக்கலாம். இலங்கையில் சிறந்த வசதிகளுடைய சிறைச்சாலை ஒன்றை திறப்பதற்கு எனக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்கள். மிக அழகான சிறைச்சாலை என்று கூறினார்கள். என்னை விடுகிறார்களில்லை. அதனைத் திறப்பதற்கு வருமாறு அழைக்கிறார்கள். எவ்வளவு அழகாக இருந்தாலும் சிறைச்சாலையை திறப்பதற்கு என்னால் வர முடியாது என்று கூறினேன். பாடசாலையைத் திறப்பதற்கு வருவேன் என்று கூறினேன். சிறைச்சாலைகளை மூடி பாடசாலைகளை திறக்கும் நாடாக எமது நாட்டை மாற்ற வேண்டும். வைத்தியசாலைகளை குறைத்து, வைத்தியசாலைகளைத் திறக்காது சுகதேகிகளான மக்கள் வாழும் நாடாக நாட்டை மாற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி தனதுரையில் குறிப்பிட்டார்.

சென்மேரிஸ் கல்லூரி பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி, திரிபீடக, பைபிள், குர்ஆன் இவையாவும் கேந்திரமயப்படுத்தப்பட்ட ஒரு பாடசாலையாக இருப்பதோடு நல்லிணக்கத்துக்கு ஒரு முன்மாதிரியான ஒரு பாடசாலையாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## விபத்தில் சிக்கிய மகாநாயக்க தேரருக்கு ஆறுதல் கூறிய முஸ்லிம்கள்

சப்ரகமுவ பல்கலைக்கழக வேந்தரும் நாட்டில் தேசிய நல்லிணக்கத்துக்காக பாடுபட்டுழைத்து வரும் பேராசிரியர் கம்புறுகமுவ வஜிர நாயக தேரர் கடந்த வெள்ளியன்று கடுகன்னாவையில் விபத்துக்குள்ளாகி மாவனல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்தத் தகவல் கிடைத்தவுடன் முஸ்லிம் கவுன்சில் தலைவர், அமைச்சர் கபீர் ஹாசிமின் இணைப்புச் செயலாளர் முனிருடன் தொடர்பு கொண்டு தேரரின் உடல்நிலை பற்றிப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொண்டார். குவைத் சென்றிருந்த அமைச்சர் கபீர் ஹாசிமுக்கு இது அறிவிக்கப்பட்டது முனிரும் மாவனல்லை முஸ்லிம்கள் பலரும் வைத்தியசாலைக்குச் சென்று டாக்டர்களுடன் உரையாடியதோடு தேரருடன் பேசியுள்ளனர். சிறிய காயங்களுடனிருந்த மகாநாயக்கத் தேரர், அன்று இரவு வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அடுத்தநாள் மகாநாயக்க தேரர் சமய நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போது வெளிநாட்டிலிருந்து அமைச்சர் கபீர் ஹாசிம் தன் சுகம் பற்றி விசாரித்ததையும் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார். பேலியகொட பிரிவெனயில் ஓய்வு பெற்றுவரும் தேரரது சுகம் விசாரிப்பதற்காக முஸ்லிம் கவுன்சில் ஏற்பாட்டில் வெள்ளியன்று அங்கு தூதுக்குழு ஒன்று விஜயம் செய்யவுள்ளது.

# சீனி உற்பத்தியில் தன்னிறைவு பெற்று இறக்குமதியை குறைப்போம்

## பெல்வத்த கரும்பு அறுவடை விழாவில் அமைச்சர் றிஷாத்



(சுஐப் காசிம்)

நாட்டின் கரும்புச்செய்கையில் தன்னிறைவுபெற்று வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சீனியின் கொள்ளளவினை குறைப்பதே அரசின் இலக்காகும் என கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

பெல்வத்த சீனி தொழிற்சாலை அடங்கியுள்ள பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்டுள்ள கரும்பினை அறுவடை செய்யும் அங்குரார்ப்பண நிகழ்வு வியாழனன்று காலை 7 மணியளவில் இடம்பெற்றது. அமைச்சர் றிஷாத் கரும்பு அறுவடையினை ஆரம்பித்து வைத்த பின்னர் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோது இவ்வாறு தெரிவித்தார்.

லங்கா சீனிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நவீன் அதிகார தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாரசிறி, ஊவா மாகாண சபை உறுப்பினர் தர்மசேன மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி பௌசர் உட்பட பல அதிகாரிகள் பங்கேற்றனர்.

அமைச்சர் மேலும் உரையாற்றியதாவது,

சீனி உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதே எமது இலக்காகும். லங்கா சீனி கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்தின் கீழே இயங்கிவரும் பெல்வத்த சீனி தொழிற்சாலையையும் செவனகல சீனி தொழிற்சாலையையும் நவீன தொழில் முறைகளைப்பயன்படுத்தி மேலும் உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலே நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். அதேபோன்று மூடிக்கிடக்கும் கந்தளாய் சீனி தொழிற்சாலையையும்ஆரம்பிக்க முயற்சிக்கிறோம்.

பெல்வத்த சீனி தொழிற்சாலையின் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் கைத்தொழில் அமைச்சு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. கரும்பு உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தித் துறையில் இருக்கும் இடர்பாடுகளை படிப்படியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெல்வத்த சீனி தொழிற்சாலையை நம்பியிருக்கும் 11 ஆயிரம் கரும்பு உற்பத்தியாளர்களின் நலன்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு இன்னும் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த வரவு செலவு திட்டத்தில் நிதியமைச்சரினால் முன்மொழியப்பட்டவாறு ஒரு மெற்றிக்தொன் கரும்புக்கு 5000 ரூபா வீதம் வழங்கப்படுவது ஆரோக்கியமானதென கருதுகின்றோம்,

கரும்புத் தொழிலில் தன்னிறைவு பெற்று தொழிலாளர்களின் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்துவது மாத்திரமன்றி பாவனையாளர்களுக்கும் நன்மை பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் குறிக்கோளாகும். இதற்கு, ஜனாதிபதியினதும் பிரதமரினதும் வழிகாட்டல் எமக்கு துணை செய்கின்றன.

# சமகால அரசியல் பற்றி அனுரகுமாரவின் உரை

சமகால அரசியல் நிலை என்ற தலைப்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான அனுர குமார திசாநாயக்க வழங்கும் சமபால அரசியல் பற்றிய உரை நாளை சனிக்கிழமை (04) இரவு 7 மணிக்கு கொழும்பு 7 இல் அமைந்துள்ள விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய பட்டியல் அபேட்சகர் வை.எம்.இப்றாஹிமின் ஏற்பாட்டில் இக்கூட்டம் நடைபெறும்.

## பெந்தோட்டை கடலில் மூழ்கிய தர்காநகர் மாணவரின் ஜனாஸா நேற்று நல்லடக்கம்

பெந்தோட்டை கடலில் குளிக்கச் சென்றஉ தர்காநகர் பெம்ரிக் சர்வதேச கல்லூரி மாணவனின் ஜனாஸா நேற்று நண்பகல் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

தர்காநகரைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் பெந்தோட்டை கடலில் குளிக்கச் சென்ற போது ஒருவர் காணாமல் போயிருந்தார். இவரது சடலம் புதனன்று இரவு 6.30 மணியளவில் கடற்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஜனாஸா பலப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின் நேற்றுக் காலை குடும்பத்தாரிடம் ஜனாஸா கையளிக்கப்பட்டது.

# புதிய பிரதம நீதியரசராக பிரியசாத் டெப் பதவிப்பிரமாணம்



புதிய பிரதம நீதியரசராக உயர்நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதிபதி பிரியசாத் டெப் வியாழனன்று ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தின் தலைமை சட்ட ஆலோசகராக கடமையாற்றிய பிரியசாத் டெப் பதில் பிரதம நீதியரசராக பல்வேறு சந்தர்ப்பங்களில் கடமையாற்றியுள்ளார். இப் பதவிப்பிரமாண நிகழ்வில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ.அபேகோன் மற்றும் பிரியசாத் டெப்பின் குடும்பத்தினரும் பிரசன்னமாகியிருந்தனர்.

# சிறைச்சாலை பஸ் துப்பாக்கி சூடு; சந்தேகநபர்கள் தப்பிச் செல்ல முயற்சி பொலிஸாரின் தேடுதல் வேட்டை ஆரம்பம்

களுத்துறையில் சிறைச்சாலை பஸ் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்ட சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி உள்ளிட்ட மேலும் சில சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

குறித்த சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

சந்தேகநபர்களில் சிலர் போலியான கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்வதற்கு திட்டமிட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்ளுக்கு சந்தேகநபர்களின் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், சந்தேகநபர்களை கண்காணிப்பதற்காக இரண்டு விசேட பொலிஸ் குழுக்களை விமான நிலையங்களுக்கு அனுப்பியுள்ளது.

களுத்துறை சிறைச்சாலையில் இருந்து கடுவல நீதவான் நீதிமன்றம் நோக்கி கடந்த 27 ஆம் திகதி கைதிகளை ஏற்றிச் சென்ற சிறைச்சாலை பஸ் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கைதிகள் ஐவரும், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இருவரும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் 10 ஆவது பட்டமளிப்பு விழா

ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் 10 ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஜாமிஆ நளீமிய்யா கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த 2013,2014,2015 மற்றும் 2016 கல்வி ஆண்டுகளில் கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த 122 பட்டதாரிகள் பட்டம்பெறவுள்ளனர்.

ஜாமிஆ பரிபாலன சபைத் தலைவர் யாகூத் நளீம் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

# இருகட்சிகளும் பிரிந்து இருப்பதைவிட ஒன்றிணைந்தாலே நாடு முன்னேறும்

## குவைத்தில் அமைச்சர் கபீர் ஹாசீம்



இருக்கட்சிகளாக பிரிந்து அநாவசியமான பிரச்சினைகள் ஏற்படுவதற்கு பதிலாக இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து நாட்டைப் பற்றி சிந்தித்து செயற்படுவதன் மூலம் நாடு துரிதமாக அபிவிருத்தி காணும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அரச தொழில் முயற்சிகளின் அமைச்சருமான கபீர் ஹாசீம் கூறினார்.

குவைத் ஹொலிடே டவுன் ஹோட்டலில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர் மேம்பாட்டுத் திட்டத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின் ஐ.தேகவுக்கு 107 ஆசனங்கள் கிடைத்து. அரசாங்கத்தை அமைக்க இன்னும் 6 ஆசனங்கள் தேவைப்பட்ட நிலையில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் 25 பேரது பட்டியலை எடுத்துகொண்டு ஐ.தே.க அரசை அமைப்பதற்காக பிரதமரிடம் நான் சென்ற போது, அவர் எனக்கு கூறியது, தனி அரசொன்றை அமைப்பதற்கு பதிலாக இச்சந்தர்ப்பத்தில் அதல பாதாளத்தில் இருக்கும் நாடு பற்றி சிந்தித்து தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதாகும்.

பிரதமர் எப்போதும் தீர்மானங்களை எடுப்பது தூர நோக்கில் சிந்தித்து என்றும், அவர் கூறினார்யுத்த வெற்றியின் கௌரவத்தை அனைவரும் பங்குபோட்டுக்கொள்ளவேண்டும் என்றும் நான் தெரிவித்தாலும், மஹிந்த ராஜபக்ஷ அந்த கௌரவத்தை பங்குபோடுவதற்கு பதிலாக கட்டிப் பிடித்துள்ளமையாலேயே நாட்டில் பிரச்சினைகள் எழுந்துள்ளன என தெரிவித்தார். இதன்போது குருநாகல் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவும், குவைத் நாட்டின் ஐக்கிய தேசிய கட்சி சபையின் தலைவர் மொஹமட் பல்தீன் மற்றும் செயலாளர் ஆனந்த சேனானி ஆகியோரும் கருத்து தெரிவித்தனர்.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டம்
இருதய நோய்களால் அவதிப்படுகிறீர்களா?
மருத்துவ ஆலோசனை
இருதய சிறப்பு நிபுணர்
டாக்டர் வை.கே.எம். லாஹி
MBBS, MS, FRCS
04 மார்ச் 2017 - சனிக்கிழமை
அக்கரைப்பற்று, கல்முனை,
காத்தான்குடி, ஓட்டமாவடி
தொடர்புகளுக்கு: 0777340779

February | March | April | May குழு புறப்படுகின்றது
UMRAH
89,000/= Upwards
வாடிக்கையாளர் வசதிக்காக எங்களுடைய கிளைகள் நாடு முழுவதும் வியாபிக்கப்படவுள்ளது.
வல்லம்பிட்டி, திருகோணமலை அனுராதபுரம், புத்தளம், காலி, களுத்துரை
ஆகிய நகரங்களில் எமது கிளைகளை
மிக விரைவில் திரந்துவைக்கவுள்ளோம்
March 08,19,22,30 ஆம் April 05,09,11,13,15,20,27
ஆம் திகதிகளிலும் 100 பேர் கொண்ட விசேட குழுக்கள் செல்லவுள்ளன.
தலைமைக்காரியாலயம்
N.M. TRAVELS
Saudi Hajj Ministry Approved Organization
N.M. Travels & Tours (Pvt) Ltd.
569, Galle Road, Colombo 06. (Opp Roxy Cinema)
Phone – 2361254 / 2361255 / 2508438 Fax – 2587927
Email – nm.umrah@gmail.com
33,000 திருப்திகரமான யாத்திரைகள் (2000 - 2017)
மேலதிக விபரங்களுக்கு
Haji M.S.H.Mohammed
071 2799648
எமது கிளைகள்
F25, 2nd Floor, Bus Stand Complex, Kurunegala. | Tel: 037 3124570
50, Yatinuwara Patu Mawatha, Kandy (Behind Muslim Hotel) | Tel: 081 2202007
104, Main Street, Akkaraipattu. (Opp. Base Hospital) | Tel: 067 2057648
33/2, Main Street, Kattanakudy. (Opp. Gadafi Hotel) | Tel: 065 2057500
மேலதிக பக்கேஜ்கள்
Standard Package - Rs. 89,000/-
Moderate Package - Rs. 115,000/-
Luxury Package - Rs. 145,000/-
VVIP Package - Rs. 175,000/-
10 நாட்களுக்கான பக்கேஜ்
Haramக்கு அண்மையான ஹொட்டல்கள்
பிரத்தியேக சேவைகள்
No. 1 Umrah Operator in Sri Lanka
SriLankan SAUDIA KUWAIT AIRWAYS flydubai
MÖVENPICK SHAZA Rotana Marriott Hilton CROWNE PLAZA RAFFLES swissôtel pullman
RAMADA Radisson Mercure INTERCONTINENTAL Le MERIDIEN Fairmont HYATT



ஆதில் அலி சப்ரி

# உயிர்களை காவுகொள்ளும் அபிவிருத்தி யாருக்கு?

உலக வங்கியின் உதவியுடன் இலங்கையில் 2011-2030 தேசிய பௌதிக திட்டம் என்ற பெயரில் நாட்டின் பௌதிக அபிவிருத்தித் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தேசிய பௌதிக திட்டம் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டாலும் இந்த அரசாங்கமும் திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்றது.

2030ஆம் ஆண்டாகும் போது உலகின் கடற்படை,

தேசிய பௌதிக திட்டத்திற்கமைய இலங்கையில் புதிதாக புகையிரத வலையமைப்பொன்றும் நிர்மாணிக்கப்பட்டு தலைமன்னாரிலிருந்து இந்தியாவின் தனுஷ்கோடியுடன் இணைக்கப்படல், சுற்றாடல், கடல், வன பகுதிகளில் சுற்றுலாத் தளங்கள், பாரிய சுற்றுலா விடுதிகள் போன்றனவும் அமைக்கப்பட்டு சுற்றுலாத்துறையை அபி விருத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையை விமான கேந்திர நிலையமாக மாற்றும் தேவை இந்தியா, சீனா மற்றும் அமெரிக்காவுக்கு அதிகமாக ஏற்பட்

விமான, பொருளாதார, மின்சக்தி, கல்வி மையமாக இலங்கையை மாற்றும் திட்டத்தின் அடிப்படையில் 2005ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ஆம் திகதி இந்தியா, சீனா உட்பட 36 நாடுகளுடன் இலங்கை ஒப்பந்தமொன்றை செய்துகொண்டுள்ளது.

இலங்கை 36 நாடுகளுடன் செய்து கொண்டுள்ள மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள, நிர்மாணிக்கப்படவுள்ள மாத்தறை- ஹம்பந்தோட்டை, கண்டி- கொழும்பு, மன்னார்- ஹம்பாந்தோட்டை, ஹம்பாந்தோட்டை- அம்பாறை ஆகிய அதிவேக நெடுஞ்சாலைகளை இறுதியாக தலைமன்னாரில் இருந்து இந்தியான் தனுஷ்கோடியுடன் இணைத்து, இலங்கையின் நெடுஞ்சாலைகளை ஆசியாவின் நெடுஞ்சாலை வலையமைப்புடன் இணைப்பதாகும். 2030ஆகும்போது இலங்கையில் நிர்மாணித்து முடிக்கப்படவுள்ள அதிவேக நெடுஞ்சாலைகளின் நீளம் 11, 697 கிலோ மீற்றர்களாகும்.

டுள்ளது. இதனடிப்படையிலேயே கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை விஸ்தரிப்பதும், மத்தல விமான நிலையத்துக்கு மேலதிகமாக ஹிங்குராங்கொடையிலும் சர்வதேச விமான நிலையமொன்றை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. பலாலி, திருகோணமலை, புத்தளம், மட்டக்களப்பு, களுத்துறை, அம்பாறை, வவுனியா, அநுராதபுர, காலி, இரத்மலானை ஆகிய விமான தளங்களை தரம் உயர்த்துவதிலும் கண்டி, நுவரெலியா, தம்புள்ளை ஆகிய பிரதேசங்களில் புதிதாக விமான நிலையங்களை அமைப்பதற்கும் 2013ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டுள்ளது. 2030ஆம் ஆண்டாகும்போது இலங்கையின் மொத்த விமான நிலையங்களின் எண்ணிக்கை 19ஆக அதிகரித்திருக்கும்.



தேசிய பௌதிக திட்டம்- 2030இற்கமைய அநுராதபுர, வடக்கு, வடமத்திய, மொனராகல ஆகிய பிரதேசங்களில் பழவகை, காய்கறிகள், கறும்பு, நிலக்கடலை, தேங்காய் எண்ணெய் சலைகள் போன்றன அடங்கிய தொழில்பேட்டைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, நாட்டின் பல பாகங்களும் வர்த்தக முதலீட்டு மையங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. 100 ஸ்மார்ட் நகரங்கள், மாவட்ட தலைநகரங்கள், முதலீட்டு வலயங்கள், இலத்திரனியல், தகவல் தொழிநுட்ப நகரங்களும் நிறுவப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் மேற்படி திட்டங்கள் எமக்கு 100 வருடங்களுக்கு முன்னரே முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனினும் இன்றளவில் அம்மக்கள் அப்பிரதேசங்களை விட்டு மக்கள் நிலவுகைக்கேற்ற பிரதேசங்கள் நோக்கி இடம்பெயர ஆரம்பித்துள்ளனர். அதிக இலாபங்களை நோக்காக கொண்ட உலகமயமாக்கலினால் சுற்றாடலில் வளப்பற்றாக்குறை தோன்றியதே ஐரோப்பிய நகரங்கள் இன்றளவில் எதிர்நோக்கிவரும் மிகப் பெரும் சவாலாகும்.

தெற்காசியாவுக்கான கோக்காகோலா உற்பத்தி மத்திய நிலையத்தை இலங்கையில் நிறுவ முயற்சிப்பதும் மேற்கு நாடுகளின் நீர் வளம் குன்றியுள்ளதாலேயே தவிர எமது நலனை நாடியல்ல. கோக்காகோலா போத்தலொன்றின் விலையைவிட நீர் போத்தலொன்றின் விலை ஏன் அதிகமாக உள்ளது என்று சிந்தித்தால் இதற்கான விடையைக் கண்டுகொள்ளலாம்.

தேசிய பௌதிக அபிவிருத்தித் திட்டம் சரியான முறையில் திட்டமிடப்படாததனால் இலங்கை பாரிய சுற்றாடல், வள பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதை சுற்றாடலியலாளர்களின் ஆய்வுகள் பறைசாற்றுகின்றன.

தேசிய பௌதிக திட்டத்தின் ஒரு அம்சமான கொழும்பு- மாத்தறை மற்றும் கடுநாயக்க- கொழும்பு அதிவேக நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்பட்ட போது முத்துராஜவல வன பிரதேசங்கள் அழிக்கப்பட்டன. ஐரோப்பிய நாடுகளில் அதிவேக நெடுஞ்சாலைகள் அமைக்கப்படும்போது சீமேந்து தூண்கள் எழுப்பப்பட்டு இயற்கைக்கு பாதிப்பில்லாத வகையிலேயே அமைக்கப்படுகின்றது. எனினும் இலங்கையில் மேற்படி சாலைகள் சரணாலயங்களை ஊடறுத்து அமைக்கப்பட்டுள்ளதால் விலங்குகள் குறுக்கிடும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. அதேநேரம், கடந்த வருடம் கொழும்பு முகங்கொடுத்த பாரிய வெள்ள அனர்த்தத்துக்கும் அதிவேக நெடுஞ்சாலைகள் சீராக அமைக்கப்படவில்லை என்பதே பிரதான காரணமாகும். வெள்ளத்தால் கொழும்பு- மாத்தறை அதிவேக நெடுஞ்சாலைகளில் 10 நாட்களுக்கும் மேலாக நீர் தேங்கியிருந்ததை அவதானித்தோம்.

கொழும்பு- கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தால் முத்துராஜவல சரணாலயம் அழிக்கப்பட்டதோடு, எதிர்வரும் அதிவேக நேடுஞ்சாலைத் திட்டங்களால் சிங்கராஜவனம் இரண்டாக பிரியும் நிலைமையும், 39க்கு மேற்பட்ட பிரதான காடுகள் மற்றும் சரணாலயங்கள் அழிக்கப்படும் அவதானமும் ஏற்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு டோல் மற்றும் சீ.ஐ.சீ நிறுவனங்களுக்கு 65,000 ஏக்கர் நிலப்பரப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, இவ்வாண்டு சீனாவுக்கு 15,625 ஏக்கரும் இந்தியாவுக்கு 4,000 ஏக்கரும் வழங்கப்படவுள்ளது.

இவையனைத்துக்கும் காடுகளால் சூழப்பட்ட நிலங்களே வழங்கப்பட்டுள்ளன. மேலும் பல காட்டுத் தொகுதிகளும் அழிக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

1881ஆம் ஆண்டு இலங்கையின் சனத்தொகை பெருக்க வீதம் 2.4ஆக இருக்கும்போது 82 வீதமாக இருந்த இயற்கைக் காடுகள், 2016ஆம் ஆண்டாகும்போது 16 வீதமாக குறைவடைந்துள்ளன. 2016ஆம் ஆண்டு 20.6 வீதமாக உள்ள சனப் பரம்பல் 2030 ஆகும் போது 22.1 வீதமாவதோடு, இலங்கையின் மொத்த இயற்கைக் காடுகள் 10 வீதமாகும் அவதானமும் உள்ளது.

இலங்கையில் அபிவிருத்திப் பாதையில் பயணிப்பதாக கட்டடங்களும், அதிவேக நெடுஞ்சாலைகளும், ஸ்மார்ட் நகரங்களும் காட்டினாலும் சரியான இயற்கை சுற்றாடல் பராமரிப்பின்றி தேசிய பௌதிக திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமாயின் நீர், வன வளங்கள் அருகிப்போகக்கூடிய அவதானம் இருப்பதோடு, புவி வெப்பமடைதலும் பன்மடங்கு அதிகரிக்கும். இலங்கைக்கே உரித்தான தாவர, உயிரினங்களும் அழிந்துவிடும்.

சுற்றாடல், இயற்கை அழிவுகளை கண்கூடாக கண்டுகொண்டிருக்கும் சுற்றாடலியலாளர்களும், இனவாதிகளும், இனவாத ஊடகங்களும் தொடர்ந்தும் வில்பத்துக்காக குரல்கொடுப்பதைத் தாண்டி நாட்டின் சுற்றாடலை, உயிரினங்களை, நீர், கனிய வளங்களை பாதுகாப்பதற்கு, சிங்கராஜ உட்பட ஏனைய 39 சரணாலயங்களைப் பாதுகாப்பதற்கு குரல்கொடுக்க முன்வரவேண்டும்.

இது நாட்டின் முன்னேற்றம், அபிவிருத்தியை எதிர்ப்பதல்ல. அதற்கு முட்டுக்கட்டையாக குறுக்கிடுவதல்ல. நாட்டின் தேசிய வளங்களை அழிவின்பால் இட்டுச்செல்லாத நிலையான அபிவிருத்தியொன்றே நாட்டிற்கு தேவை.

அபிவிருத்தியின் பெயரால் மக்கள் உயிர்களை துடைத்தெறியும், உயிரினங்களை, சுற்றாடலை, நீர் வளத்தை, இயற்கையை அழிவுக்கிட்டுச் செல்லும் அபிவிருத்தி

---

- எம்.எஸ்.அமீர் ஹுசைன்

# பிணைமுறி கையொப்பம் மஹிந்தவுக்கு கிடைத்த போனஸா?

அரசாங்கத்திற்கு எதிராக பொது ஜன பெரமுன கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு திட்டமிட்டுள்ளார் என்ற செய்தி வெளியாகியிருக்கின்றது. ஏற்கனவே அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சித்தும், அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை செய்வதற்கும் மக்களை தூண்டி வந்த அவர் புதிய நடவடிக்கையாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு திட்டமிட்டுள்ளார். மஹிந்த ராஜபக்ஷவிற்கு வழக்கு தாக்கல் செய்வதற்கான சாதகமான நிலைமையை ஏற்படுத்தி இருக்கின்ற விடயம் இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி விற்பனை தொடர்பான மோசடி விசாரணையின் மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ள அரசாங்க வர்த்தமானி அறிவித்தலாகும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியில் இல்லாத நிலையில் 2015 ஜனவரி முதலாம் திகதி என்று திகதியிட்டு அவரை நிதி திட்டமிடல் அமைச்சராக குறிப்பிட்டு 2016 நவம்பர் மாதம் அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்த தகவல்கள் 2017 பெப்ரவரி 27 ஆம் திகதியே வெளியாகியிருக்கின்றது. இலங்கை மத்திய வங்கியால் 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பிணை முறி விற்பனை மூலம் நிதி திரட்டப்பட்ட விதம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கோப் அறிக்கையின் பின்னர் நாடளாவிய ரீதியில் இருந்தும், கூட்டு எதிரணியினர் மூலமும் அரசாங்கம் பாரிய ஊழல் இடம்பெறுவதற்கு அனுமதித்துவிட்டு உதாசீனமாக இருந்ததாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த குற்றச்சாட்டுக்களை கவனத்தில் எடுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று அதிகாரிகளைக்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்துள்ளார். ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்களான கே.ரி. சித்திரசிறி, பிரசன்ன எஸ். ஜெயவர்தன மற்றும் ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் கே. வேலுப்பிள்ளை ஆகியோர் இந்த ஆணைக்குழுவில் இடம்பெறுகின்றனர். இந்த மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட விசாரணை ஆணைக்குழு இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி ஏல விற்பனை தொடர்பாக கோப் அறிக்கைக்கு இணங்கவும் பகிரங்கமாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலும் பல கோணங்களில் இருந்து நேரடி விசாரணைகளை மேற்கொண்டு சாட்சியங்களை பதிவு செய்து வருகின்றது.

அதன்படி கடந்த 27 ஆம் திகதி அரசாங்க பதில் அச்சகர் கங்காணி கல்பனா வியனகே ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்துள்ளார். அவர் சாட்சியமளித்தபோது வெளியிட்ட தகவல் ஒன்றின் அடிப்படையிலே இந்த பிற்படுத்த திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் பற்றிய தகவல் வெளியாகியிருக்கின்றது. 105 கோடி ரூபாய்களுக்கான பிணை முறிகளை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கும் வகையில் நிதி திட்டமிடல் அமைச்சர் என்ற அடிப்படையில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி உத்தரவு பிறப்பிப்பதாக 1895/19 பதவியில் இல்லாத நிலையில் அவர் பதவி இழந்து 21 மாதங்கள் கடந்து அவரின் பெயரில் விஷேட வர்த்தமாணி அறிவித்தல் வெளியிட இலங்கை மத்திய வங்கியின் கடன் திணைக்களம் உத்தரவு வழங்கிய விவகாரம் வெளிப்பட்டிருக்கின்றது.

2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிற்படுத்தப்பட்ட திகதியிட்டு முன்னாள் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவின் பெயரில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுவது தவறான செயல் என்று அரசாங்க அச்சகர் என்ற முறையில் இலங்கை மத்திய (24570) ஆம் இலக்கம் கொண்ட விஷேட அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு இலங்கை மத்திய வங்கியின் கடன் திணைக்களம் 2016 நவம்பர் மாதம் உத்தரவிட்டதாகவும் அதற்கான தகவல்களை அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பியதாகவும் திருமதி கங்காணி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மத்திய வங்கியின் ஆளுனராக இருந்து ஜனாதிபதியால் பதவி நீக்கப்பட்ட அர்ஜூன் மஹேந்திரன் அவரது மருமகனின் நிதி நிறுவனமான பேபர்ச்சுவல் டிசரீஸ் என்ற கம்பனிக்கு வருமானம் கிடைக்கும் வகையில் பொதுவான விலை மனு கோரல் விதிமுறைகளை மீறியும் தேவைக்கு அதிகமான முறையிலும் நிதியைப் பெற்று அதிக வட்டி வீதத்தை வழங்கி கம்பனிக்கு அதிக இலாபத்தை பெறுவதற்கு வழிவகுத்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த மோசடிக் குற்றச்சாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு அரசாங்கத்தின் மீது அவப்பெயர் ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையிலே இவ்வாறான மோசடியான முறையில் மஹிந்த ராஜபக்ஷ வங்கி கடன் திணைக்களத்திற்கு சுட்டிக்காட்டவில்லையா? என்று ஆணைக்குழுவினர் குறுக்கு விசாரணை செய்த போது இலங்கை மத்திய வங்கியின் கடன் திணைக்கள அதிகாரி திருமதி வாசனா என்ற அதிகாரியே 2015.01.01 என்ற திகதியிட்டு மஹிந்த ராஜபக்ஷவின் பெயரில் வர்த்தமானி அறிவித்தலை பிரசுரிக்குமாறு உத்தரவிட்டதாகவும் அரசாங்க பதில் அச்சகர் ஒத்துக்கொண்டுள்ளார்.

இந்த விஷேட வர்த்தமானி அறிவித்தலின் 17 பிரதிகள் அச்சிடப்பட்டிருக்கின்றன. அதில் 10 பிரதிகள் நிதி அமைச்சுக்கும் ஏனைய பிரதிகள் சுவடிக்கூடத் திணைக்களத்திற்கும் பொது நூலகத்திற்கும் பாதுகாப்பிற்காகவும் தகவல் சேமிப்பிற்காகவும் அனுப்பப்பட்டிருக்கின்றது. எவ்வாறாயினும் இவ்வாறு பதவி இழந்துள்ள முன்னாள் ஜனாதிபதியின் பெயரில் அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டமையானது இந்த ஆட்சியில் மத்திய வங்கியில் சில அதிகாரிகளால் செய்யப்பட்ட ஊழலை மஹிந்தவின் பெயரில் செய்ததாக காட்டி தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சியா அல்லது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அவதூறை ஏற்படுத்தவும் அந்த ஆட்சியில் முறைகேடாக நிதி கையாளப்பட்டது என்று மக்களுக்கு காட்டி இந்த அரசாங்கத்தில் இடம்பெறும் மோசடிகளை மூடி மறைப்பதற்கான முயற்சியா என்ற அடிப்படையில் பல கோணங்களில் இருந்து சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

அல்லது இலங்கை மத்திய வங்கியில் கடன் திணைக்களத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் முன்னைய மஹிந்த ஆட்சி கால அதிகாரிகளாக இருந்துகொண்டு இவ்வாறான ஒரு சதித் திட்டத்தை திட்டமிட்டு இந்த அரசாங்கம் மீதும் பிரதமர், நிதி அமைச்சர் ஆகியோர் மீதும் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்காக திட்டமிட்ட அடிப்படையில் அரங்கேற்றியுள்ள நாடகமா என்றும் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. அதே நேரம் செம்மை பார்த்தல் மற்றும் ஒப்பு நோக்குதல் என்ற அடிப்படையில் அரசாங்க அச்சகம் புதிய திகதியில் பிரசுரிக்க வேண்டிய வர்த்தமானி அறிவித்தலை பழைய பிரதிக்கு உரிய மாற்றங்களைச் செய்யாமல் (கட் அன்ட் பேஸ்ட் செய்கின்ற போது) கவனயீனமாக தவறிழைத்துள்ளதா என்றும் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

இருந்தாலும் இந்த பிணை முறி விற்பனை விவகாரத்தில் ஏதோ ஒருவகையில் மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன என்பதற்கான ஆதாரங்கள் இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளில் இருந்து வெளியாகிக் கொண்டிருப்பதை மறுக்க முடியாது. அதன் அடிப்படையில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கடுமையான விமர்சனத்திற்குள்ளாக்கி நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை மக்களின் எதிரிகளாக காட்டுவதற்கு முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகளுக்கு போதுமான சான்றுகள் கிடைத்து வருகின்றன என்ற அடிப்படையில் மஹிந்த தலைமையிலான கூட்டு எதிரணி மேலும் உசாரடைந்து வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. ஆனாலும் இங்கு முக்கியமான விடயம் பதில் அச்சகர் ஆணைக்குழுவின் முன்னிலையில் இந்த விடயத்தை வெளிப்படுத்தும் வரையில் மஹிந்த வாதிகளோ அல்லது கூட்டு எதிரணியோ போலியான அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக எந்த தகவலையும் அறிந்திருக்கவில்லை.

ஆனாலும் இது போன்ற செயல் அரசாங்கத்தை எதிர்ப்பவர்களுக்குத் தேவையான சாதகமான சூழலை இந்த அரசாங்கமே ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அதற்கு ஏற்ப கிடைத்துள்ள புதிய சாதகமான காரணிகளின் அடிப்படையில் மஹிந்த ராஜபக்ஷவின் கௌரவத்திற்கு களங்கம் ஏற்படுத்தப்பட்டதாக குறிப்பிட்டு அரசாங்கத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு கூட்டு எதிரணி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பிவிதுரு ஹெல உருமயவின் தலைவரும் கூட்டு எதிரணியின் பிரதான பேச்சாளருமான உதய கம்மன்பில்ல தெரிவித்தார்.

நல்லாட்சியின் பெயரில் அரசாங்க தரப்பில் எங்கோ ஒரு மூலையில் தவறுகள் நடைபெறுகின்றன என்பதற்கு இத்தகைய செய்திகள் வெளிப்படையான சான்றுகளாக பதிவாகும் என்பதில் சந்தேகமில்லை.



# சிறுபான்மையினர் விடயங்களில் ஆளுநர்கள் பாரபட்சம், கடினப்போக்கு

## கனேடிய தூதுவரிடம் ஹக்கீம் தெரிவிப்பு

சிறுபான்மையினருக்கு இழைக்கப்படும் பாரபட்சம், கடினப்போக்கு குறித்து அமைச்சர் ரவூப் ஹக்கிம் கனேடிய தூதுவரிடம் எடுத்து விளக்கியுள்ளார். புதன்கிழமை (1) பிற்பகல் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாருஸ்ஸலாம் தலைமையகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் சுகாதார பிரதியமைச்சர் பைசல் காசிம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் முதலியோருடன் ஒட்டாவா நகரில் செயல்படும் கனேடிய பூகோள விவகார அமைப்பின் பிரதிநிதி பயாஸ் மஞ்ஜி, கனேடிய உயர் ஸ்தானிகராலய அரசியல் பொருளாதார, வர்த்தக ஆலோசகர் ஜெனிபர் ஹார்ட் ஆகியோரும் பங்குபற்றினர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரையும் பிரதிநிதிகளையும் சந்தித்த பிரஸ்தாபக் குழுவினர் யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் நாட்டில் படிப்படியாக ஏற்பட்டுவருகின்ற மாற்றங்கள் பற்றியும் இனமுரண்பாடுகளும் சுசப்புணர்வுகளும் குறைவடைந்து வருகின்ற தன்மை பற்றியும் அறிந்து கொள்வதில் அதிக ஆர்வம் செலுத்தினர்.

யுத்தகாலத்திலும் பின்னரும் தமிழ் மக்களிடமிருந்து பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை மீளக் கையளிக்கும் நடவடிக்கைகள் வடகிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையில், முஸ்லிம் மக்களிடமிருந்து அரசபடையினராலும் போராட்டக் குழுக்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டும் அபகரிக்கப்பட்டும் இருந்த காணிகளை அவற்றின் உரிமையாளர்களுக்கு மீண்டும் கையளிப்பதில் காட்டப்படும் அசமந்தப்போக்கில் மாற்றம் ஏற்பட்டாக வேண்டும் என அமைச்சர் ஹக்கீம் கூறினார்.

அத்துடன், அரசியலமைப்புச் சீர் திருத்தம், அதிகாரப் பரவலாக்கம், தேர்தல் மறுசீரமைப்பு என்பன பற்றி அமைச்சர் தெளிவுபடுத்தியதோடு குறிப்பாக உத்தேச தேர்தல் சீர்திருத்தம், உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை மீள் நிர்ணயம் என்பவற்றின் விடிவாக சிறுபான்மைக் கட்சிகளும் சிறிய கட்சிகளும் எதிர்நோக்கும் ஆபத்துக்களையும் சுட்டிக்காட்டினார். மாகாண சபைகளின் நிருவாகத்தைப் பொறுத்த வரையில் ஏனைய மாகாணங்களில் ஆளுநர்கள் ஒரு மெத்தனப் போக்கையும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்கள்கள் கடினப்போக்கையும் கையாண்டு வருவது குறித்தம் அமைச்சர் ஹக்கீம் விசனம் தெரிவித்தார். குறிப்பாக வரவு செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணத்துக்கான ஒதுக்கீட்டில் காட்டப்படும் பாரபட்சம், நிர்வாகக் கட்டமைப்பில் காணப்படும் இழுபறி நிலை வளப்பங்கீட்டின் சமத்துவமின்மை முதலியவற்றிலும் தனது அதிருப்தியை அவர் வெளியிட்டார்.

உயர் ஸ்தானிகர் ஷெல்லி வைற்றிங் கருத்துரைக்கும்போது கனேடிய அரசு பல்லினமக்கள் வாழும் அந்த நாட்டில் சகல சமூகங்களினதும் தனித்துவத்துக்கு உரிய மதிப்பளித்து வருவதாகவும் தத்தமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் உடைகளை அணிவதற்கு இடமளித் திருப்பதாகவும் உதாரணமாக படையிலும் பொலிசிலும் பணியாற்றும் சீக்கியர்கள் தங்களின் பாரம்பரிய தலைப்பாகையை அணிவதற்குக் கூட வாய்ப்பு அளித்திருப்பதாகவும் அவற்றையிட்டுத் தமது நாடு பெருமிதம் அடைவதாகவும் குறிப்பிட்டார். இலங்கை மக்களுக்கு தமதுநாடு தொடர்ந்தும் உதவிவருவதாகவும் அவர் மேலும் கூறினார்.





# சம்மாந்துறையில் 23கிலோ கஞ்சா பொலிசாரால் மீட்பு !



(நிந்தவூர் சுலைமான் றாபி)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சம்மாந்துறைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் 23 கிலோ மதிக்கத்தக்க கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸ் நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை குறிப்பிட்ட 23 கிலோ கஞ்சா வைத்திருந்த சம்மாந்துறையைச் சேர்ந்த இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் நிலைய உயர் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மகளிர் பாதுகாப்பு குறித்து பூரண அவதானம் செலுத்துவோம்

## அமைச்சர் பைஸர் முஸ்தபா இந்தியாவில் தெரிவிப்பு

( மினுவாங்கொடை நிருபர் )

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு, இந்தியா பயணமாகியுள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா, இந்திய அரசின் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சர் மேனகா காந்தியைச் சந்தித்து, இலங்கையிலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் விரிவான பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டார்.

இப் பேச்சுவார்த்தை, அமைச்சர் மேனகா காந்தியின் அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலின் போது, இரு அமைச்சர்களுக்கு மத்தியிலும் பெண்கள் மற்றும் சிறுவர்களின் அபிவிருத்தி தொடர்பிலும் ஆராயப்பட்டதுடன், அவர்களது பாதுகாப்பு முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. விசேடமாக, மகளிர் மற்றும் பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் சம்பந்தமாகவும், அவர்களின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பிலும் இரு தரப்பு அமைச்சர்கள் மத்தியிலும் கலந்துரையாடப்பட்டன.

இதுதவிர, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற கால் நடைகள் மற்றும் நலன்புரி வேலைத் திட்டம் தொடர்பிலும் விசேட கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றுள்ளன. கால் நடைகள் மற்றும் நலன்புரி விடயத்தில் விசேட கவனம் எடுத்து வரும் அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம், அமைச்சர் மேனகா, இது குறித்தும் தனது விரிவான கருத்துக்களை இதன்போது முன் வைத்துள்ளார்.

கால் நடைகளுக்கான பாதுகாப்பு, அவற்றின் பராமரிப்பு, அவற்றை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதியுதவிகள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்த ஆலோசனைகளும் இக் கலந்துரையாடலின்போது முன் வைக்கப்பட்டுள்ளன. இறுதியில், அமைச்சர் பைஸர் முஸ்தபா, அமைச்சர் மேனகா காந்தி ஆகியோருக்கு இடையில், இலங்கை - இந்திய நட்புறவுகளை மேலும் வளர்த்துக் கொள்வது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டது. இலங்கையில் தற்போது நிலவும் நல்லாட்சியுடன் இந்தியா தொடர்ந்தும் தனது நல்லெண்ணங்களை வலுப்படுத்திக் கொள்ளும் என்று, இதன்போது அமைச்சர் மேனகா காந்தி, அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் உறுதியளித்தார்.



மக்கள் திலகம் எம். ஜி.ஆர். இன் 100ஆவது ஜனனதின விழா, யாழ். மாவட்ட சர்வோதயம் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். சவ்வோதயம் மண்டபத்தில் நடைபெற்றது. 120 கலைஞர்களுக்கு கலைமாணி கௌரவத்துக்கான எம்.ஜி.ஆர். விருதுகளும் வழங்கப்பட்டன. இதன் போது நிகழ்வுக்குப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஏ. நடராஜன் முதல் விருதினை கவிஞர் எம்.எஸ். தாஜ்மஹானுக்கு வழங்குவதையும் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் நிகழ்வுக்கு தலைமை வகித்த தனேந்திரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# மாடிப்படியிலிருந்து விழுந்து ஒன்றரை வயது குழந்தை பலி



ஒன்றரை வயது நிரம்பிய சிறுமி ஒருவர் தனது வீட்டின் பாதுகாப்பற்ற மாடிப்படியிலிருந்து வழுக்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று திம்புள்ள பத்தனை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை ரொசிட்டா பகுதியில் இந்தச் சம்பவம் கடந்த புதனன்று இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

கமலதாசன் சீதையம்மாள் ஆகியோரின் இரண்டாவது புதல்வியான வஸ்மிளா என்ற ஒன்றரை வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின் போது தாய் மற்றும் பாட்டி வீட்டில் இருந்துள்ளதுடன் அவர்கள் வேலை செய்துக் கொண்டிருந்த வேளை இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக பாதிப்புக்குள்ளான சிறுமி டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று கொண்டிருக்கும் போதே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை திம்புள்ள, பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**புனித உம்றா**
மார்ச் / ஏப்ரல் உம்றா
இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் மார்ச் 23ம் (March 23rd ) திகதி குழு பயணம்.
April விடுமுறையில் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் ஏப்ரல் 06ம் | 11ம் | 13ம் | 20ம் | 27ம் திகதிகளில் குழு பயணம்.
நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி, நிறைந்த சேவை, நேர்த்தியான வழிகாட்டல் என சொல்வதை செய்யும், செய்வதை சொல்லும் எம்மோடு உம்றா பயணிக்க இப்பொழுதே பதிவு செய்து கொள்ளுங்கள்.
இறுதி நேர சிரமத்திலிருந்து விடுபட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.
அல்ஹாஜ் அமீருல் அன்வர் - 0777667152
அல்ஹாஜ் சையாப் அன்வர் - 0775046995
அல்ஹாஜ் ஜாபீர் (பாணந்துறை) - 0772928093
அல்ஹாஜ் அலியார் (காத்தான்குடி) - 0779598375
அல்ஹாஜ் சபீக் (ஓட்டமாவடி) - 0778020300
அல்ஹாஜ் முத்தலிப் ( பதுளை) - 0777947008
அஸ்ஸெய்யது பலுல்டீன் மௌலானா (நீர்கொழும்பு) - 0773110589
அல்ஹாஜ் மவ்லவி அப்துல் காதர் (சம்மாந்துறை) - 0713331026
அல்ஹாஜ் ஹனீபா (தோப்பூர்) - 0771971646
எம்.எம்.ஏ.றஹ்மி மாஸ்டர் (மாதறை) - 0773732124
அல்ஹாஜ் ஹபீல் (வெலிகம) - 0776627793
Safra Travels & Tours (PVT) Ltd
FLG -4 Dias Place,Gunasinghapura,Colombo-11.
Tel : (0094)0112-335699 / 0112335043 Fax : (0094) 0112-335043
E-Mail:- Safra_travels@yahoo.com
"Our Service includes AIR-TICKETING | TOURS | HOTELS | VISA | TRANSPORT Specialist in Hajj & Umrah Tours".

**முஅத்தின் தேவை**
வெளிப்பன்னை பஸார்
ஜும்ஆப் பள்ளிக்கு முஅத்தின் தேவை.
தொடர்பு கொள்க
0777242149

**சேப்வே ட்ரவல்ஸ்**
2017 புனித உம்றா
29 வருட ஹஜ் உம்றா சேவையில் சேப்வே ட்ரவல்ஸ் மூலம் பயணித்த ஹாஜிகளைக்கேட்டால் புரியும் சேப்வே ட்ரவல்ஸின் சேவைகள்...
இன்ஷா அல்லாஹ் எமது உம்றா குழு ஜனவரியில் பயணிக்க அனைத்து ஏற்பாடுகளையும் மிகச்சிறப்பாக செய்யப்பட்டிருக்கிறது.
எமது உம்றா குழு: March.10ம், 14ம் திகதி புறப்படும்.
ஏப்ரல் விடுமுறையில் ஏப்ரல் 06ம், 11ம், 12ம், 13ம் 14ம், 15ம், 16ம் திகதிகளிலும் பயணம்
மக்கா, மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி, விஷேட உணவு, சொகுசு போக்குவரத்து, அனுபவமுள்ள வழிகாட்டி உட்பட அனேக வசதிகள். சேப்வே ட்ரவல்ஸ் மூலம் உம்றா பயணிக்க விரும்புவோர் இறுதி நேர சிரமத்திலிருந்து விடுபட இன்றே தொடர்புகொள்ளுங்கள்.
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அழையுங்கள்:
Alhaj M.R.M. Farook J.P. - 0777660637
Alhaj Fazrin Farook - 0777444333
IATA ACCREDITED AGENT
SAFEWAY TRAVELS & TOURS (PVT) LTD.
No:8A, Vajira Road, Bambalapitiya, Colombo - 04. Tel:0115 238528 -32
E mail: info@safewaylt.com WEB :www.safewaytravelsandtours.com
SAFEWAY TRAVELS காரியாலயம் # 228, Grandpass, Colombo - 14 இலிருந்து No:8A, Vajira Road, Bambalapitiya, Colombo - 04. இடம்மாற்றப்பட்டுள்ளது

**தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடம் (பெண்கள் பிரிவு)**
பறகஹதெனிய.
எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவின் பேரருளால் முன்மாதிரிமிக்க, ஸாலிஹான குடும்பத் தலைவிகளை உருவாக்க வேண்டும் என்ற நோக்குடன் சகல வசதிகளையும் உள்ளடக்கியதாக புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இஸ்லாமியப் பெண்கள் கலாபீடத்திற்கு புதிய மாணவிகளை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பதாரிகள் பின்வரும் அடிப்படைத் தகுதிகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- 01.04.2017 இல் 17 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
- க.பொ.த. (சா.த) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்.
- அல் குர்ஆனைத் திறமையாக ஓதத் தெரிந்திருத்தல்.
விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது சுய விலாசமிடப்பட்ட 9' x 4' அளவிலான காகித உறைகளை (Envelope) கீழ்காணும் முகவரிக்கு அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவுத் திகதி 15.03.2017
DHARUTH THOWHEED ASSALAFIYYA INSTITUTE
LADIES UNIT
PARAGAHADENIYA-60071

நவமணி
NAVAMANI WEEKLY
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
05TH MARCH 2017 - SUNDAY

# முஸ்லிம் ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் முஸ்லிம் சமூகம் பலப்படுத்த வேண்டும்

**அநேகரின் வேண்டுகோளுக்கிணங்கவும் காலத்தின் தேவை கருதியும் கடந்த புதனன்று (01.03.2017) வெளியான ஆசிரியர் தலையங்கம் மறுபிரசும் செய்யப்படுகின்றது.**

முஸ்லிம் ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பணக்காரர்கள் அல்லர். பெரும் தொழிலதிபர்கள் அல்லர். ஆனால் பலருடைய விமர்சனத்தையும் பெற்று, இந்தப் பணியை இந்த நாட்டிலே செய்கிறார்கள் என்றால் அவர்கள் எமக்கு கிடைக்கப்பெற்றிருக்கும் அருள் என்று நினைக்கிறேன்.

அண்மையில், அரநாயக்க வில்பொலையில் நடைபெற்ற, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின், மாணவர்களுக்கான ஊடக செயலமர்வின்போது அஷ்ஷெய்க் எஸ்.எல். நௌபர் (கபூரி) தெரிவித்த கருத்தையே நாம் மேலே மேற்கோள் காட்டினோம். இந்த நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு பாரிய உண்மையை அவர் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

இன்று உலகளவில் ஊடகத் துறை என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிலையில் இருப்பதனால், ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு சமூகமும், ஊடகத் துறையில் தம்மைப் பலப்படுத்திக்கொள்வதற்கு போட்டிபோட்டுக் கொண்டு செயற்படுவதை நாம் காண்கிறோம்.

மலேசியாவின் முன்னாள் பிரதமர் மஹாதிர் முஹம்மத் தெரிவித்திருந்த ஒரு கருத்து, இதனை இன்னும் வலியுறுத்துகின்றது. அதாவது, 19 ஆம் நூற்றாண்டில் கப்பல் படை வைத்திருந்தவர்கள் உலகை ஆண்டனர். 20 ஆம் நூற்றாண்டில் காலாட் படை வைத்திருந்தவர்கள் உலகை ஆண்டனர். ஆனால், 21 ஆம் நூற்றாண்டில் ஊடகங்களை வைத்திருப்பவர்கள் உலகை ஆள்கிறார்கள் என்று மஹாதிர் முஹம்மத் குறிப்பிட்டிருந்தார்.

மஹாதிர் முஹம்மதின் கருத்தை இன்று நாம் நிதர்சனமாகக் காண்கிறோம். அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், கட்டார் போன்ற ஜாம்பவான்கள் சர்வதேச ஊடகங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இவர்கள் இன்று உலக மக்களின் கருத்தை வடிவமைக்கிறார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரையில், சிறுபான்மை சமூகமான முஸ்லிம்களுக்காக வெளிவரும் பத்திரிகைகள் மிகவும் குறைவானதாகும். ஓரிரு தினசரிகளும், சில மாதாந்த சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் மட்டுமே வெளிவருகின்றன. இவையும் பெரும் நிதிச் சிக்கல்களுக்கு மத்தியிலேயே இயங்கி வருகின்றன.

முஸ்லிம் சமூகம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து, முஸ்லிம் சமூகத்தை விழிப்பூட்டி, அந்த விடயங்களை உரிய இடங்களுக்கு கொண்டு செல்லும் பணியை முஸ்லிம் ஊடகங்கள் செய்கின்றன. உண்மையில், முஸ்லிம் ஊடகங்கள் முஸ்லிம் சமூகத்தின் இருப்புக்கான ஒரு உத்தரவாதத்தை வழங்கி வருகின்றன என்றே சொல்ல வேண்டும்.

இவ்வாறான ஊடகங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி, அவற்றை வளர்ப்பதற்கு பங்களிப்பு வழங்க வேண்டியது முஸ்லிம் சமூகத்தின் கடமையாகும். ஊடக நிறுவனமொன்றை நடாத்திச் செல்வதென்பது பெரும் கடினமான ஒரு விடயம், செய்தி சேகரிப்பு, கட்டுரை வரைவு என்பதற்கப்பால், நிறுவனத்தை நடாத்தி செல்வதற்கு விளம்பரங்களும், போதிய விற்பனையும் அவசியமாகின்றன. முஸ்லிம் ஊடகங்கள் இந்த விடயங்களில் பலப்படுத்தப்பட வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் அவர் சார்ந்த சமூகம் மீது ஒரு பொறுப்பு உள்ளது. அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டியது வாசகர்கள் முதல் ஒவ்வொருவரதும் கடமையாகும். எனவே, முஸ்லிம் வியாபார நிறுவனங்களும், தனவந்தர்களும் இந்த விடயம் குறித்து மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளமையை, இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

முஸ்லிம் ஊடக நிறுவனங்கள் போன்றே, முஸ்லிம் ஊடகவியலாளர்களும் மிகுந்த சிக்கல்களுக்கு மத்தியிலேயே இயங்கி வருகின்றனர். அச்சுறுத்தல்கள் ஒரு புறமிருக்க, ஊடகத் துறையில் நின்றுபிடித்து, பணம் சம்பாதிக்கலாம் என்பது எல்லோராலும் சாத்தியப்படாத ஒரு விடயமாகும். ஆனாலும், சமூகம் மீது கொண்ட அக்கறையால் பலரும் ஊடகத் துறையில் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர். முஸ்லிம் சமூகம் இவர்களுக்கு நன்றிக்கடன்பட்டுள்ளது.

எனவே, ஒரு சிறுபான்மை சமூகம் என்ற வகையில், முஸ்லிம்களுக்கான ஊடகங்களையும், முஸ்லிம் ஊடகவியலாளர்களையும் பலப்படுத்த வேண்டியது முஸ்லிம் சமூகத்தின் பொறுப்பாகும். அதனைச் செய்வதற்கு முஸ்லிம் சமூகம் முன்வருமா?

---



லண்டனிலிருந்து
இர்பான் இக்பால்

# யார் இந்த இலங்கை முஸ்லிம்கள்? V



இலங்கையின் ஆதி கால வரலாற்றையும் அதன் பூர்வீகக் குடிகள் பற்றியும் அலச உதவும் பதிவுகளும், கதைகளும், கற்பனைகளும், இத்தீவில் பண்டைய காலத்தில் வாழ்ந்தோரைப் பல வகையினராகப் பிரிக்கின்றன.

இதில் மிகப் பிரபலமாக இயக்கர்கள், வேடர்கள், நாகர்கள், இடையர்கள், தேவர்கள் என பல்வேறு பெயர்கள் கொண்டு அவர்கள் அறியப்பட்டிருக்கிறார்கள்.

இயக்கர்கள் என்பார் - இயற்கையை வணங்கியோராகவும், பிறிதொரு வகையில் யக்கர்கள் அல்லது யக்ஷர்கள் என்று அறியப்பட்டோராகவும், இவர்களே பின்னாளில் தமிழில் ராட்சதர்கள் என்று அறியப்படுவோருமாக இருக்கலாம் என்று அறியப்படுகிறது. இதற்கான சாத்தியங்களும் இந்திய - இலங்கை சார் இதிகாச இலக்கியப் பதிவுகளில் காணப்படுவதனால், இலங்கைத் தீவில் இயக்கர்கள் என்றொரு பிரிவினர் இருந்தது உண்மையெனவும், அதற்கு சற்று மேலதிகமான விபரிப்பினைத் தர முயலும் பதிவுகளில் இவர்கள் உருவமற்றவர்கள் அல்லது மனிதர்களல்லாதவர்கள் (அரக்கர்கள்) என்றும் கூற விளைகின்றன.

இவ்வாறான விளக்கங்கள் எதுவாக இருந்தாலும் இயக்கர்கள் என்பார் இன்னது என்று வரையறுக்கப்படாத இயற்கையின் பெரு மூலத்தை வணங்கிய காரணத்தினால் இயக்கர்களாக அறியப்பட்டிருக்கலாம் என்று ஏற்றுக் கொள்ளலாம்.

நாகர்கள் என்பார் நாகத்தினை வணங்கிய பிரிவினராகவே இது வரை காலமும் பொது வரலாறு குறித்து வருவதனால் இவர்களையும் ஏதோ ஒரு வகையில் காரணப் பெயரினைத் தாங்கிய ஒரு இனத்தவராகவே ஏற்றுக்கொள்ள முடிகிறது. எனினும், நாகர்கள் குறித்து பின் வரும் நம் ஆய்வுகள் மூலம் மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

அதே போன்று இடையர்கள் எனும் காரணப் பெயர் கொண்டு அறியப்பட்ட இன்னொரு பிரிவினரைப் பற்றியும், வேடர்கள் என்றொரு பிரிவினர் அவர்கள் தொழில் சார்ந்த, கலாசாரக் காரணப் பெயர் கொண்டு அவர்களும் அழைக்கப்படுவதை நாம் அவதானிக்கிறோம்.

சுற்றி வளைத்து எவ்வாறு பார்த்தாலும், இலங்கையின் ஆதி குடிகளை சித்தரிக்கும் அத்தனை வரலாற்று ஆவணங்களும் அவர்களுக்கு 'காரணப் பெயர்களை' வழங்கியிருப்பதை எம்மால் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது.

இதனையே அடிப்படையாகக் கொண்டு, இந்நாளில் வாழும் பல சமூகத்தவர்கள் தம் ஆதி தொடர்புகளை தம் இந்நாள் பழக்க வழக்கங்களைக் கொண்டு தொடர்புபடுத்தி, அவர்களின் வழித்தோன்றல்களே தாம் எனக் கொண்டு தம் வரலாறுகளை தம் பின் வருவோருக்கு புகட்டிக்கொள்கின்றன.

எனினும், இதில் குறிப்பிட்டு நோக்க வேண்டிய இன்னொரு பக்கம் இருக்கிறது. அதாவது, இலங்கை ஆதி குடிகளுக்கான இப் பெயர்கள், விபரிப்புகள் அனைத்துமே பெரும்பாலும் இந்திய இதிகாச இலக்கியங்களான இராமாயணம் , மகாபாரதம் மற்றும் இலங்கை இதிகாச இலக்கியங்களான தீபவம்சம், மகா வம்சம் போன்றவற்றிலிருந்தே உருவெடுக்கின்றன.

மகானாம மகாதேரர் என்பாரால் கி.பி 5ஆம் நூற்றாண்டில் தொகுத்தெடுக்கப்பட்ட மகாவம்சமே முன்னைய பதிவுகளின் முழுமையான வடிவமாக இருப்பதனால், இலங்கைத் தீவின் பெரும்பான்மையான வரலாற்றுச் சான்றுகளை இங்கிருந்து தேடுவதைத் தவிர வேறு வழியில்லாத நிலைக்கு வரலாற்று ஆசிரியர்கள் தம்மைத் தாமே வரையறுத்துக் கொள்கிறார்கள்.

நாம் ஏற்கனவே அறிந்து கொண்டது போன்று கி.மு 3-4ம் நூற்றாண்டு அளவிலான வரலாற்றுச் சம்பவ, கற்பனைக் கலப்புகளையே தீபவம்சமும், அதற்கு உறுதுணையாக இருக்கும் இராமாயண, மகாபாரத இலக்கியங்களும் தாங்கி வருவதனால், சம காலத்தின் உலக நிகழ்வுகளை விஞ்ஞான ரீதியாக எடுத்து நோக்கும் போது இவை புராண நம்பிக்கைகளாக மாத்திரமே பார்க்கப்பட முடியும்.

ஏனெனில், மேற்குலகில் இதே சம கால கட்டத்தில் மனித நாகரீகமும் வளர்ச்சியும் வேறு நிலையை' அடைந்திருப்பதை இன்றைய தொழிநுட்பங்கள் கொண்டு யார் வேண்டுமானாலும் அறிந்து கொள்ளலாம்.

எனவே, புராண நம்பிக்கைகளே நமக்குக் கிடைக்கும் வரலாற்றுச் சான்றுகளாகப் பார்க்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் நம்மிடையே மலிந்து கிடக்கிறது.

இதனடிப்படையில் வைத்துக்கொண்டு நான் மேற்கோள்காட்ட வந்த விடயத்தினை எடுத்து நோக்கும் போது, நம் தீவின் பூர்வீக வரலாறு என்பது பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு 'நம்பிக்கை' சார்ந்த இடமாக மாறிக்கொண்டிருந்ததையும், சம காலத்தில் ஏதோ ஒரு பிரிவினர் எப்போதும் 'ஒரே நம்பிக்கையில்' வாழ்ந்து வந்ததையும் திறந்த மனதுடன் ஆராயும் யார் வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்ள முடியும்.

இதை மேலும் விபரிக்க, நம்பிக்கை அல்லது ஒரே நம்பிக்கை எனும் இரு விடயங்களை மாத்திரம் எடுத்து நோக்குவோம்.

இலங்கைத் தீவின் பூர்வீகக் குடிகளுக்கு வழங்கப்படும் பெயர்களில் பெரும்பாலும் அத்தனையுமே காரணப் பெயர்களாக இருப்பதை தெளிவாகக் கண்டு கொண்டோம். சில வேளைகளில் இக் காரணப் பெயர்கள் குறிப்பிட்ட கால கட்டத்தில் வழங்கப்பட்ட பெயர்களாகவும் இருப்பதைக் காணலாம்.

இதற்கு எடுத்துக் காட்டாக 'நாகர்கள்' என்று அழைக்கப்பட்டோரை எடுத்துக் கொண்டால், நாகத்தினை வழங்கும் பழக்கமானது பிராந்தியத்தில் இந்து மதத்தோடும் அல்லது அதன் பிரிவுகளில் ஒன்றோடும், பௌத்த மதத்தோடுமே மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருக்கிறது.

கௌதம புத்தரின் வருகைக்கு முன்னதாகவே கூட நாகர்கள் இலங்கைத் தீவில் வாழ்ந்தார்கள் என்று கூறிப் பெருமைப் படுவோரும் இருக்கிறார்கள்.

மணிமேகலை மற்றும் மஹாவம்ச குறிப்புகளின் படி நாகர்கள், அதாவது நாகத்தைக் கடவுளாக வணங்கும் வழக்கமுடையோர் கி.மு 6 - கி.மு 3ம் நூற்றாண்டு கால கட்டத்தில் இலங்கையில் அதுவும், பெரும்பாலும் கரையோரங்களில் வாழ்ந்ததாக அறியப்படுகிறது.

இதில் ஒரு பகுதியினர் தமிழ் மொழியைப் பேசியதாகவும், எனவே தமிழர்களின் பூர்வீகம் அப்போதே இருந்திருக்கலாம் என்றும் வாதிடும் ஒரு சில தமிழ் வரலாற்றாசிரியர்கள் இருந்தாலும் கூட, பெரும்பாலும் ஆரியச் சக்கரவர்த்தியின் பின் வந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் (கி.பி 12) சந்ததிகளாக மாத்திரமே தம்மைத் தொடர்பு படுத்த முனைவதால் சைவத் தமிழர்கள் இலங்கைத் தீவின் பூர்வீகத் தொடர்புகளிலிருந்து தம்மைத் தாமே அறுத்துக் கொள்கிறார்கள்;.

பிராந்திய வழக்கு, வரலாற்றுப் படி நாகர்கள் இக்கால கட்டத்தில் வாழ்ந்தமை உறுதி செய்து ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

எனினும், இயக்கர்கள், தேவர்கள்,வேடர்கள், இடையர்களின் வரலாறோ இவர்களுக்கும் முன்னையதாக இருப்பதனால் நாக வழிபாடு என்பது இன்னொரு இடத்திலிருந்து, பெரும்பாலும் தென்னிந்தியாவிலிருந்து அல்லது உலகின் வேறொரு பகுதியிலிருந்து இலங்கைத் தீவிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட பழக்கமாக இருப்பதற்கான வாய்ப்புகளே அதிகம் காணப்படுகிறது.

நம்பிக்கை என்பது மனித மனம் ஏற்றுக்கொள்வதிலும், திருப்திப்படுவதிலும் தங்கியிருப்பதனால், நாகத்தினை வழிபடுவதனால் தமக்கு நன்மையெனக் கருதிய பழங்குடியினரை அன்றும் தடுப்பார் யாரும் இருந்திருக்கப்போவதில்லை, மாறாக ஒரு வேளை தாம் வணங்கும் கடவுளுக்கு இவ்வாறான 'சக்தி' தான் இருந்திருக்க வேண்டும் எனக் கருதிய வரையறைக்குள் தம் சிந்தனைகளை வளர்த்துக் கொண்ட சாராருக்கு இது போதுமானதாகவும், திருப்திகரமானதாகவும் அமைந்திருக்கலாம்.

எனினும், இவர்களுக்கு முன்பாகவே மேற்சொன்ன வேறு பிரிவினர் ஆதி குடிகளாக இருந்திருக்கும் உண்மையை ஏற்றுக்கொண்டு, இவர்களும் ஆதி குடிகளிலிருந்து உருவான இன்னொரு பிரிவினராக மாத்திரமே பார்க்கப்பட வேண்டும்.

இன்றளவும் கூட, இலங்கைத் தீவில் இவ்வழக்கம் நைனா தீவு உட்பட சில பகுதி மக்களிடம் காணப்படுகிறது.

இடையர்கள் பற்றிக் குறிப்பிடும் போது, மத்திய கிழக்குப் பகுதிகளின் வரலாற்றில் இவர்களுக்குக் காணப்படும் முக்கியத்துவம் நம் பிராந்தியத்தில் இல்லையெனக் கூறலாம். அந்த வகையில், இடையர்கள் என்பார் ஏதோ ஒரு கால கட்டத்தில் இலங்கைத் தீவின் பூர்வீகக் குடிகளோடு கலந்து கொண்டவர்களாக இருக்கலாம் அல்லது, இயற்கையாகவே அவ்வாறு நம் பூர்வீகக் குடிகளில் ஒரு பகுதியினர் உருவாக ஆரம்பித்திருக்கலாம்.

உலக வரலாற்றின் முக்கியத்துவத்தைக் எடுத்து நோக்கும் போதும், நம் தீவின் பால் மத்திய கிழக்கு மக்களில் ஒரு பகுதியினருக்கு இருந்திருக்கும் ஆர்வத்தையும், அக்கறையையும் அலசும் போதும், அதே வேளை நம்மிடையே காணப்படும் ஒரு சில வரலாற்றுச் சான்றுகளை எடுத்து நோக்கும் போதும் கூட நம் தீவில் கலந்திருக்கக்கூடிய இக் கலாச்சாரத்தின் பின்னணியிலும் 'நம்பிக்கை' சார்ந்த விடயங்கள் முக்கிய பங்கினை வகித்திருக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

இடையர்களைத் தமிழில் 'கோனா' என்றும் குறிப்பிடுவார்கள்.

பண்டைக் கால தமிழ் இலக்கியங்களிலும் கோனார் பற்றிய குறிப்புகள் காணப்படுவதோடு, இன்றளவும் தமிழகத்தின் முக்கிய பிரிவினருள் ஒன்றாக இவர்கள் காணப்படுகிறார்கள், அங்கே இவர்களுக்கு யாதவர்கள் எனும் பெயரும் உண்டு.

உலக இடையர்களின் பொதுப் பழக்க வழக்கங்களுடன் உடன்பட்டு வாழ்ந்த இவர்களும், தம் பிராந்திய 'கடவுள் நம்பிக்கைகளில்' ஏதோ ஒன்றைப் பின்பற்றியவர்களாகவே இருப்பதைப் பார்க்கும் போது, 'நம்பிக்கை' தொடர்பான நமது அலசலும் மேலும் வலுவடைகிறது.

கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட காலத்தில் மத்திய கிழக்கின் இடையர்கள் கிறிஸ்தவர்களாக இருக்க, தமிழக கோனார் சமுதாயம் தம்மைக் கிருஷ்ணரின் பரம்பரையினராகவே கருதி, வைணவ வழியைப் பின்பற்றி வாழ்கிறார்கள்.

இதிலும் குறிப்பாக, இந்துப் புராணங்கள் தம் ரிஷிகளில் பலர் இடையர்கள் என்று சாட்சி கூறுவதைக் கொண்டு, நான் ஏற்கனவே குறிப்பிட்டவாறு இவை பின் நாளில் உருவான 'காரணப் பெயர்களாக' இருக்கலாம் எனும் சந்தேகத்துக்கும் தெளிவினைக் கண்டு கொள்ளலாம்.

எனவே இலங்கையிலும் இந்தியாவிலிருந்தோ அல்லது மத்திய கிழக்கிலிருந்தோ அதுவும் இல்லையெனின் இந்தியா ஊடாக மத்திய கிழக்கிலிருந்தோ இடையர்களின் வரவு இருந்திருக்கக்கூடிய வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கின்றன. அவ்வாறு வருகை தந்தவர்கள் இத்தீவின் பூர்வீகக் குடிகளிடம் காணப்பட்ட 'ஏக இறை நம்பிக்கை' அல்லது 'பல கடவுள் நம்பிக்கை' கொண்ட ஏதோ ஒரு பிரிவினரோடு கலந்திருப்பார்கள்.

இந்நிலையில் வைத்து, மகாவம்சம் திட்டமிட்டு மறைத்த இலங்கை மன்னன் ஒருவன் பற்றிய சிறு குறிப்பை நாம் பார்க்க விளைகிறோம்.

குருநாகலை இராச்சியத்தில் ஆட்சி புரிந்த வத்ஹிமி ராஜா எனும் மன்னன் ஒருவன் பற்றி நம்மில் சிலர் அறிந்தும், பலர் அறியாமலும் இருக்கிறோம். எனினும், அவர் தந்தை முதலாம் புவனேகபாகு பற்றி இலங்கை வரலாற்றுப் புத்தகங்களும், பாடப்புத்தகங்களும் ஆகக்குறைந்த அளவுக்காவது பிரஸ்தாபிப்பதால் அவரது பெயரையாவது நாம் ஓரளவுக்கு அறிந்திருக்கிறோம்.

முதலாம் புவனேகபாகுவிற்கும் அவர் படைத்தளபதியொருவருடைய மகளுக்குமான மண உறவில் பிறந்தவரே வத்ஹிமி ராஜா என்றும், இவர் ஒரு முஸ்லிமாக இருந்ததாகவும் வரலாற்று நம்பிக்கை நிலவுகிறது.

எனினும், இதே புவனேகபாகுவின் சிங்கள உறவு முறையில் முடிக்குரிய மன்னனாகிய 3ஆம் பராக்கிரமபாகு வத்ஹிமி ராஜாவின் கண்களைத் தோண்டி அவரைக் குருடாக்கியதன் மூலம் நிரந்தரமாக அரச உரிமையை இழக்கச் செய்ததாகவும், இந்த பதிவுகளுக்கான மகாவம்ச ஓலைகள் திட்டமிட்டே நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக கற்பனைக் கதைகள் உள்ளீடு செய்யப்பட்டதாகவும் ஆங்கிலேய காலத்தில் மொழிபெயர்ப்பாளராகவும் இலங்கை அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்தவராகவும் கருதப்படும் முதலியார் விஜயசிங்க குறிப்பிடுகிறார்.

இப்படிக் குருடாக்கப்பட்ட 2ஆம் புவனேகபாகு மன்னனிற்கு கோனார் என்றொரு பெயரும் உண்டு.

எனினும், இது 'அல்-லங்கார் கோனார்' அதாவது 'லங்காவின் கோன்' , இலங்கையின் அரசன் என்று குறிப்பிடப்படுவதற்காக பின் நாளில் உபயோகிக்கப்பட்ட சொல்லாகக் கூட இருக்கலாம். ஆயினும் 14ஆம் நூற்றாண்டின் கடலோடி இப்னு பதூதா இலங்கைக்கு வந்தபோது அல் கோனார் என்பாரை சந்தித்ததாக விளக்கும் குறிப்புகளில் இவர்கள் 'அலகேஸ்வராக்கள்'; என்ற பதம் கொண்டு சரித்திர ஆசிரியர்கள் விளிக்கிறார்கள்.

அதனடிப்படையில், இரண்டாம் அலகேஸ்வரர் என்று அறியப்படும் இரண்டாம் பராக்கிரம பாகு மன்னன் அடிப்படையிலேயே ஒரு முஸ்லிமாக இருந்ததாகவும் குறிப்பிடும் வரலாற்று ஆசிரியர்கள் பண்டைய சிங்கள மன்னர்களிடம் காணப்பட்ட பௌத்த மதப் பின்னணித் தொடர்புகளற்ற தனித்துவத்தைப் பேணிய அலகேஸ்வராக்கள் நிச்சயமாக சிங்கள மன்னர்களாக இருக்கவில்லை என்பதை எடுத்துக்கூறுவதோடு அவர்கள் முஸ்லிம்களாகவே இருந்தார்கள் என்றும் எடுத்துக் கூறுகிறார்கள்.

ஏனெனில், அக்கால கட்ட பௌத்த மன்னர்கள் தாம் புத்தரின் போதனைகளைப் பின்பற்றுவோர் என்பதைக் குறிக்க, தம் பெயர்களுக்கு முன்னால் சிறி சங்க போதி எனும் அடைமொழியைப் உபயோகிக்கும் பழக்கமுடையவர்களாக இருந்தார்கள்.

இப்போது இந்த அலகேஸ்வராக்கள் என்று கூறப்படுவோர் யார்? அவர்கள் எங்கிருந்து வந்திருப்பார்கள் என்று அலசும்போது, இவர்களைத் தமிழில் 'அழகக்கோன்' எனும் பெயர் கொண்டு வரலாறு குறிப்பிடுவதையும், இவர்களில் பெரும்பாலானோர் தென்னிந்தியாவிலிருந்து, குறிப்பாக மலையாளக் கரையோரங்கள், காஞ்சிபுரம் போன்ற பகுதிகளிலிருந்து 13ஆம் நூற்றாண்டளவில் வந்தவர்களாகவும், அதே நேரம் இன்றைய இலங்கையின் தலை நகரான சிறி ஜயவர்தனபுர கோட்டேவை நிறுவியர்களே இவர்கள் தான் என்றும் கூறப்படுகிறது.

அது மாத்திரமன்றி அன்றைய யாழ்ப்பாண இராச்சியத்தின் கெடுபிடிகளுக்கு எதிராகப் போர் புரிந்தவர்களும் இவர்களே என்று இலங்கையின் வரலாற்றுக் குறிப்புகள் எடுத்தியம்புகின்றன.

ஆரம்பத்தில் காஞ்சிபுரத்தில் உருவான முஸ்லிம் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த அழகக்கோன் வம்சாவழியினர் கம்பளை இராச்சியத்தில் கிடைத்த நற்பேறுகளின் பலத்துடன் பின் நாளில் அரச வம்சமாகவே உருவெடுத்திருக்கிறார்கள் என்று நம்பக்கூடியதாக இருக்கிறது.

எனினும், இலங்கைத் தீவில் இன்றும் 'அழகக்கோன்' என்பது ஒரு சிங்களப் பெயராகவே பார்க்கப்பட்டு வருகிறது. இது ஒரு வேளை பின் நாளில் உருவான 'கடவுள் நம்பிக்கை' அடிப்படையிலான மாற்றங்களாகக் கூட உருவெடுத்திருக்கலாம்.

இதை சற்று ஆராயும் போது கோனார்களின் இறுதி மன்னன் என அறியப்படும் வீர அழகேஸ்வரா பற்றி சிறிது அலசும் தேவை வருகிறது.

கி.பி 1387 முதல் 1391 வரை ஆட்சியிலிருந்த வீர அலகேஸ்வரா ( இவர் பெயர் பின் நாளில் வீர அழகக்கோன் அல்லது சுருக்கப்பட்ட வீரக்கோனாக மாறியிருக்கலாம், இந்நாளில் வீரக்கோன் என்பது பிரபலமான ஒரு சிங்களப் பெயராகும் ) தமது குடும்ப உட்பூசல் காரணமாக பதவி இழந்து, பின் வெளிநாட்டுத் தொடர்புகள் மற்றும் உதவியுடன் கி.பி. 1399 அளவில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுகிறான்.

இவனது ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற இன்னுமொரு முக்கியமான விடயத்தினைப் பற்றி நம்மில் பெரும்பாலானோர் அறிந்ததில்லை அல்லது அறிய முயற்சி செய்ததும் இல்லை என்றும் கூறலாம்.

வெளிநாட்டினர் ஆட்சிக்கும் முந்திய காலத்தில் இடம்பெற்ற இச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த விடயம் இலங்கைச் சோனகர்களின் வரலாற்றுத் தொடரில் ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்தும் கூட அது சரியான முறையில் எம் சமூகத்திடம் இது வரை கொண்டு சேர்க்கப்பட்டதா என்பது சந்தேகமே.

சோனகர்கள் அதாவது Moors எனத் தாம் நம்பியவர்களின் கடல் வர்த்தக ஆதிக்கம் மற்றும் இலங்கைத் தீவின் ஆதிக்கத்தினை முற்று முழுதாக அழிக்கக் கங்கணம் கட்டிய போர்த்துக்கீயருக்கும் முற்பட்ட இந்நிகழ்வு மிக முக்கியமானதாகும்.

சீனக் கடல் வர்த்தகத்தின் முன்னோடியும், பிரபலமான கடற்தளபதியுமான Zheng He (1371-1433) யின் இலங்கை வருகை பற்றி நம்மில் மிகச் சிலரே அறிந்திருக்கிறோம்.

Zheng He இலங்கைத் தீவோடு எவ்வகையிலும் போர் புரிவதற்காக வரவில்லை, மாறாக வர்த்தக நோக்கத்தோடே வந்திருந்தது பின் நாளில் அவர் வரவு பற்றிய குறிப்புகள் அலசப்படும் போது தெளிவாகிறது. இதனடிப்படையில் Zheng He இத்தீவிற்கு கி.பி. 1400 அளவுகளில் மூன்று தடவைக்குக் குறையாமல் வந்திருக்கிறார்.

அதில் (கி.பி. 1411) மூன்றாவது தடவை அவர் வருகை தந்த போது ஏற்கனவே இரு தடவைகள் தம்மை அவமதித்து, வர்த்தகத் தொடர்புகளை மேற்கொள்ள மறுத்த இலங்கை அரசர்களிடம் தமது முந்தைய வருகைகளையும், தற்போதைய வருகையும் கூட சமாதான நோக்குடன் தான் இருந்தது என்பதைத் தெளிவுபடுத்தவும், அதே வேளை தாம் இலங்கை மக்களுக்கு நல்லெண்ண அடிப்படையில் வழங்க விரும்பும் பரிசில்கள், நன்கொடைகள், மரியாதை மற்றும் புரிந்துணர்வு தொடர்பான தமது நல்லெண்ணத்தை வெளிக்காட்ட ஒரு கல்வெட்டினைக் கொண்டு வருகிறார்.

இந்தக் கல்வெட்டினை Galle Trilingual Inscription என்று அழைக்கிறோம்.

1911 அளவில் கண்டுபிடிக்கப்பட்டு தற்போது கொழும்பு, தேசிய நூதனசாலை (Museum) யில் பாதுகாக்கப்பட்டு வரும் இக்கல்வெட்டானது நமக்கு, நமது சமூகம் மற்றும் என் தலைப்பு மீதான அழுத்தமான சில செய்திகளைத் தருகிறது.

தொடரும்...

■ நேர்காணல்: நுஸ்கி முக்தார்

# தமிழக முஸ்லிம்களிடம் ஒற்றுமை இல்லை

## தாவூத் மியா கான்



இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் ஸ்தாபக தலைவரான காயிதே மில்லத் முஹம்மத் இஸ்மாயில் சாஹிபின் பேரனும், சென்னை காயிதே மில்லத் கல்லூரியின் செயலாளருமான தாவூத் மியா கானின் இலங்கை விஜயத்தின் போது, நவமணிக்கு வழுங்கிய விசேட செவ்வி.

**கேள்வி:** காயிதே மில்லத் முஹம்மத் இஸ்மாயில் சாஹிபின் பின்னர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு என்ன நடந்தது?

**பதில்:** எனது பாட்டனாரான காயிதே மில்லதின் அரசியல் விவகாரங்களில் சிறு வயது முதலே நான் ஈடுபாடு காட்டி வந்வன். ஆனால், அவர்கள் காலமான தன் பின்னர் அந்த இயக்கம் ஒரு சில பதவிகளுக்காக சமரசம் செய்யபட்டிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அவரது மரணத்தின் பின்னர் சமூகம், அந்த இயக்கத்தை மொத்தமாக ஒதுக்கி விட்டது.

இந்த இயக்கம் அகில இந்திய ரீதியில் முஸ்லிம் சமூகத்துக்கும், இந்தியாவுக்கும் பெரும் பாதுகாப்பாக அமைந்திருந்தது. இந்த இயக்கத்தை காயிதே மில்லத் அந்த நிலையில் வைத்திருந்தார். இந்த இயக்கத்தை மீளவும் அதன் சிறந்த நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்பதே எண்ணம்.

**கேள்வி:** ஜெயலலிதாவின் மறைவு, தமிழ்நாட்டு அரசியலில் எவ்வாறான தாக்கத்தை செலுத்தியது?

**பதில்:** ஜெயலலிதா ஒரு பெரும் ஆளுமை. பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். போன்ற முஸ்லிம் விரோத சக்திகள் தமிழ்நாட்டில் வேரூன்றா செய்ததில் ஜெயலலிதாவின் பங்கு முக்கியமானது.

இந்தியா சமஷ்டி முறையில் இயங்குகின்றது. மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று இந்தியா இயங்குகின்றது. இவ்வாறான நிலையில், இந்தியாவின் சமஷ்டி முறைக்கு பங்கம் விளைவிக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும், ஜெயலலிதா ஆதரவு வழங்கவில்லை. கழுத்தில் கத்தியிருக்கும் நிலைக்கு அழுத்தம் இருந்தபோதும், அவர் அவ்வாறு செய்யவில்லை.

உதாரணமாக, ஜெயலலிதா காலமாவதற்கு இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னர் ஜி.எஸ்.டி. என்றொரு மசோதாவை மத்திய அரசு கொண்டு வந்தது. அந்த மசோதாவின்படி, மொத்த வரிப் பணமும் மத்திய அரசுக்குத்தான் செல்லும். இந்த மசோதாவுக்கு மற்றைய அரசுகள் தலைபணித்த போதும், ஜெயலலிதா அதற்கு தலைசாய்க்கவில்லை. இந்த திட்டமானது நம்மை மட்டுமன்றி, இந்த நாட்டின் சமஷ்டி முறையையே பாதிக்கின்றது என்பதால், இதனை ஏற்க முடியாது என்று ஜெயலலிதா கூறியிருந்தார்.

இந்த பா.ஜ.க. அரசு தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரில், இந்திய அரசியல் சாசனத்தின் 32 சரத்துக்களுக்கு மாற்றமான விடயங்களை நாட்டில் திணிக்க முற்படுகின்றது. ஒரே நாடு, ஒரே மதம், ஒரே கலாசாரம் என்று அந்தத் திட்டம் அமைந்துள்ளது. இந்த திட்டத்தின் மூலம் மனுதர்மத்தின் கொள்கைகளை பின் கதவு மூலம் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் திட்டத்தை ஜெயலலிதா நிராகரித்தார்.

ஆனால், ஜெயலலிதாவின் மரணத்தின் பின்னர், எல்லாம் மாறிப்போயுள்ளது. பிரதமர் ஒரு தவறான சட்டத்தைக் கொண்டுவந்தால், அவருக்கு நேராக நின்று, அதனை எதிர்க்கும் துணிச்சல் ஜெயலலிதாவுக்கு இருந்தது. அவரது மரணம் சிறுபான்மை மக்களுக்கும், நாட்டுக்கும் நஷ்டமாகும்.

**கேள்வி:** ஜெயலலிதாவின் மரணம் தொடர்பில் பல்வேறு முரண்பாடான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. உண்மையில் என்ன நடந்தது?

**பதில்:** இந்த விடயம் பற்றி உங்களுக்கு என்ன தெரிந்திருக்கிறதோ, அதுதான் நமக்கும் தெரியும். ஏனையோருக்கும் தெரியும். பத்திரிகைகளில் வந்த செய்திகளைத் தவிர வேறு எந்த செய்திகளும் மக்களுக்கு தெரியாது. ஜெயலலிதா என்ற ஆளுமை சிலரது கண்காணிப்பில் இருந்து, கடைசியில் அடக்கம் செய்யப்பட்டது. இதில் உண்மைகள் மறைந்திருப்பதாக நாமும் கருதுகிறோம். அந்த உண்மைகள் வெளி வரவேண்டும் என்பதுதான் எமது விருப்பமும்.

**கேள்வி:** தமிழ்நாட்டில் முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ள சவால்கள் என்ன?

**பதில்:** தமிழ்நாட்டு முஸ்லிம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். வேலைவாய்ப்பின்மை ஒரு முக்கியமான சவலாகும். தமிழ்நாட்டு முஸ்லிம்கள் பொருளாதார ரீதியாக பின்தங்கியிருக்கின்றனர். அதனை இல்லாமலாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால், அரசியல் ரீதியாக தமிழ்நாட்டில் ஒரு ஸ்திரத்தன்மை இல்லை. முஸ்லிம்களுக்கு மத்தியில் ஒற்றுமை இல்லாமை உணரப்படுகின்றது. வாராந்தம் ஒரு புது இயக்கம் உருவாகும் நிலை தமிழ்நாட்டு முஸ்லிம்கள் மத்தியில் நிலவுகின்றது. ஒரு சில இயக்கங்கள் மார்க்க ரீதியான இயக்கங்கள் நடத்துகின்றபோதும், அரசியல் ரீதியான முடிவுகளையும் எடுத்து வருகின்றனர். முஸ்லிம்களது உரிமைகளிலும், மார்க்க விடயங்களிலும் சமரசம் செய்து கொள்ளாத ஒரு தலைமை தேவைப்படுகின்றது. காயிதே மில்லத் போன்ற ஒரு தலைமை தேவைப்படுகின்றது.

**கேள்வி:** தமிழக அரசியலில் முஸ்லிம்களின் வாக்குகள் எவ்வாறான தாக்கத்தை செலுத்துகின்றது?

**பதில்:** 1946 இல் சுதந்திரத்துக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் நடந்த தேர்தலில் இரட்டை வாக்குரிமை முஸ்லிம்களுக்கு இருந்தது. 29 தொகுதிகளில் முஸ்லிம்கள் போட்டியிட்டு, 29 தொகுதிகளிலுமே வெற்றி பெற்றனர். அப்போது 5 மாநிலங்களை உள்ளடக்கிய மட்ராஸ் ராஜதானியின் எதிர்க்கட்சி தலைவராக காயிதே மில்லத் திகழ்ந்தார். 4 முதலமைச்சர்களை அவர் பார்த்திருக்கிறார்.

1967 தேர்தலின்போது, காங்கிரஸை வீழ்த்தி, தி.மு.கவை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு, காயிதே மில்லத் தலைமையிலான முஸ்லிம்கள்தான் 10 சதவீத வாக்கு வங்கியை வழங்கினர். பின்னர் பல முஸ்லிம் இயக்கங்கள் தோன்ற ஆரம்பித்தன. எனவே, இவர்களின் தலைமையின் கீழ் செல்லாமல், நேரடியாகவே தி.மு.க, காங்கிரஸ், கம்யூனிஸ்ட்டுக்களின் பின்னால் போகலாம் என்று முஸ்லிம்கள் சென்றார்கள். அவற்றில் உறுப்பினர்களானார்கள். எனவே, இப்போது இந்தக் கட்சிகளின் ஒரு தொகுதி முஸ்லிம் வாக்குகளும், முஸ்லிம் இயக்கங்களிடம் ஒரு தொகுதி வாக்குகளும் சிதறி உள்ள நிலையில், முஸ்லிம்களின் பலத்தை எவ்வாறு காட்ட முடியும்?

**கேள்வி:** சிறுபான்மையினருக்கு எதிராக திட்டமிட்ட செயற்பாடுகள் தமிழ்நாட்டிலும் இடம்பெறுகின்றனவா?

**பதில்:** முஸ்லிம் விரோத சக்திகள் மிகவும் பலமான முயற்சிகளை மேற்கொண்டவண்ணம்தான் உள்ளன. முஸ்லிம் விரோத சக்திகள் எனும்போது ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. போன்றவை மட்டுமல்ல. மாறாக, நம் நண்பர்கள் என்று நினைக்கும் இயக்கங்களிலும் இதே இந்துத்துவாத கொள்கைகளைக் கொண்டிருக்கும் நபர்கள் உள்ளனர்.

> முஸ்லிம் விரோத சக்திகள் மிகவும் பலமான முயற்சிகளை மேற்கொண்டவண்ணம்தான் உள்ளன. முஸ்லிம் விரோத சக்திகள் எனும்போது ஆர்.எஸ். எஸ்., பி.ஜே.பி. போன்றவை மட்டுமல்ல. மாறாக, நம் நண்பர்கள் என்று நினைக்கும் இயக்கங்களிலும் இதே இந்துத்துவா கொள்கைகளைக் கொண்டிருக்கும் நபர்கள் உள்ளனர்.

எனவே, வடநாட்டில் இருப்பது போன்று, தமிழ்நாட்டிலும் இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கு அவர்கள் தவறான வரலாற்றைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் வதந்திகளைப் பரப்புகின்றனர். இதற்கு எதிராக நாம் போராடிக்கொண்டிருக்க வேண்டும். இந்தப் போராட்டத்திற்கு நேர்மையான ஊடகவியலாளர்களும் பங்களிக்க வேண்டும்.

---

■ பா. மலரம்பிகை

# பெண்களின் பாதுகாப்பு?



சர்வதேச மகளிர் தினம் ஒவ்வொரு வருடமும் மார்ச் 8 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டாலும், பெண்களுக்கான பாதுகாப்பு எச்சந்தர்ப்பத்திலும் கிடைக்கின்றதா என்று பார்க்கும் போது அது கேள்விக்குறியாகவே உள்ளது.

நம் முன்னோர்களின் காலத்தை விடவும் தற்காலத்தில் பெண்கள் தமக்கென்ற ஒன்றை நிருபித்துக்கொள்வதற்காக சுயதொழிலையோ அல்லது அலுவலக வேலைகளிலோ ஈடுபடுகின்றார்கள். நம் நாட்டை பொறுத்தவரையில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுகின்றார்கள். தொழில் நிமித்தமாகவும், கல்வி விடயமாகவும், பிற தேவைகளுக்காகவும் பொது போக்குவரத்துக்களான பேருந்து மற்றும் புகையிரதங்களையே நாளாந்தம் பயன்படுத்துகிறார்கள்.

அதனடிப்படையில், இந்த பொது போக்குவரத்தில் பெண்களுக்கு தேவையான பாதுகாப்பு அல்லது இடையூறு அற்ற பயணம் கிடைக்கின்றதா அல்லது பெண்களின் பயணம் பாதுகாப்பானதாக என்று பார்க்கும் போது அது பெரும்பாலும் இல்லையென்றே கூறமுடியும்.

அந்தவகையில், 2015 ஆம் ஆண்டு இலங்கை ஐக்கியநாடுகள் சனத்தொகை நிதியத்தினால் நடாத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் முடிவுகளின் படி இலங்கையில் 90 சதவீதமான பெண்கள் பொதுப்போக்குவரத்து பேருந்துகளிலும் புகையிரதங்களிலும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

பொதுப்போக்குவரத்தின் போது பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுதலானது உலகளாவிய ரீதியில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையாக இருக்கின்றது. இது உடல் துஷ்பிரயோகம், வாய்மொழி மூலமான துஷ்பிரயோகம் ஆகியவற்றின் பல்வேறு படிநிலைகளில் இடம்பெற்று பாலியல் வல்லுறவுக்குக்கூட இட்டுச் செல்ல முடியும். பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் அடிப்படை உரிமையையும் சுதந்திரத்தையும் மீறுவதற்கு மேலதிகமாக இது பெண்கள் பொதுவாழ்வில், வேலைத்தளத்தில் மற்றும் கல்வியில் முழுமையான பங்களிப்பை வழங்க முடியாத பாதுகாப்பற்ற சூழலை ஏற்படுத்தவும் பங்களிக்கிறது.

பொதுப்போக்குவரத்து பெரும்பாலான இலங்கையர்களுக்கு பொருளாதார ரீதியில் சாத்தியப்படக்கூடிய வழிமுறையாக இருக்கின்றது. அத்தோடு அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய பொருளாதார செயன்முறையாகவும் இருக்கிறது. இருந்தாலும் பொதுப்போக்குவரத்து சேவையை பெற்றுக்கொள்வதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் ஏற்றத் தாழ்வு இருக்கிறது. குறைந்த வருமானம் ஈட்டும் வகுப்பை சார்ந்த பெண்கள் ஆண்களை விட அதிகமாக பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுகின்றார்கள். குடும்பப்பாரத்தின் பெரும்பகுதியை சுமக்க வேண்டியிருக்கும் பெண்கள் பொருளாதார ரீதியில் சாத்தியமாக உள்ள போக்குவரத்து மார்க்கத்தில் அடிக்கடி பயணம் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. இருப்பினும், பாலியல் துன்புறுத்தல் என்றால் என்ன என்பதை தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

### பாலியல் துன்புறுத்தல் என்றால் என்ன?

எந்தவொரு விரும்பத்தகாத பாலியல் ரீதியான தொடுகைகள், பாலியல் ரீதியான விண்ணப்பங்கள், பாலியல் ரீதியான வாய்மொழி மூலமான, உடலியல் ரீதியான செய்கை அல்லது ஒருவருக்கு அவமானம், வெறுப்பு, அசௌகரியத்தை ஏற்படுத்தக்கூடிய பாலியல் ரீதியான எந்தவொரு நடவடிக்கையும் பாலியல் துன்புறுத்தலாகும். இது அவ்வாறான ஒரு நிகழ்வையோ அல்லது தொடர்ச்சியான நிகழ்வுகளையோ உள்ளடக்கலாம். பாலியல் துன்புறுத்தலானது திட்டமிட்ட, மற்றவரின் விருப்பமின்றிய அல்லது வற்புறுத்தும் நடவடிக்கையாகும்.

பொதுப்போக்குவரத்தில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தலானது, வீடு, தொழில் செய்யும் இடம் மற்றும் பொதுவிடங்களில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தலின் ஒரு பகுதியே ஆகும்.

பொதுப்போக்குவரத்தில் இடம்பெறும் பாலியல் துன்புறுத்தலானது பெண்களையும் பெண் பிள்ளைகளையும் உடல் ரீதியாக, மன ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக பாதிப்பதுடன் அவர்களை பாரபட்சமாய் நடாத்தும் ஒரு கலாசாரத்துக்கும் இட்டுச்செல்கிறது.

இதேநேரம் குற்றவாளியின் குற்றம் நிரூபிக்கப்படுமாயின் ஐந்து வருடங்கள் சிறைத்தண்டனை அபராதம் விதிக்கப்படும். குற்றவாளி பாதிக்கப்பட்டவருக்கு நஷ்டஈடு வழங்குமாறு கூட விதிக்கப்படலாம்.

### 90 சதவீதமான பெண்களுக்கு பஸ்ஸில் பாலியல் தொல்லை

நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பொது போக்குவரத்தின்போது 90 சதவீதமான பெண்கள் பாலியல் தொல்லைகளுக்கு முகம்கொடுக்கின்றார்கள். அவர்களில் 4 சதவீதமானோரே பொலிஸாரின் உதவியை நாடிச் செல்கின்றனர். 50 சதவீதமான பெண்கள் வேலைக்கு செல்வதற்காகவும், 28 சதவீதமான பெண்கள் கல்விகற்க செல்வதற்காகவும், 20 சதவீதமான பெண்கள் பிற தனிப்பட்ட காரணங்களுக்காக பொது போக்குவரத்தினை பயன்படுத்துகின்றனர்.

பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பொதுப் போக்குவரத்தின் போது நடைபெறும் பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும். சமூகத்தை நாட்டை எப்படிப் பாதிக்கும் என்பது குறித்தும் அறிவூட்டப்பட வேண்டும். பொது மக்களுக்கான பிரசாரங்களையும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறாக சந்தர்ப்பங்களில் சகபயணிகள் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது குறித்த விழிப்புணர்வை ஊடகங்கள் தங்களுடைய பொது விவாதங்கள், கலந்துரையாடல்கள் மூலமாக ஏற்படுத்த வேண்டும். சமூக மாற்றத்திற்கான பிரசாரங்கள், தொலைக்காட்சி, வானொலி, செய்திப் பிரிவு, சமூக வலைத்தளங்கள் மூலமாக ஊடகங்கள் இதற்கு பங்களிக்க முடியும்.

### ஓட்டுனர், நடத்துனருக்கு விழிப்புணர்வு

பயணிகளால் ஏற்படுத்தப்படும் துன்புறுத்தல்களை தடுக்கும் அதிகாரம் கொண்ட முதல் நபர்கள் சம்பந்தப்பட்ட போக்குவரத்து மூலத்தின் ஓட்டுனரும் நடத்துனருமே ஆவர். சகபயணிகளின் இடையீட்டுக்கு மேலதிகமாக ஓட்டுனரும் நடத்துனரும் பயணிகளின் இருக்கைகளை மாற்றி வழங்குவது மூலமாக குற்றத்தை தடுக்க முடியும். அத்தோடு குற்றம் குறித்து முறையிடுதல், குற்றவாளியை பக்கத்தில் இருக்கும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லுதல் அல்லது குற்றவாளியை பேருந்து அல்லது புகையிரதத்தில் இருந்து அகற்றுதலும் அவர்களால் இயலும்.

### பெண்களுக்கு பாலியல் தொல்லையா? மௌனம் தேவையில்லை

பெண்களும் பெண்பிள்ளைகளும் பொதுப்போக்குவரத்தில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படும்போது பெரும்பாலும் மௌனமாகவே இருக்கிறார்கள். காரணம் இது பொதுப்போக்குவரத்தில் சகஜம் என்றே கருதுகின்றார்கள்.

விழிப்புணர்வு பிரசாரங்கள் மூலம் பொதுப்போக்குவரத்தில் பாலியல் துன்புறுத்தலானது இலங்கை குற்றவியல் சட்டத்தின்படி தண்டிக்கப்பட வேண்டிய கிரிமினல் குற்றம் என்பதும் அதை பற்றி வெளியிடுதலும் உதவி கோருதலும் ஒரு தனிநபரின் உரிமை என்பதும் பொதுமக்களிடம் எடுத்து சொல்லப்படவேண்டும்.

பாதிக்கப்படுபவர் அதற்கென ஏற்படுத்தப்பட்ட பொறிமுறைகளில் உள்ள உள்ளூர் அதிகாரிகளிடம் குற்றம் குறித்து முறையிடுவதை பாதுகாப்பாக உணர வேண்டும். எனவே, இனிவரும் காலங்களிலும் இவ்வாறு பெண்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பொது போக்குவரத்தில் பாலியல் தொல்லைகள் நிகழுமாயின் 119 என்ற இலங்கை பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து அறிவிக்கலாம் என்று பொலிஸ் திணைக்களமும் அறிவித்துள்ளது. நம் பாதுகாப்பு நம் கையிலேயே என்று ஒவ்வொரு பெண்ணும் நினைத்து தைரியத்துடன் எதனையும் முகம் கொடுத்தாலேயே இவ்வாறானவற்றிலிருந்து பாதுகாப்பு பெறலாம்.

பெண்கள் எந்த நேரத்திலும், எந்த சந்தர்ப்பத்திலும் தனியாக சென்று பாதுகாப்பாக வருகின்ற நிலை ஏற்படுகின்றதோ, அன்றே மகளிர் தினத்திற்கான அர்த்தம் கிடைக்கும்.



# அரசியல், இனவாத, வியாபார பொறிக்குள்
# தம்புள்ளைப் பள்ளிவாசல்

வஹக்கோட்டை
ஏ.ஸீ. ஏ. முனாஸ்

தம்புள்ளை ஹைரியா பள்ளிவாசலுக்கு எதிரான பேரினவாதிகளின் செயற்பாடுகள் தொடங்கப்பட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதியுடன் 5 வருடங்கள் சம்பூரணமாகின்றன. 2012 ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி தம்புள்ளை விகாராதிபதி சிறி சுமங்கல தேரரின் தலைமையில் இந்தப் பள்ளிக்கு எதிரான போராட்டம் தொடக்கி வைக்கப்பட்டது. அன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆவை நடத்த விடாமல் காடையர்கள் சகிதம் பள்ளிவாசலுக்குள் உட்புகுந்து புனித குர்ஆனை நெருப்பிலிட்டு மற்றைய பொருட்களை வெளியே வீசி பிரித் ஓதிய சம்பவம் அன்று ஜும்ஆவுக்கு வந்து ஜும்ஆ தொழாமல் சென்ற முஸ்லிம்களுக்கு இன்னும் நினைவிருக்கிறது. பொலிஸார் அன்று தொழவிடாமல் கலகத்தை அடக்கும் பொருட்டு மக்களை வெளியேற்றியதை இன்னும் யாரும் மறந்துவிடவில்லை. அன்று தொடக்கம் 5 வருடம் பூர்த்தியடைய உள்ள இந்த சூழ்நிலையில், பள்ளியை அகற்றுவதோடு, அதை வேறு இடத்தில் கட்ட விடாது நெருக்கடி கொடுக்கும் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. பள்ளிவாசல் தாக்கப்பட்டவுடன் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையில் 4 தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டன. அதில் அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் சம்பவத்தை கண்டித்து கையொப்பமிட்ட கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தல், தாக்குதல் நடத்தியவர்களை சட்டத்தின் முன் நிறுத்தக் கோரியமை, தம்புள்ளைப் பள்ளிவாசல் விடயத்தில் எல்லோரும் ஒன்று சேர்ந்து செயற்படுதல், பள்ளிவாசலை இடமாற்றக் கூடாது என்பன அவையாகும். ஆனால், அன்று ஒன்றும் நடக்கவில்லை. தீர்மானங்கள் கிடப்பில் போடப்பட்டன. பள்ளியைத் தாக்கியவர்களை அன்று சட்டத்தின் முன் நிறுத்தாததால் 5 வருடங்களாகியும் அவர்கள் சுதந்திரமாய் நடமாடி நெருக்கடிகளை கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களது நோக்கம் இனவாதத்தைத் தூண்டி தம்புள்ளையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் சுமார் 116 முஸ்லிம் வியாபார ஸ்தாபனங்களை முடக்குவதாகும்.

தம்புள்ளைப் பள்ளிவாசல் சரித்திரத்தைப் பார்க்கும் போது மாத்தளையிலிருந்து அநுராதபுரம் வரை வியாபாரப் பொருட்கள் மாட்டுக் வண்டிகள் மூலம் கொண்டு செல்லும் போது ஓலைக்கிடுகினால் கட்டப்பட்ட வணக்கஸ்தலம். காணியை உதுமான் சாஹிபு முஹம்மட் இப்ராஹீம் என்பவர் இனாமாகத் தந்துள்ளதோடு, காணி பணம் கொடுத்து வாங்கப்பட்டுள்ளது. முஹம்மட் கரீம் முஹம்மட் கபீர், முஹம்மட் கரீம் சித்தி லரீஸா, சித்தி ஹபீபா ஆகியோரின் காணி வாங்கப்பட்டதோடு, பள்ளிக்கு முன்பாக உள்ள கடைகள் ஒன்றும் உதுமான் சாய்புவின் மகளாலும் மாத்தளை உக்குவலை சரீப்தீனின் மகனாலும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆரம்ப பள்ளியில் கதீபாக சிங்கள மருந்து விற்பனையில் இருந்த ஹனீபாலெப்பை பணிபுரிந்துள்ளார்.. 1902இல் வியாபார நோக்கில் வந்த கிழக்கிலங்கை காத்தான்குடி உதுமான் சாகிபு கச்சி முஹம்மது தலைமையிலான ஆட்கள் மூலம் தம்புள்ளையில் வணக்க வழிபாடு ஆரம்பித்துள்ளதை சான்றிதழ்கள் காட்டுகின்றன. 1960 இல் தம்புள்ளை கண்டலம சந்தியில் மஸ்ஜிதுல் ஹைரியா பள்ளிவாசல் பெயர் எதுவுமின்றி சிறிய அறைகளால் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் அதன் பிறகு விரிவுபடுத்தப்பட்டது.

1983ஆம் ஆண்டுக்குப் பிறகு கம் உதாவ வந்ததோடு, தம்புள்ளை மாற்றமடையத் தொடங்கியது. அதன் பிறகு பொருளாதார மத்திய நிலையம், மாவட்ட வைத்தியசாலை, மாவட்ட நீதிமன்றம், திருகோணமலை, பொலன்னறுவை, மாத்தளை மாவட்டங்களுக்கு வருமானவரி காரியாலயம் திறக்கப்பட்டமை, சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கம், பிரசித்தி பெற்ற சீகிரிய குன்று கண்டலம், உணவகம், தம்புள்ளை விஹாரை, கண்டலம்குளம், இப்பன்கடுவகுளம், ஹபரனை தேசியப்பூங்கா என்பனவற்றுக்கு வரும் வெளிநாட்டு, உள்நாட்டு முஸ்லிம்களுக்கு இறை வழிபாடு செய்வதற்கு பள்ளிவாசல் விரிவடையத் தொடங்கியது. இந்தப் பள்ளிவாசலை சுற்றி ரங்கிரி தம்புள்ளை விஹாரை, இந்துக் கோயில் என்பன இருந்ததோடு, சிங்கள, தமிழ், முஸ்லிம் பேதமின்றி தமது அன்றாட மதக் கடமைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். தம்பள்ளைப் பள்ளிவாசல் நிர்வாக சபையில் 17 பேர் உள்ளதோடு, அங்கத்தவர்களாக 135 பேர் உள்ளனர். வெள்ளிக்கிழமைகளில் சுமார் 1700- 1800 பேர் வரையில் ஜும்ஆவுக்கு வருவது குறிப்பிடத்தக்கது. தம்புள்ளைப் பள்ளிவாசல் காணி மாத்தளை எம். ராஜசேகரன் அளவையாளரினால் (இல 9523 மூலம்) 41.49 பேர்ச்சில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பள்ளிவாசலைச் சுற்றி பரம்பரையாக சுமார் 28 குடும்பங்கள் உள்ளதோடு, மூவினத்தையும் சேர்ந்தோர் இதில் அடங்குகின்றனர். இது இப்படி இருக்கையில் கடந்த 19ஆம் திகதி தம்புள்ளையில் 5 இடங்களில் கையெழுத்து வேட்டை ஒன்று நடத்தப்பட்டது. தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம், பொதுச் சந்தை, மணிக்கூண்டு சந்தி, அனுராதபுர பஸ் தரிப்பிடம், பஸ் நிலையம் என்பனவற்றில் தேரர்கள் சகிதம் வெள்ளை நிற உடையில் வாலிபர்கள் கையொப்பங்கள் வாங்குவதில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. இந்தச் செய்தி இலங்கையில் முதலாவதாக முன்பக்கத்திலேயே புகைப்படத்துடன் ''நவமணி''யில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. அங்கு விநியோகித்த துண்டுப் பிரசுரத்தில் 1870, 1982, 1992 இல் நடாத்தப்பட்ட கணக்கெடுப்பில் இல்லாத வணக்கக் குடில் 2012இல் காணக்கிடைத்ததாகவும் 2017 இல் அதற்கு சட்டபூர்வமான உரிமையை வழங்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளை தோற்கடிக்கவே ஓர் இலட்சம் கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு, நகர அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் மூன்று இன மக்களுக்கும் காணிகளுக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் எக்காரணத்தைக் கொண்டு பள்ளிவாசலோ, கோயிலோ கட்ட அனுமதிக்கக் கூடாது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன் மாநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக ரணவக தற்போதைய பள்ளிவாசலுக்குப் பதிலாக சந்தைக் கட்டடத்திற்கு பின்னால் 20 பேர்ச் காணியை ஒதுக்கித் தரத் தயார் என அறிவித்தனையடுத்து இதனைத் தடுக்கவே இக் கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டது.

நஷ்டஈடு வழங்க முடியும் என்று குறிப்பிடுகையிலேயே இவர்களுக்கு தெரியவருகிறது என்னவென்றால் பள்ளிக்கும் சொந்தக் காணி இருக்கிறது என்று. அப்படியானால் இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் உள்ள மத சுதந்திரத்தில் இனவாதிகள் கைவைக்கிறார்கள் என்பது புரிகிறது. தம்புள்ளை ஹைரியா பள்ளிவாசல் நிர்வாக சபையினர் வேறு ஓர் இடத்தில் காணி கேட்கும் பிரச்சினையில் சரியான தீர்வு ஒன்றிலேயே உள்ளனர். அவர்கள் கேட்கும் 80 பேர்ச்சஸ் காணி பள்ளிக்கு மட்டுமல்லாது, இடிக்கப்பட்ட இந்துக் கோயில் தமிழ், சிங்கள, முஸ்லிம் குடும்பங்களோடு இணைந்ததாக பள்ளிவாசல் கட்டப்பட வேண்டும். அத்தோடு வாகன தரிப்பிடத்துக்காகவும் காணி வேண்டும். இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டே 80 பேர்ச்சஸ் காணி கேட்கிறார்கள். இதில் அரசு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். 1 இலட்சம் அல்லது 10 இலட்சம் கையொப்பம் எடுத்தாலும் தம்புள்ளைப் பள்ளிவாசல் சட்டரீதியான பள்ளிவாசல். பள்ளிவாசலை மாற்ற வேண்டுமென்றால் உரிய காணியை உத்தரவாதத்தோடு பெற நிர்வாக சபை தைரியத்தோடு செயல்படுவது குறிப்பிடத்தக்க, மெச்சத்தக்க விடயமாகும்.

அரசியலுக்கும், இனவாதத்திற்கும், வியாபார பொறாமைக்கும் வித்திட்டுள்ள தம்புள்ளை ஹைரியாப் பள்ளிவாசல் பிரச்சினை 5 வருடங்களாகியும் முடிவுக்கு வராமல் இருக்கும் நிலைக்கு காரணம் நமது முஸ்லிம் அரசியல் தலைமைகளும் சிவில் அமைப்புகளும் இவ்விவகாரத்தில் மும்முரமாக ஈடுபடாமையே என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. தமது பெயரை பதித்துக் கொள்ள ஊடக அறிக்கைகளை விடும் அரசியல் தலைமைகள் சிந்திக்க வேண்டும். ஆண்டவனின் மாளிகைக்கு வந்திருக்கும் சோதனையை ஆண்டவன் தீர்ப்பான் என்று நம்பிக்கை நமக்கு இருக்கிறது. ஆனால் நாம் அரசியல் இலாபத்துக்கு மட்டும் இதனை பிரயோசனப்படுத்தி விட்டு பாராமுகமாய் இருக்கும் நமது முஸ்லிம் அரசியல் தலைமைகளையும் மாற்று சகோதர அரசியல் வாதிகளையும் மனச்சாட்சி ஒரு நாளும் விட்டுவைக்காது என்பது உண்மை. அண்மையில், தூங்காத நகரமான தம்புள்ளையில் 3 நாட்கள் முஸ்லிம் கடைகள் தூங்கிய சம்பவத்தில் கூட முஸ்லிம்களின் பொருளாதாரத்தையே குறி வைக்கப்பட்டது. இது தொடர்பாக முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்பான முஸ்லிம் கவுன்சில் பொலிஸ் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாதுள்ளது.

இதிலிருந்து இனவாதிகள் முஸ்லிம்களின் பொருளாதாரத்தை முடக்குவதோடு, மத அனுஷ்டானங்களையும் இல்லாதொழிக்க காரணங்களைத் தேடி அலைகிறார்கள். நாம் சிறுபான்மையினர் தான். எமக்கும் இந்நாடு சொந்தம். நாம் இங்கேயே பிறந்தோம். இம் மண்ணிலேயே புதைக்கப்படுவோம். இருக்கும் காலம்வரை ஒற்றுமையோடு இருந்து எமது உரிமைகளை உணர்ச்சி வசப்படாது வென்றெடுக்க உறுதி பூணுவோம். பல விட்டுக் கொடுப்புகள் வரவேண்டும். அப்படி வந்தால் 5 வருடங்கள் கடந்து 6ஆவது வருடத்தில் அங்கு சம்பூரணமான தம்புள்ளை ஹைரியா ஜும்ஆப் பள்ளிவாசல் கட்டப்பெறும் என்பதில் ஐயமில்லை. அரச ரீதியாக அனுசரணை பெற்று சட்டபூர்வமாக கட்டி எதிர்காலத்தில் பிரச்சினை இல்லாது வாழ்வதற்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்!


TEGOSL

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute



## அதியுயர் ஊடக விருதுகள் 2016

**சிறந்த ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் 18 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்வு**

அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பின்வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்களைக் அச்சு ஊடகத்துறை ஊடகவியலாளர்களிடமிருந்து கோருகின்றது.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா டி விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வு செய்தியாளர்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டு செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்கு கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிரிவர்தன விருது. (மும்மொழிகளிலும்)
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது

சுயாதீனமான நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும்
இல: 96, பேனார்ட் சொய்சா மாவத்தை
(கிருல வீதி) கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்
அல்லது www.slpi.lk, www.pccsl.lk என்ற இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 07, 2017**


# ஹக்கீமின் பசுமைப்புரட்சி

பிறவ்ஸ்

ஒரு முஸ்லிம் ஒரு மரத்தை நட்டு அல்லது விதையை விதைத்து விவசாயம் செய்து அதிலிருந்து (அதன் விளைச்சலை) ஒரு பறவையோ அல்லது ஒரு மனிதனோ அல்லது ஒரு பிராணியோ உண்டால், அதன் காரணத்தால் ஒரு தர்மம் செய்தமைக்கான பிரதிபலன் அவருக்கு கிடைக்கும் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக் (ரலி), நூல்: புகாரி 2320

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 6.56 மில்லியன் ஹெக்டெயர் நிலப்பரப்பு வனப் பிரதேசங்களாக காணப்படுவதுடன், 1999ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வனங்கள் பற்றிய கணக்கெடுப்பின் பிரகாரம் இலங்கையில் 1.94 மில்லியன் ஹெக்டெயர் நிலப்பரப்பு வனப்பிரதேசமாக காணப்படுகின்றது. இது மொத்த நிலப்பரப்பில் 29.5 சதவீத மாகும். இதற்கு மேலதிகமாக, விவசாய ரீதியில் 20% தாவரங்கள் காணப்படுகின்றன.

நகரமயமாக்குதல் மூலம் இந்த சொற்பளவான வனங்களும் அருகிக்கொண்டே வருகின்றன. அத்துடன் கட்டிடம் கட்டுதல், வீதி அபிவிருத்தி, மரத்தளபாட உற்பத்தி போன்ற பல்வேறு அபிவிருத்திப் பணிகளினால், மக்கள் வசிப்பிடங்களிலுள்ள மரங்களும் வெட்டப்படுகின்றன. இதனால், சுவாசிப்பதற்கு சிரமப்படுகின்ற ஒரு சூழலிலேயே மனிதன் தனது வாழ்நாளை கழிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளான்.

மாசுபட்ட சூழலில் வசிக்கும் மனிதனுக்கு சுத்தமான காற்றை வழங்குவதற்கு ஒட்சிசன் தொழிற்சாலை எனப்படும் மரங்கள் பெரிதும் உதவுகின்றன. நவீனமயமாதல் மூலம் அழிந்துவரும் மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்களை வளர்ப்பதன்மூலமே எதிர்கால சந்ததியினர் நீடித்துநிலைபெறும் பயன்பாட்டை அடைந்து கொள்ளமுடியும்.

நாட்டில் பசுமைப்புரட்சியை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கில், நடைபெறுகின்ற நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் அரசியல்வாதிகள் அந்தந்த இடங்களில் மரக்கன்றுகளை நட்டு வருகின்றனர்.

அப்படி நடப்படுகின்ற மரக்கன்றுகள் நீர் ஊற்றப்பட்டு தொடர்ச்சியாக பராமரிக்கப்படுகின்றதா என்று பார்த்தால் கேள்விக்குறிதான் எஞ்சி நிற்கின்றது. இப்படியான சூழ்நிலையில் ''வீட்டுக்கு வீடு மரம்'' என்ற செயற்திட்டத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயற்படுத்தி வருகிறது.





மரத்தை தனது கட்சியின் சின்னமாகக்கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வீடுவீடாகச் சென்று மரங்களை நடும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துவருகிறது. மரம் நடப்பட்ட பின்னர், அதனைப் பராமரிப்பதற்காக இளைஞர் காங்கிரஸ் மூலம் பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ''வீட்டுக்கு வீடு மரம்'' செயற்திட்டத்துக்காக விசேட பணிமனையொன்று கட்சித் தலைமையகம் தாருஸ்ஸலாமில் அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வெளியிடங்களுக்குச் செல்லும் தனது நிகழ்ச்சிநிரலில் வீட்டுக்கு வீடு மரம் நிகழ்ச்சித்திட்டத்தையும் இணைத்துக்கொண்டுள்ளார். தெரிவுசெய்யப்பட்ட வீடுகளில் அமைச்சர் தனது கையாலேயே மரக்கன்றுகளை நாட்டிவைக்கிறார். அத்துடன் அந்த வீட்டாரின் குடும்ப நிலவரங்களை கேட்டறிந்துகொள்கிறார். இதன் மூலம், மக்கள் பிரச்சினைகளை அமைச்சரின் காலடிக்கு எடுத்துச்செல்லும் நிலவரம் மாற்றப்பட்டு, மக்களின் காலடிக்கு சென்று பிரச்சினைகளை கேட்டறியும் நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் கிராமங்களின் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலுமுள்ள வீடுகளை தனித்தனியாக எடுத்து, அதன் கீழுள்ள இளைஞர்களையும் அவர்கள் மூலம் பெரியோர்களையும் இணைத்துக் கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை அடுத்த தலைமுறையினருக்கு கையளிப்பது ''வீட்டுக்கு வீடு மரம்'' நிகழ்ச்சித்திட்டத்தின் மற்றுமொரு நோக்கமாகும்.

முஸ்லிம் காங்கிரஸின் மக்கள் பிரதிநிதியாக ஒவ்வொருவரும் இளைஞர் காங்கிரஸ் ஊடாக இந்த வேலைத்திட்டத்தை ஒவ்வொரு ஊர்களிலும் முன்னெடுக்குமாறு ரவூப் ஹக்கீம் அறிவுரை வழங்கியுள்ளார். இதன்பிரகாரம் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் என பலரும் ''வீட்டுக்கு வீடு மரம்'' திட்டத்தை தங்களது பிரதேசங்களில் முன்னெடுத்து வருகின்றனர். இதன்மூலம் மரங்களை நடுவது மாத்திரமின்றி, மக்களின் பிரச்சினைகளை நேரில் கண்டறிந்து அதற்கு தீர்வுகாணும் ஒரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மரங்கள் நடப்பட்ட வீடுகளுக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கைப்பட எழுதப்பட்ட கடிதமும், மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபினால் வெளியிடப்பட்ட ''எமது பார்வை'' என்ற நூலும், அவர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படமும் தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக அந்தந்த வீடுகளிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள், வருமானம், கல்விநிலை, வேலை வாய்ப்பு மற்றும் நோய்வாய்ப்பட்டோர் போன்ற விபரங்களை திரட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, அந்தந்த குடும்பங்களிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்கில் விசேட செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்படவுள்ளது. மக்களின் காலடிக்கே சென்று அவர்களது பிரச்சினைகளை தீர்த்துவைப்பதன் மூலம், மக்களுடன் நெருக்கமானதொரு உறவைப் பேணும் கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் தன்னை அடையாளப்படுத்தியுள்ளது.

''வீட்டுக்கு வீடு மரம்'' செயற்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து நடாத்துவதற்கு மரக்கன்றுகளை உற்பத்தி செய்யும் இடமொன்றை உருவாக்குவதற்கும் முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

பசுமைப்புரட்சி மூலம் இயற்கையை வளர்ப்பதுடன் மக்களுக்கு சேவை செய்யும் கட்சியின் இந்தப்பணி மகத்தானது.

# பல்துறைகளிலும் சாதனை படைத்த கலாநிதி சஹாப்தீன்

கலாநிதி பீ.ஏ. ஹுஸைன்மியா
தமிழில்: அஷ்கர் தஸ்லீம்



இலங்கையின் மிகவும் பிரபலமான ஒரு முஸ்லிம் ஆளுமையான தேசமான்ய கலாநிதி ஏ.எம்.எம். சஹாப்தீன், தனது 91 ஆவது வயதில் அண்மையில் காலமானார். அவர் ஓய்வு பெற்ற ஒரு சிவில் சேவகர், பல்கலைக்கழக விரிவுரையாளர், தொழில்முனைவாளர், மாணிக்க துறை நிபுணர், தோட்ட அபிவிருத்தியாளர், கொடைவள்ளல், அத்தோடு, தத்துவ துறையில் பல புத்தகங்களை எழுதிய ஒரு எழுத்தாளர்.

அவர் மிகவும் வெற்றிகரமான வாழ்வை நடாத்தியவர். அதேநேரம் ஏனைய மக்களுக்கு தேவைகளின் போது உதவிகளை வழங்கவும், ஏனையோரின் வாழ்வில் தாக்கம் செலுத்தவும் முன்னின்றவர். நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்தது முதல் அவரைத் தெரியும். அவரது மரணம் வரையிலும் நமது நட்பு தொடர்ந்தது.

நான் வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய கவுன்ஸிலின் தலைவராக இருந்தபோது, சுய உதவி செயற்றிட்டங்கள் தொடர்பில் ஊக்குவிப்பு உரைகளை நிகழ்த்துவதற்கு, அவர் எமது தலைமைக்காரியாலத்துக்கு வருகை தருவார்.

சமூகத்தையும், நாட்டையும் வளப்படுத்துவதற்கு பல துறைகளிலும் அவர் ஒரு தொலைநோக்கு கொண்ட ஆளுமையாக இருந்தார் என்றே நான் கருதுகின்றேன். எல்லாவற்றுக்கும் மேலாக அவரது அறிவுசார் வீரியத்தால் நான் பாராட்டுகின்றேன்.

அவர் மரணிப்பதற்கு 06 மாதங்களுக்கு முன்னர், நான் அவரை சந்தித்த போது, அவரது நோய் ஒருபுறமிருக்க, என்னை அவர் அடையாளம் கண்டு கொண்டு, அவரது தத்துவ ஆர்வம் குறித்து என்னோடு பேசலானார்.

1926 ஆம் ஆண்டு, கம்பளையின் கஹடபிடிய கிராமத்தில் ஒரு சாதாரண முஸ்லிம் குடும்பத்தில் ஏ.எம்.எம். சஹாப்தீன் பிறந்தார். அவரது தந்தையின் பெயர் அப்துல் மஜீத். தாயின் பெயர் சஹர்வான் பீபி. 10 சகோதரர்களைக் கொண்ட குடும்பத்தில் அவர் முதலாமவர். இவர்கள் அனைவரும் தத்தம் துறையில் சிறந்த நிலையை அடைந்துள்ளனர். குறிப்பாக கட்டுமானத் துறையில் சிறப்பு நிலையை அடைந்துள்ளனர்.

கம்பளை புனித அன்றூ மற்றும் கண்டி கிங்ஸ்வூட் பாடசாலைகளின் பழைய மாணவரான ஏ.எம்.எம். சஹாப்தீன், அப்போதைய இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1950 ஆம் ஆண்டு, தத்துவத் துறையில் சிறப்புப் பட்டதாரியாக வெளியாகினார்.

1953 முதல் 1973 வரையிலும் இலங்கை சிவில் துறையில் பணியாற்றிய அவர், 1956 முதல் 1959 முதல் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பகுதி நேரமாக தத்துவத் துறையிலும் விரிவுரையாற்றினார். அங்கு அவர் மேற்கு தத்துவத் துறை தலைவராகவும் இருந்தார்.

ஏ.எம்.எம். சஹாப்தீன் தனது தொழில் வாழ்வுடன் சேர்த்து கல்வித் துறையிலும் முன்னே சென்றார். 1958 இல் பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிக் கற்கையை பூர்த்தி செய்த ஏ.எம்.எம். சஹாப்தீன், 1956 இல் தனது ஆய்வை, தமிழ் இலக்கியத்தில் சூபி கோட்பாடு என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார். அதன் பின்னர் இன்னும் இரண்டு புத்தகங்களை எழுதினார். "A circle of life" என்ற புத்தகம் அவரது விருப்புக்குரிய அவரது ஒரு புத்தகமாகும்.

ஏ.எம்.எம். சஹாப்தீன் சிவில் துறையில் சேவையாற்றியபோது, பல அரச திணைக்களங்களின் தலைவராக செயற்பட்டுள்ளார். அத்தோடு, இறப்பர் - அரிசி ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்கான சீனாவுக்கான தூதுக்குழு உள்ளிட்டு வெளிநாடுகளுக்கான பல இலங்கைக் குழுக்களிலும் அவர் இருந்துள்ளார்.

இவர் ஒரு புத்தஜீவியாக இருந்தபோதும், வியாபாரத் துறையில் உயர் நிலையை அடைந்திருந்தார். பேருவளையைச் சேர்ந்த ஒரு மாணிக்க வியாபாரக் குடும்பத்தில் திருமணம் முடித்திருந்த ஏ.எம்.எம். சஹாப்தீன், மாணிக்க வியாபாரத் துறையின் மூலம் தனது வியாபாரப் பயணத்தை ஆரம்பித்தார். அத்தோடு, அவரது சமூகத்தின் மாணிக்க வியாபாரிகளின் மனநிலையையும் பண்பாட்டையும் மாற்றுவதற்கும், அவர்களது பொருளாதார கரிசனையை விரிவாக்கவும் பன்முகப்படுத்தவும் அவர் உதவி புரிந்தார்.

சிவில் சேவையில் 25 வருட பணியின் பின்னர், 1973 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற ஏ.எம்.எம். சஹாப்தீன், ஒரு முக்கியமான உடமை வியாபார அதிபராக முன்னேற்றம் கண்டார். மஜீத் சன்ஸ் என்ற பெயரிலும், பின்னர் சிபானி கம்பனி என்ற பெயரிலும் அவரது குடும்ப வியாபாரத்தை முன்னேற்றினார்.

இக்காலத்தில் கொல்பிடி, கறுவாத்தோட்டம், பொரல்லை மற்றும் ஏனைய பகுதிகளில் பல முக்கியமான உடமைகளை வாங்கியதோடு, நினைவுச்சினமான கட்டிடங்களையும் கட்டுவித்தார். இவரது இந்த முன்மாதிரியை முன்னணி மாணிக்க வர்த்தகரான நளீம் ஹாஜியார், ஏ.எம்.எம். சஹாப்தீனின் மைத்துனரான நௌபல் ஜாபிர் போன்ற ஏனைய பாரம்பரிய வியாபாரிகளும் பின்பற்றினர்.

இவையனைத்துக்கும் அப்பால், அவர் ஒரு சிறந்த மனிதநேயராகவும், சர்வதேச பார்வைகொண்டவராகவும் இருந்தார். இதனால்தான், அனைத்து மதங்களையும் மக்களையும் அவர் ஒரே மாதிரி அவர் நடாத்தினார். தமிழ் நாட்டின் இஸ்லாமிய ஆளுமையான குனன்குடி மஸ்தான் சாஹிபின் போதனைகளில் மூழ்கிய அவரது வாழ்வு குறித்த தொலைநோக்குக்கு, அவரது இஸ்லாமிய தமிழ் சூபித்துவ இலக்கியத்தின் புலமைதான் காரணமாகும்.

1991 இல் சஹாப்தீன் நம்பிக்கை நிதியத்தை ஸ்தாபித்த ஏ.எம்.எம். சஹாப்தீன், தகுதியான பல மாணவர்களுக்கு தமது கல்வியை முழுமைப்படுத்துவதற்கான பொருளாதார உதவிகளை வழங்கினார். அத்தோடு, பல்வேறு தொழில் துறைகளிலும் இளைஞர்களுக்கு பயிற்சியை வழங்குவதற்காக நாரம்மலடியில் ஒரு தொழில் பயிற்சி கல்லூரியையும் ஸ்தாபித்தார்.

கல்வியும், மனித வள அபிவிருத்தியும்தான் அவரது பிரதான அக்கறைகளாக இருந்தன. ஏ.எம்.எம். சஹாப்தீனின் தாராளத்தன்மை மற்றும் உதவியால் பலரும் பயன்பெற்றனர். பலரது தொழில்களும் ஸ்திரப்பட்டன. அவரது நிதியம் சமூக சேவைகளை வழங்கும் ஒரு நிறுவனம் என்பதற்கப்பால், மனித விவகாரங்களுக்கு பங்களித்தவர்களை கௌரவப்படுத்துவதற்கு, மெக்சேசே வகையிலான விருதையும் அறிமுகப்படுத்தி, வழங்கியது.

பெரும் பணத்தொகையையும் உள்ளடக்கி சஹாப்தீன் விருதைப் பெற்றவர்களுக்கு பிரபலமான பல இலங்கையர் உள்ளனர். காமினி கொரியா, நீதிபதி கிறிஸ்டி வீரமன்த்ரி, ஜயந்த தனபால, கொட்பிரி குணதிலக மற்றும் ஏனைய பலரும் இவ்விருதைப் பெற்றனர். நோபல் பரிசு பெற்ற பங்களாதேஷ் நாட்டவரான பேராசிரியர் முஹம்மத் யூனுஸும், 1994 இல் சஹாப்தீன் விருதைப் பெற்றார்.

ஒருவர் தனது மரபை நிலைத்திருக்கச் செய்ய வேண்டுமாயின், ஒரு மரம், ஒரு புத்தகம், ஒரு பிள்ளையை தனக்குப் பின் விட்டுச் செல்ல வேண்டும் என்று ஒரு சீன நாட்டுப் பழமொழி சொல்கின்றது. கலாநிதி சஹாப்தீன் இந்த மூன்று விடயங்களையும் விட்டுச் சென்றுள்ளார். சஹாப்தீன் ஸ்தாபித்த நம்பிக்கை நிதியமும், பொருளாதார கொடைகளும், தற்போதைய பரம்பரைக்கு மட்டுமன்றி, எதிர்காலத்தில் வரவுள்ள பரம்பரைகளுக்கும், அவரது எதிர்பார்ப்புக்களை நடைமுறைப்படுத்தி, சேவைகளை வழங்கும்.

கலாநிதி சஹாப்தீன் தனத தாய் நாட்டுக்கும், மனித குலத்துக்கும் செய்த சேவைகளுக்காக, இந்த நாட்டின் உயர் அரச விருதான தேசமான்ய விருதை, 1992 இல் பெற்றார். அதுவல்லாது, இன்னும் பல விருதுகளையும் அவர் பெற்றார். கலாநிதி சஹாப்தீன் தனது மனைவி காலிதா, மகன் ரிழ்வான், மகள் சமியா ஆகியோரையும், இன்னும் பல பேரப்பிள்ளைகளையும் விட்டுச் சென்றுள்ளார். அல்லாஹ் அவருக்கு ஜன்னதுல் பிர்தௌஸை வழங்குவானாக.

# அவளது பயணம் பாதுகாப்பானதா?

ஜெம்ஸித் அஸீஸ்

இலங்கையின் பொதுப் போக்குவரத்தில் பயணிக்கும் 90 சதவீதமான பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்குள்ளாகின்றனர். அவர்களில்; 4 வீதமான பெண்கள் மாத்திரமே பொலிஸாரின் உதவியை நாடுகின்றனர்.

இது ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின்; (UNFPA) ஆய்வு முடிவு. அண்மையில் வெளியாகியிருந்தது.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவு இது என்கிறது UNFPA

இந்த பாலியல் துன்புறுத்தல்களுக்கு எப்படி முடிவு கட்டலாம் என்று சிந்தித்த குறித்த அமைப்பு ஒரு திட்டத்தை அறிமுகம் செய்திருக்கிறது.

அதுதான் அவளின் பயணம் பாதுகாப்பானதா? எனும் தொனிப் பொருளில் பொது மக்களை அறிவூட்டும் ஒரு விழிப்புணர்வு பிரசார நடவடிக்கை.

பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சு, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, பிரதமர் அலுவலகம், இலங்கை பொலிஸ் ஆகியவற்றுடன் இணைந்தே இத்திட்டத்தை அமுல்படுத்த முயற்சிக்கிறது UNFPA.

அதேவேளை, பொதுப் போக்குவரத்தின்போது பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு பாலியல் துன்புறுத்தல்களுக்கு இடம்பெறுமாயின் அது தொடர்பில் உடனடியாக 119 என்ற இலக்கத்தின் ஊடாக பொலிஸாருக்கு அறிவிக்குமாறு வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளது.

நல்ல முயற்சி. பெண்களைப் பாதுகாக்கும் கனதியான முயற்சி. சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தும் முயற்சி. ஒரு கூட்டு முயற்சியும்கூட. வெற்றியளிக்கும் வாய்ப்புகள் அதிகம், தற்காலிகமாகவேனும்.

ஆனாலும் அவளின் பயணம் பாதுகாப்பானதாக அமைந்து விடுமா?

அவள் மாறாத வரை, அவளது ஆடைக் கலாசாரம் மாறாத வரை, அவளது அங்க அசைவும் நெளிந்து குழைந்து நிற்பதும் மாறாத வரை அவளை எப்படி பாதுகாக்க இயலும்?

நாகரிகம் என்ற பெயரில் ஆடைச் சுதந்திரம் என்ற பெயரில் ஆபாசமாக ஆடை அணிவதனால் தேடி வரும் ஆபத்து அது.

வீட்டில் தனியறையில் இருப்பது போன்று சமூகச் சூழலிலும் இருக்க முயற்சிப்பதன் விளைவு அது.

முதலில் பெண்கள் மாற வேண்டும். அது பற்றிய விழிப்புணர்வு முதலில் அவசியம். இலங்கை பல்சமயங்கள் பின்பற்றப்படும் ஒழுக்கமுள்ள நாடு. கௌரவமான ஆடைக் கலாசாரத்தை போதிக்கும் மதங்கள் பின்பற்றப்படும் நாடு. அந்த ஆடைக் கலாசாரம் பின்பற்றப்படுவது முதன்மைப் பணி.

உடலை மறைத்து, முழு அழகையும் மறைத்து ஆடை அணிபவர்களைப் பார்த்து நாகரிகம் தெரியாதவர்கள் என்று எள்ளிநகையாடுபவர்களுக்கு ஆடையின் தத்துவம் உரத்துச் சொல்லப்படல் வேண்டும். அது பற்றிய அறிவூட்டலும் அவசியம்.

அரைகுறையாக ஆடையணிவதுதான் நாகரிகமா? அந்தரங்கத்தை அப்பட்டமாக வெளிக்காட்டி ஆடையணிவதுதான் நாகரிகமா?

காமம் ஆடைகளிலல்ல, பார்வையில் இருக்கிறது என்ற வாதம் எவ்வளவு உண்மையோ அவ்வாறே கவர்ச்சிகர ஆடைகளில்தான் அது ஊற்றெடுக்கிறது என்பதும் உண்மை.

வீதியோர விளம்பரங்களில், பெனர்களில், தொலைக்காட்சி விளம்பரங்களில் சமயா சம்பந்தமில்லாமல் அரைகுறை ஆடைகளுடன் அழகிய பெண்களை காட்சிப்படுத்திக் கொண்டே பாலியல் துன்புறுத்தல்களை கட்டுப்படுத்த முயற்சிப்பதனால் என்ன விளைவு கிடைத்து விடப் போகிறது. கௌரவமான ஆடைக் கலாசாரத்தை போதிக்கும் மதங்கள் வாழும் நம் நாட்டில் அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது பற்றியும் UNFPA சிந்திப்பது அவசியம்.

இல்லா விட்டால், அவளின் பயணம் பாதுகாப்பானதாக அமையுமா? அது கேள்வியாகவே இருக்கும்!




# சேர். ராஸிக் பரீத்

(சென்ற வாரத் தொடர்...)

சேர். ராஸிக் பரீத் பெண் கல்வியின் முக்கியத்துவம் பற்றி மிக ஆழமாகச் சிந்தித்தார். இலங்கை சோனகப் பெண்களுக்கு பெண்கள் கல்லூரி அவசியமென்ற பிரேரணையை 1943.08.04இல் அரச சபையில் சமர்ப்பித்தார். இது பற்றி குறிப்பிடும் பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் ஸ்தாபக அதிபர் ஆயிஷா ரவூப், "முஸ்லிம் சிறுமிகளுக்கு ஒரு பாடசாலை நிறுவுவதற்கு வழிகளைத் தேடி இலங்கைச் சோனக மகளிர் சங்கம் அல்லல் பட்டுக்கொண்டிருந்தவேளை, கை கொடுக்க முன்வந்தவர் சேர். ராஸிக் பரீத். நான்கு தற்காலிகக் கட்டடங்களைக் கொண்ட அரை ஏக்கர் நிலத்தை, அவர் கல்லூரிக்குக் கையளித்தார். நீர், மின்சார வசதி கொண்ட கட்டடங்களை எவ்வித வாடகையும் பெறாமல் தனது காலஞ்சென்ற புதல்வி ஹாஜராவின் பெயரில் அன்பளிப்புச் செய்தார். பாடசாலையொன்று நிறுவுவது இலகுவான காரியமல்ல, 'மனமுண்டேல் வழியுண்டு'என்று கூறிக் கொண்டு சிறுமியரின் கல்விக்காகப் பல வழிகளிலும் உழைத்தார். இதன் விளைவாக 1946 செப்டம்பர் 9இல் இரு ஆசிரியருடனும் 20 மாணவியருடனும் ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் மகளிர் கல்லூரியில் வழங்கப்பட்ட ஆங்கில மொழிக்கல்வியை நாடு முழுவதும் உள்ள சிறுமியர் வந்து பெறும் பொருட்டு கல்லூரியுடன் இணைத்து விடுதியும் அமைக்கப்பட்டது. கல்விகற்ற ஒவ்வொரு இளைஞனும் கல்வி கற்ற ஒவ்வொரு மகளைத் தரவேண்டுமென்பதே சேர். ராஸிக் பரீதின் நோக்கமாக இருந்தது. இந்தக் குறிக்கோளை அடைய மதச்சார்பற்ற கல்வியோடு, மதத்தோடான கல்வியும் இணைந்தால்தான் அந்தக் கல்வி பூரணமடையும் என்ற நோக்கத்தை ஏற்பாடு செய்ய முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு தனியாக நின்று ஒருவரும் இத்தகைய வேலைகளைச் செய்யவில்லை என்பதை நான் துணிந்து கூறுகிறேன். ஸாஹிராக் கல்லூரிக்குப் பணி புரிந்த பாட்டனின் உன்னதப் பேரன் தான் இவர்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் முஸ்லிம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப நியமனங்கள் வழங்க வேண்டுமென 1938.07.14 இல் அரசசபையில் பிரேரணை சமர்ப்பித்ததுடன் அரச சேவைக்குத் தெரிவு செய்யப்படும் மூவரில் ஒருவர் சோனகராக இருக்க வேண்டுமென கோரிக்கை முன்வைத்தார்.

மேலும் சிறார்களுக்கு கல்வி புகட்டினால் போதாது. அவர்களுக்கு உடலாரோக்கியம் மிக அவசியம் என்பதை உணர்ந்த ராஸிக் பரீத், சிறார்களுக்கும், இளைஞர்களுக்கும் விளையாட்டு வசதிகளைச் செய்து கொடுத்தார். தானும் ரோயல் கல்லூரி கிரிக்கட் கோஷ்டியில் விளையாடியதுடன், 1916 இல் கொழும்பு நகர காவலர்படை நடத்திய மரதன் ஓட்டப் போட்டியில் ஓடிச் சாதனை படைத்தார்.

இலங்கை சுதந்திரத்தை நோக்கி அடியெடுக்கும் வேளையில், ராஸிக் பரீதின் கவனம் முஸ்லிம்களின் பக்கம் திரும்பியது. 1947இல் சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் பாராளுமன்றத்திற்கு 95 பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் நடைபெற்ற போது, அத்தேர்தலில் பொத்துவில் தொகுதியில் இவர் போட்டியிட்டு 1899 வாக்குகளால் தோல்வியுற்றார்.

மேலும் ஊசலாடிக் கொண்டிருந்த முஸ்லிம்களின் வைத்திய முறையான 'யூனானி' மருத்துவத்திற்கு உயிரூட்டினார். தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி பாதிக்கும் நிலைகண்டு அதனை நிவர்த்தி செய்ய வழிகாட்டினார். முஸ்லிம் பாடசாலைகளுக்கு முஸ்லிம் மௌலவிகளை நியமிக்குமாறு வாதாடியதன் காரணமாக அரசாங்கம் 300 மௌலவிகளை நியமனம் செய்தமைக்கு அரசுக்கு நன்றியும் தெரிவித்தார்.

1948 மே 25இல் செனட் சபைக்கு பிரேரணை சமர்ப்பித்து, சோனக இஸ்லாமிய கலாசார நிலைய தன்மைக் காரியாலயத்தை அமைக்க ஒரு காணித்துண்டை கொழும்பு கோட்டையில் வழங்குமாறு கோரி வெற்றிகண்டார். இலங்கை முஸ்லிம்களை தனிச் சமூகமாக இனங்காட்ட இவர் பெருமுயற்சி செய்தார்.

1948 ஜூன் 10 இல் இவரது திறமைகளுக்காக பிரித்தானியப் பேரரசு இவருக்கு 'சேர்' பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இதன் மூலம் ஏ. ஆர். எம். ராஸிக் என்ற நாமம் சேர். ராஸிக் பரீத் எனப் பரிணமித்தது.

1949 இல் பாகிஸ்தானின் இலங்கைத்தூதுவராக நியமிக்கப்பட்ட போதும் நாட்டு முஸ்லிம்களின் தொடர்பு துண்டிக்கப்படும் என அஞ்சி அப்பதவியை ஏற்கவில்லை.

1952இல் ஏப்ரலில் டட்லி சேனாநாயக்க அரசாங்கத்தில் கொழும்பு மத்திய தொகுதியின் மூன்றாவது உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1953இல் எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவில் கலந்து கொள்ள தனது மனைவியுடன் இங்கிலாந்து சென்றார். ஓர்கிட் மலர் சேர். ராஸிக் பரீதுக்கு விருப்பமான மலர். 50 வருடங்களுக்கு மேலாக தனது கோட் சட்டை பொத்தானில் ஓர் ஓர்கிட் மலரைக் குத்துவதை வழக்கமாக்கி இருந்தார். இலங்கையில் ஓர் ஓர்கிட் தோட்டம் உருவாக்கி ஓர்கிட் மலர் விற்போரின் சங்கத்தை உருவாக்கினார்.

நாட்டின் பள்ளிவாசல்களில் நடக்கும் மோசடிகளை தவிர்ப்பதற்கு அரசாங்கம் வக்ப் சட்டதைக் கொண்டு வர வேண்டுமென வாதாடினார். வக்பு சபைக்கு 40 வயதிற்கு மேற்பட்ட உண்மை, நேர்மை, நம்பிக்கையுள்ளவர்களே தெரிவு செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தினார்.

பின்னர் தன் மனைவியோடு புனித ஹஜ்பயணத்தை நிறைவேற்றி வரும் வழியில் பக்தாத், டமஸ்கஸ், அரேபியா, எகிப்து போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்து பாரூக் மன்னர் போன்று பல தலைவர்களைச் சந்தித்தார்.

நமது இலங்கை நாட்டிற்குப் பணி பல புரிந்த இப்பெருந்தகை 24.08.1984 வெள்ளிக்கிழமை அதிகாலையில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். பண்டாரவளை சேர். ராஸிக் பரீத் வித்தியாலயம், சேர். ராஸித் பரீத் நிறுவனம், கொழும்பு புறக்கோட்டை சேர். ராஸிக் பரீத் மாவத்தை, சோனக இஸ்லாமிய கலாசார நிலையம், கண்டி சேர். ராஸிக் பரீத் கூட்ட மண்டபம், பம்பலப்பிட்டி முஸ்லிம் கல்லூரி (ஹாஜரா மண்டபம்) போன்றன சேர். ராஸிக் பரீதின் நாமத்தை நிதமும் நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. இவரது நற்பணிகளை ஏற்று அல்லாஹ் இப்பெருந்தகைக்கு ஜென்னத்துல் பிர்தௌஸை வழங்குவானாக!



# சதோச நிலையங்களில் இன்று முதல் குறைந்த விலையில் அரிசி

பீ.எப்.எம் றிஷாட்

உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி போதுமானளவு சதொச களஞ்சியசாலைகளில் காணப்படுவதால் அரிசிக்கு நியமிக்கப்பட்ட உயர்ந்தபட்ட சில்லறை விலைக்கும் மூன்று ரூபா குறைவாக நாட்டிலுள்ள அனைத்து சதோச நிலையங்களிலும் அரிசி விற்கப்படுவதாக, கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாட் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

இதன்படி, 78 ரூபா கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள உள்நாட்டு சிவப்பு மற்றும் வெள்ளைப் பச்சை அரிசி கிலோகிரேம் ஒன்றின் விலை நாட்டிலுள்ள அனைத்து சதோச நிலையங்களிலும் இன்று(03) முதல் 75 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

தேசிய மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசிகள் சதோச களஞ்சியசாலைகளில் தேவையான அளவு உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை நடமாடும் வாகனங்களைப் பயன்படுத்தி நகர மற்றும் சன நெரிசலுள்ள பகுதிகளில் அரிசி விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, லக் சதோச நிறுவனத்தின் தலைவர் டி.எம்.கே. பி.தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், நாட்டில் அரிசிக்கு பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதாகவும், வரவுள்ள பண்டிகைக் காலத்தில் அரிசியின் விலை அதிகரிக்கும் எனவும் சிலரால் பொய்யான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவதாக, கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. எனினும், நாட்டில் ஒருபோதும் அரிசிக்கு பற்றாக் குறை ஏற்படாது எனவும் விலை குறைவடைந்தாலும் அதிகரிக்காது எனவும் அந்த அமைச்சு மேலும் கூறியுள்ளது.

இதேவேளை, சந்தையில் உள்ள அரிசியின் அளவு பற்றாக்குறையாக இருப்பதால் கூடுதலாக அரிசியை இறக்குமதி செய்யவுள்ளதாக அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனால் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின், மூலம் ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளது. மாதம் தோறும் 20 ஆயிரம் மெற்றிக் தொன் என்ற ரீதியில் கட்டம் கட்டமாக அரிசியை இறக்குமதி செய்து சதொச கிளைகள் ஊடாகவும் பகிரங்க சந்தையில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# முளைவிடும் அரும்புகள்

பவித்ரா



தானியா சுல்பிகார்
கொ.தெ. சர்வதேச பாடசாலை, தெஹிவளை



எறும்புகளில் மிகவும் பயங்கர மானது அவுஸ்திரேலியாவில் இருக்கும் ஜாக் ஜம்பர் எறும்பாகும். இது கடித்தால் அலர்ஜி பிரச்சினை உள்ளவர்களுக்கு 15 நிமிடங்களுக்குள் இறப்பு ஏற்படும் வாய்ப்பு உண்டு.



துருப்பிடித்துத் தேய்வதைவிட, உழைத்துத் தேய்வது மேலானது.

- விவேகானந்தர்



கறையானின் தீமைகள் பற்றியே நாம் அறிந்துள்ளோம். ஆனால் கரையான் உணவாகவும் பயன்படுத்தப்படுகின்றது. அவை யாருக்கென்றால், நாட்டுக் கோழி வளர்ப்பவர்களுக்கு கறையான் சிறந்த உணவாக பயன்படுகிறது. கறையான் உற்பத்தி செய்து கோழிக் குஞ்சுகளுக்குத் தீனியாகக் கொடுத்தால், கறையானை சாப்பிட்ட குஞ்சுகள் மற்ற குஞ்சுகளைவிட இருமடங்காக வளர்ச்சியடையும் என்று கூறுகின்றார்கள்.

# மழை மேகம்

சுட்டெரிக்கும் சூரியன்,
குட்டிக் குழந்தையின்
செல்லச் சிணுங்கலாய் உதித்திடும்.
கோபம் கொண்ட காளையாய்,
மதம் கொண்ட யானையாய்
எதிரில் வருபவன் யாராய் -
இருப்பினும்
தன் ஆயுதமான
சுட்டெரிக்கும் கதிரினை
வீசித் தாக்கிடும்
சூர்யோதயம் மகிழ்வு
தந்த போதிலும்,
மதிய நேர வெயில்
வானின் வழி கீழ் வந்து,
உச்சி மண்டையை
சுள்ளென்று சுட்டெரிக்கும்
காலை பருகிய நீர்ச் சொட்டு,
சில நேரம் கழித்து
ஆடையின் தாகம் தணிக்கும்.
பிஞ்சு பிள்ளையின் பூவிதழோ,
கோடை கால புல் வெளியாய்த்
தோன்றிடும்
சிட்டுக் குருவியும்
சிறகடித்து பறக்க மறுத்திடும்
ஒன்றன் பின் ஒன்றாய்,
பூச் செடிகள் வாடி
அழிவதைப் பாரத்தது
இமையினுள் என் கண்கள்
அழுது புலம்பும்.
இத்தனைக்கும் நானோ,
கரங்களில் குடையோடு,
மழை மேகத்தை எதிர்பார்த்து

பாதிமா ஸம்ருத் ஸருக்
முகர்ரமா சர்வதேச பாடசாலை
நீர் - கொழும்பு

# கல்மீன்

Stone fish|எனப்படும் 'கல் மீன்'தான். ஆழ்கடலில் ஆராய்ச்சி செய்வோருக்கும் முத்துக் குளிப்போருக்கும் சிம்மசொப்பனமாக விளங்கும். கல் மீன் பற்றிய சில தகவல்களை பார்ப்போமா?

• பழுப்பு அல்லது சாம்பல் நிறத்தில் பார்ப்பதற்கு கல் போன்றே கரடுமுரடாகத் தோற்றமளிக்கும் இந்த மீன், ஆங்காங்கே சிவப்பு, மஞ்சள் மற்றும் செம்மஞ்சள் நிற கிற்றல்களுடன் காணப்படும்

• 14 முதல் 20 அங்குலம் நீளம் வரை வளரும் இம்மீன்கள் இரண்டே கால் கிலோ எடை வரை இருக்கும். கல் மீனில் ஐந்து இனங்கள் உண்டு.

• பசுபிக் பெருங்கடல்களிலும் சில ஆறுகளிலும் இந்த அதிசய மீன் வாழும். பவளப்பாறைகளும் ஆழ்கடல் பாறைகளுமே இதன் தங்குமிடம் ஆகும். தனியாகவோ, கூட்டமாகவோ இவை வசிக்கும்.

• இந்த விநோத மீனின் முதுகுப்புறத் துடுப்பு, பதின்மூன்று முட்களாக உருமாறி உள்ளது. ஆபத்து நேரங்களில் இந்த முட்கள் பெரிதாகி விடும்.

• இடுப்புப் பகுதியில் இரண்டு முட்களும் பின்பகுதியில் மூன்று முட்களும் காணப்படும். ஆனால், இம்முட்கள் தோலுக்குள் மறைந்திருக்கும்.

• கல், பாறைகளிடையே இருந்தால், அதன் தோற்றம் நம் கண்களை ஏமாற்றி விடும். நீச்சலடிப்பவர்கள் தெரியாத்தனமாக கல் மீனை மிதித்து விட்டால், அதோ கதிதான்.

• மீன் குத்திய இரண்டு மணி நேரத்துக்குள்ளாக மருத்துவரிடம் செல்ல வேண்டும். இல்லாவிட்டால், கடுமையான வலி, திசு அழுகல், முடக்குவாதம் ஏற்பட்டு உயிர் பிரிந்து விடும்.

• இது போன்ற விஷ மீன்களிடம் இருந்து தப்ப முத்துக் குளிப்பவர்கள் கனத்த அடிப்பாக முடைய ஷூக்களை அணிந்து, பாதங்களை மெல்லப் பதித்து நடப்பதுதான் ஒரே வழி ஆகும்.

• ஒவ்வொரு முள்ளுக்கு அடியிலும் சுரப்பிகள் அமைந்திருக்கும். அந்த சுரப்பிகளில் அழுத்தம் ஏற்படும்போது, (யாராவது அதை மிதித்தால், மற்ற மீன்கள் தாக்கினால்) விஷம் வெளியேறும்.

• அழுத்தத்திற்குத் தகுந்தாற்போல் விஷத்தின் அளவும் இருக்கும். நன்றாக அழுத்தி மிதித்தால், நிறைய விஷம் ஏறும். காலியாகும் விஷப் பைகள் இரண்டு வாரங்களில் மீண்டும் நிரம்பி விடும்.

• கல் மீன் ஒரு ஊனுண்ணி. பல வகை சிறிய மீன்களையும் இறால் மீன்களையும் உண்ணும். இரை வரும் வரை பொறுமையாகக் காத்திருக்கும். அருகில் வந்து விட்டால், வாயைத் திறந்து சட்டென்று விழுங்கி விடும். வெறும் 0.015 நொடியில் மொத்த தாக்குதலும் நடந்தேறி விடும்.

• இம்மீன் மிக மெதுவாகவே நீந்தும். நீருக்கு வெளியே வந்தாலும் 24 மணி நேரம் உயிர் வாழக் கூடிய வல்லமை பெற்றது இது. தண்ணீரில் துப்பும் விநோத குணமும் இதனிடம் உண்டு.

• சுறா, புலிச் சுறா ஆகிய பெரிய சுறா மீன்களும் திருக்கை மீன்களும் கல் மீனைத் தின்று ஏப்பம் விட்டு விடும்.

• கல் மீன் லட்சக்கணக்கில் நீருக்குள் முட்டையிடும். பொரித்து வரும் குஞ்சுகளை மற்ற மீன்கள் தின்று விடும். சொற்ப எண்ணிக்கை மீன்கள் மட்டுமே வளர்ந்து பெரிதாகும்.

• இதன் ஆயுள் 5 முதல் 10 வருடங்கள் ஆகும்.


• மீன்காட்சிச் சாலைகளில் கல் மீன் முக்கிய காட்சிப் பொருளாக மாறி விட்டது. இதன் விநோத தோற்றத்திற்காக பலரும் இதை வீடுகளில் விரும்பி வளர்க்கின்றனர்.

• சீனா, ஜப்பான் போன்ற ஆசிய நாடுகளில் இம்மீன் ருசியான உணவாக உண்ணப்படுகிறது. வேக வைக்கும்போது, இதன் விஷத்தன்மை நீங்கி விடுமாம்.





# நூல் விமர்சனம்




கே/மா/ திப்பிட்டிய முஸ்லிம் மகாவித்தியாலத்தில் தரம் 11 இல் கல்விபயிலும் மிஸ்னா மிர்ஷாத் தனது கன்னிப்படைப்பான 'விழித்திடு சமூகமே' என்ற கவிதை நூலை எழுதியுள்ளார். சிறுவயதிலிருந்தே கலைத்துறையில் ஆர்வமான இவர், தற்போது அதனை ஓர் ஆவணமாகத் தயாரித்து இருக்கிறார். இவரது இந்த முயற்சி பாராட்டத்தக்கது.

சிறிய வயதினையுடையவராக இருந்தாலும் இவருடைய முயற்சி, பெரியவர்களுக்கும் சக மாணவர்களுக்கும் முன் உதாரணமாக இருக்கின்றது. இவரது கவிதைகள் எம் வாழ்வில் படிப்பினையாக எடுத்து வாழக் கூடிய கருத்துக்களை உடையதாகவுள்ளது. பேனாமுனை பலமான ஓர் ஆயுதம். இன்றைய சூழலில் இளம் சமுதாயத்தினர் தொலைக்காட்சி, அலைபேசி, இணையம் என்று வீணாக பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கும் நிலையில், பலமான ஆயுதமான பேனாமுனையைப் பயன்படுத்தி அதனை ஓர் ஆவணமாக இவர் வெளியிட்டிருப்பது ஒரு சாதனையே!

இக் கவிதைத் தொகுப்பின் மூலம் சமூகத்தில் காணப்படும் ஒழுக்கரீதியான குறைபாடுகளை கோடிட்டுக் காட்டி, சமூகம் விழித்துக் கொள்ள வேண்டிய விடயங்களை தனக்கே உரிய எளிமையான நடையில் விளக்கியிருக்கிறார்.

இணையம் மூலமாக சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தற்துணிச்சலாக 'தவறு' என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.

கன்னிப்படைப்பான இவரது முயற்சியைப் பற்றிக் கூறும் ஆசிரியர் ஏ.சீ.எம். பரீனா,

சிறுவயது முதல் அவரிடம் காணப்படுகின்ற வாசிப்பாற்றலே இக்கவிதை நூலை இயற்றத் தூண்டியது என்றால் மிகையாகாது. மனிதன் எவ்வளவு வாசிக்கின்றானோ அவ்வளவுக்கு அவனுடைய அறிவு ஆற்றல் வளர்ச்சியடைவதோடு, ஊர், உலகில் நடைபெறக்கூடிய யாவற்றையும் அறிய முடிகிறது. இத்தோடு நன்மை தீமைகளையும் பிரித்தறியக் கூடிய ஆற்றலும் வளர்கிறது.
சமூகத்தில் இணையத்தளங்களால் ஏற்படக் கூடிய சிறப்புக்கள், பாதிப்புக்கள் பற்றியும் இன்னும் சமூகம் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் எடுத்தாராய்ந்திருக்கிறார். குறிப்பாக இஸ்லாம் மார்க்கம் ஹராமாக்கியுள்ள வட்டி, காதல் போன்றவற்றின் விபரீதங்களையும் கவிதையூடாக சமூகத்திற்கு எடுத்துக் காட்டியுள்ளது வரவேற்கத்தக்கது. .

வாலிபத்தை அண்மிக்கும் நூலாசிரியர் அப்பருவத்தை அடையும் முன், வாலிபனே! என விழித்து அப்பருவத்தை இறைவனுக்குப் பொருத்தமான வழியில் எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்று தனக்கும் பிறருக்கும் கவிதையூடாக உபதேசிப்பது அவளின் பேணுதலை(இறைபக்தியை) எடுத்துக்காட்டுகின்றது என்று தெரிவித்துள்ளார்.

நூலாசியரான மிஸ்னா மிர்ஷாத் தன்னுரையில், சின்னஞ்சிறு வயது முதலே கவிதை வாசிப்பதிலும் எழுதுவதிலும் இயற்கையை ரசிப்பதிலும் இருந்த பேராவல் எனக்கு கவிதை எழுதுவதற்கு தூண்டியது என்றும் நான் அன்றாடம் பத்திரிகைகளில் வாசித்து அதில் கூறும் விடயங்களில் என் உள்ளத்தை கவர்ந்த விடயங்களும் சமூகத்தில் வீழ்ச்சி கண்டவைகளும் என்னுள் கவிதையாக வெளிவரக் காரணங்களாகும் என்று கூறியுள்ளார்.

திப்பிடிய வில்பொலையைச் சேர்ந்த என்.பி. மிர்ஷாத் - ஏ. ஜே. எப் சிகானா தம்பதியரின் மூத்த புதல்வியாவார். இவரின் முயற்சிக்கு துணை நிற்கும் பெற்றோரின் பங்களிப்பு பாராட்டத்தக்கது.

37 தலைப்புக்களில் இவர் கவிதை மூலமாக வெளிக் கொணர்ந்திருக்கும் விடயங்கள் இவரது அறிவாற்றலை மேலும் மெச்சைப்படுத்துகின்றன.

யார் இந்த வட்ஸ்அப், முகப்புத்தகம்...... என்று தொடர்கிறது கவிதைகளின் தலைப்புகள்..... உண்மையான யதார்த்தத்தை கூறியிருக்கும் அவரது கவிதைகள் என்றும் உயிர் வாழும் - ஒரு போதும் மறையாது.

படிக்க படிக்க ரசனையைத் தூண்டுகின்ற இவரது கவிதைகள் வயது வேறுபாடின்றி அனைவரும் கட்டாயம் வாசிக்க வேண்டிய கவிதைகள்.

**விலை 160 ரூபா மட்டுமே!**
**முகவரி: இல 6/6 வில்பொலை, அரநாயக்க.**

- எம்.எஸ்.எம். ஸாகிர்

களுபோவிலை ஆஸ்பத்திரி வீதியில் அலைந்து திரியும் பிச்சைக்காரன். அவனுடன் ஒரு வெள்ளைக்காரன் உணவருந்திக் கொண்டிருக்கின்றான். பிச்சைக்காரனைக் கண்டாலே மூக்கைப்பிடித்துக் கொண்டு தூரவிலகி ஓடுவர். அவனிடமிருந்து வீசும் துர் - நாற்றம் அப்படி.
இரக்க சிந்தனையும் மனித நேயமும் மிக்க இக்காட்சியை... நான்கு வரிக்கவிதையாக்கினால் என்ன, எங்கே உங்கள் பேனா பேசட்டும்...?



**156, Hospital Road, Kalubowila, Dehiwala.**

# இலக்கியச் சோலை

தயாரிப்பு: கலைவாதி கலீல்

# கட்டாக்காலி நாய்கள்

பேசும் பேனா

தெருநாய்களை, வீதியில் அல்லது பொது இடங்களில் கொண்டு வந்து விடுபவர்களுக்கு 25ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் இதை மீறும் பட்சத்தில் ஆறுமாத கால சிறைத் தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

மகிழ்ச்சியளிக்கும் செய்தி இது!

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா இதனைப் பத்திரிகை மூலம் அறிவித்துள்ளார்.

அவருக்கு ஒரு ஷபாஷ் (ஷா - அப்பாஸ்!) ஆனால், அமைச்சர் சொன்னது போல் செய்ய வேண்டும்! ஒரு பத்திரிகையாளனின் வேண்டுகோள் இது!

உண்மையில் தெரு நாய்கள்தான் சொறி நாய்களாக மாறுகின்றன; சொறிநாய்கள் வெறி நாய்களாக மாறுகின்றன; வெறி நாய்களோ... விஷர் நாய்களாக மாறுகின்றன. மனிதர்களைக் கடித்துக் குதறிக் கொல்கின்றன.

இதென்னடா இது... 'பேகம் பேனா' திசை மாறிச் செல்கிறதே என்று சிந்திக்கிறீர்களா? இது காலவரை மனிதப் புராணம் பாடிய பேனா, இன்று நாய்ப்புராணம் பாடுகிறதே என்று சிண்டைப் பிய்த்துக் கொள்கின்றீர்களா? இப்புராணத்தில் நாய்தான் நாயகனாக இருந்தாலும் இதுவும் மனித புராணம்தான்.

நடிகர் திலகம் சிவாஜி நடித்த 'வீர பாண்டிய கட்டபொம்ம'னில் ஒரு காட்சி வருகிறது. ஆங்கிலத் தளபதி ஜாக்ஸன், கட்ட பொம்மனிடம் கூறுகிறார் இப்படி, 'நாங்கள் ஒரு நாயைக் கொல்வதாகவிருந்தாலும் சட்டப் படி குற்றம் காணாமல் கொல்ல மாட்டோம்' பிரிட்டிஷ் சட்டம் அப்படி!

'லைசன்ஸ்' இல்லாத நாய்கள் வீதிகளிலிருந்து அகற்றப்படத்தான் வேண்டும். அதில் தப்பே இல்லை. கண்ணால் கண்ட காட்சியொன்று, ஒரு பிஞ்சுப்பாலகனை, அவனது அண்டை வீட்டு நாயே கடித்துக் குதறியது. அந்த நாயிடமிருந்து குழந்தையை காப்பாற்றப்பட்டபாடு...

நாய் வளர்ப்போர்... நன்கு கவனியுங்கள். உங்கள் நாய்கள் நோய் - நொடியற்றவையாக இருக்கட்டும். வீட்டுக்காவலுக்கு அதாவது வீட்டுக்கு வரும் கள்ளர்களைப் பிடிக்கத்தானே நாய் வளர்க்கிறீர்கள். ஆனால் கள்ளர்களைக் கண்டு நாய்கள் பயந்து ஓடுகின்றன... அல்லது மௌனித்து விடுகின்றன. (இன்றைய வீட்டுப் பூனைகள் எலிகளைப் பிடிப்பதில்லை மாறாக மீன்கறி கேட்கின்றன என்பது தெரியுமா?)

அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் அறிக்கையைப் பூரணமாக வரவேற்று வாழ்த்துகிறது பேசும் பேனா!

- கலை

# கல்லொழுவைக்கு ருவன் ரணதுங்க விஜயம்

(மினுவாங்கொடை நிருபர்)

ஸ்ரீ.ல.சு.க. மினுவாங்கொடை தொகுதி அமைப்பாளர் ருவன் ரணதுங்க, சனிக்கிழமை (04) மாலை 4 மணிக்கு, கல்லொழுவை முஸ்லிம் கிராமத்திற்கு, முதன்முறையாக நல்லெண்ண விஜயம் ஒன்றினை மேற்கொள்கிறார்.

கல்லொழுவை முஸ்லிம் மக்களைச் சந்தித்து, அவர்களுடன் சிநேக பூர்வ பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படவுள்ள தோடு, அவர்களின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் கல்லொழுவை பிரதேச அபிவிருத்தி குறித்தும் இதன்போது ஆராயப்படவுள்ளது.

ஸ்ரீல.சு.க. யின் கிளை அலுவலக மொன்றும், அன்றைய தினம் தொகுதி அமைப்பாளரினால் திறந்து வைக்கப்பட வுள்ளதோடு, புதிய கிளைக்கான நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட வுள்ளனர்.

மினுவாங்கொடை - கொலேஜ் ஒப் ஹெல்த் சயன்ஸ் மருத்துவக் கல்லூரியின் பணிப்பாளரும், கல்லொழுவை அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டாக்டர் எம்.எச்.எம். முனாஸிக் கின் விசேட அழைப்பின்பேரில், கல்லொழுவைக்கு சமூகமளிக்கும் ருவன் ரணதுங்கவுக்கு, கல்லொழுவை பிரதேச முஸ்லிம் மக்களால் மகத்தான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

## புலமைப்பரிசிலில் சித்தி



மாவனல்லை பாதுரியா மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஆர். அஸ்கா இம்முறை நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 192 புள்ளிகள் பெற்று சப்ரகமுவ மாகாணத்தில் முதலிடம் பெற்றுள்ளார் இவர் கடுகண்ணாவைச்சேர்ந்த முகம்மது ரியாஸ், பாத்திமா பர்வீன் தம்பதியினரின் புதல்வியாவார்.

## சொற்பொழிவு

(கிண்ணியா நிருபர்)

பறகஹதெனிய ஜமாஅத் அன்சாரில் சுன்னத்தில் முஹம்மதிய்யா ஏற்பாட்டில் கிண்ணியா மஸ்ஜிதுல் ஹஊதா பள்ளிவாசல் திறப்பு விழாவும் மார்க்க சொற்பொழிவு நிகழ்வும் எம்.எப்.அமீன் பாரி ஆசிரியர் தலைமையில் வெள்ளிக்கிழமை அஸர் தொழுகை தொடக்கம் மஃறிப் வரை ஆலிம் வீதி,மாஞ்சோலைசேனையில் நடை பெறும்.

இந் நிகழ்வில் அஷ்ஷெய்ஹ் எஸ்.எச்.எம்.இஸ்மாயில் ஸலபி மஸ்ஜித் மனித வாழ்வை நெறிப் படுத்தும் கேந்திர நிலையம் என்ற தலைப்பிலும்,அஷ்ஷெய்ஹ் எம்.சி.அன்சார் ரியாதி மறுமையை நோக்கி பயணிப்போம் என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்துகின்றனர். இம் மஸ்ஜித் திறப்பு விழா வைபவத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# கிண்ணியா பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு தீவிரம்

## ஆளுநர் தலைமையில் விசேட கூட்டம்





(கிண்ணியா சஹ்ரின் எம். இஸ்மத், முஹம்மத் அலி, கியாஸ் ஷாபி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விசேட பணிப்புரைக்கமைய கிண்ணியாப் பிரதேசத்தில் வேகமாக பரவி வரும் டெங்கு நோயைக்கட்டுப்படுத்தும் முகமாக துரித நடவடிக்கையை மேற்கொள்ள கிண்ணியா தள வைத்தியசாலையில் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தலைமையில் விசேட கூட்டம் வியாழன் இடம்பெற்றது.

இதில் மத்திய சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டதோடு கிண்ணியா கல்வி வலயத்திற்குட்பட்ட 66 பாடசாலைகளின் அதிபர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கல்வி அதிகாரிகளுக்கான மற்றுமொரு விசேட கூட்டம் கிண்ணியா மத்திய கல்லூரி அப்துல் மஜீது மண்டபத்தில் கிண்ணியா வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்வி பணிப்பாளர் முனவ்வரா நளீம் தலைமையில் நடைபெற்றது.

இதில் மத்திய சுகாதார அமைச்சின் டெங்கு பிரிவின் பணிப்பாளர் டாக்டர் ஏ.எல். தௌபிக் கலந்துகொண்டு பாடசாலையில் டெங்கு நுளம்பு ஒழிப்பது சம்மந்தமான விசேட வேலைத்திட்டத்தினை முன்வைத்ததுடன் இதில் சுகாதார பிரதி அமைச்சர் பைசல் காசிம் மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர் மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம். அன்வர் இணைப்புச் செயலாளர் எச்.எம். பாயிஸ், கிண்ணியா கல்வி வலயக் கல்வி அலுவலக கணக்காளர் பி.டி. அலாப்தீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அண்மையில் கிண்ணியா பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சலினால் உயிரிழந்தோரின் தொகை தற்போது நான்காக அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன் படி காக்காமுனையைச் சேர்ந்த ஏ.ஆர்.மர்சூக் (வயது -32), பெரிய கிண்ணியாவைச் சேர்ந்த எம்.ஜே.இப்திசாம் (வயது- 20), மாஞ்சோலைசேனையைச் சேர்ந்த ஜே.ஜே. ஹாதீக் (வயது 07)அண்ணல் நகரைச் சேர்ந்த ,ஏ.குசைனா(வயது-23)ஆகியோரே டெங்கு காய்ச்சலினால் உயிரிழந்துள்ளனர்.இ ப் பிரதேசத்தில் சுமார் 400 க்கு மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு மாதங்களில், 1421 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. திருகோணமலை மாவட்டத்தில் 824 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 510 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 87 பேரும் பாதிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





திருகோணமலை மாவட்டத்திலுள்ள 400 இற்கு மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகளின் ஆர்ப்பாட்டம் கிண்ணியா சிறுவர் பூங்காவிற்கு முன்னால் வியாழக்கிழமை இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

(கிண்ணியா சஹ்ரின் எம். இஸ்மத்)

## செயலமர்வு

(ஜெஸ்மி எம்.மூஸா)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர தமிழ் பாடத்திற்கான புதிய பாடத்திட்ட அறிமுகம் தொடர்பாக உயர்தரம் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு வெள்ளி-சனி மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்த் துறை ஏற்பாடு செய்துள்ள இச்செயலமர்வில் கலந்து கொள்ளாத ஆசிரியர்கள் உயர்தரத் தமிழ்ப் பாடத்தை கற்பிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதுடன் உணவு ஒழுங்கும் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு முதல் உயர்தரத் தமிழ்ப் பாடத்தை கற்கவுள்ள மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத்திட்டம் தொடர்பிலான விளக்கமாகவே இச்செயலமர்வு நடைபெறவுள்ளது.

## விளையாட்டுப்போட்டி

(காத்தான்குடி பழுலுல்லாஹ் பர்ஹான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்தின் காத்தான்குடி பிரதேச கோட்டக் கல்வி பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி அல்-ஹிறா மகா வித்தியாலத்தின் 2017ம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி (03) வெள்ளிக்கிழமை காத்தான்குடி -05 ஆற்றங்கரையிலுள்ள காத்தான்குடி அல்-ஹிறா மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

காத்தான்குடி அல்-ஹிறா மஹா வித்தியாலத்தின் அதிபர் ஏ.ஜீ.எம். ஹகீம் தலைமையில் இடம் பெறவுள்ள மேற்படி இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவரும், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கலந்து கொள்ளவுள்ளதோடு கௌரவ அதிதியாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். இஸ்ஸதீன் கலந்து கொள்ளவுள்ளார்.

## திறப்பு விழா

(எம்.எப்.நவாஸ் அட்டாளைச்சேனை)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கான புதிய நிர்வாகக் கட்டடம் இன்று மாலை 2 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

40 மில்லியன் ரூபா நிதியில் கட்டி முடிக்கப்பட்ட அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஐ.எம்.ஹனீபா தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன திறந்து வைக்கவுள்ளார்.

கௌரவ அதிதிகளாக பிரதியமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# இலங்கை தபால் சேவை நவீனமயமாகும்

## அமைச்சர் ஹலீம்

(குருநாகல் இக்பால் அலி)

புதிய நவீன உலகிற்கு ஏற்ப புதிய பாதையில் இலங்கை தபால் சேவையை வழங்க தயாராக இருக்கிறது. நாடு தொழில் நுட்ப வளர்ச்சி நிலையை அடைந்து வருகின்றது. தபால் துறையும் அதற்குரிய ஆரம்ப கட்ட வேலைப் பணிகளை முன்னெடுத்துள்ளன. குறுகிய காலத்தில் புதிய தொழில் நுட்பங்களுடன் தபால் போக்குவரத்துச் சேவையில் மாற்றங்களைக் கொண்டு வந்து நுகர்வோர்களுக்கு சிறந்த சேவையை வழங்கவுள்ளதாக முஸ்லிம் சமயம் கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் தெரிவித்தார்.

ஜப்பான் நாட்டின் ஹொண்டோ நிறுவனத்தின் அனுசரணையுடன் தேசிய தபால் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சங்கத்தின் அங்கத்தவர்களுடைய மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு கொழும்பு கலதாரி ஹோட்டலில் இடம்பெற்றது. அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

தபால் துறையை மேம்படுத்துவதற்கு நவீன தொழில் நுட்பமும் முக்கியமானதாகும். நவீன தொழில்நுட்பம் தொடர்பாக நாங்கள் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றோம். தபால் சேவையை துரிதப்படுத்துவதற்காக மோட்டார் சைக்கிள்கள் கணனி உபகரணங்கள் என்பனவற்றை தற்போது வழங்கி வருகின்றோம்.

தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தபால் துறையும் நவீன வளங்களுடன் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு தம் பழைமையான சேவையிலிருந்து விடுபட்டு துரித கதியில் சிறந்த சேவை வழங்கக் கூடிய முகாமைத்துவ ஒழுங்கு பேணப்பட வேண்டும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



இந்நிகழ்வில் ஜப்பான் தபால் குழுவின் சங்கத் தலைவர் டெகயுக்கி குமுரோ தபாலக அதிபர் ரோஹன அபேவர்தன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஹஜ், உம்ரா செல்வோர் பார்சல் பொதிகளை ஏற்காதீர்கள்

## மூத்த உலமாவான புர்ஹானுத்தீன் கோரிக்கை

ஹஜ் உம்ரா செல்வோருக்கு உறவினர்கள் நண்பர்கள் அயலவர்கள் மற்றவர்களிடம் கையளிக்கும் பார்சல்கள் பொதிகள் குறித்து விழிப்பாகச் செயற்படுமாறு மூத்த உலமாவான நாவலப்பிட்டிய அல் ஜாமியதுல் இஸ்லாமியின் பணிப்பாளர் மௌலவி பாஸில் எம்.க்யு புர்ஹானுத்தீன் அஹமத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் கூறியிருப்பதாவது,

தற்போது உம்ராவுக்குச் செல்வோரின் தொகை அதிகரித்து வருகிறது. அதுபோன்றே ஹஜ்ஜுக்கும் அநேக சகோதர சகோதரிகள் தயாராகின்றனர். இன்னும் சிலர் பல காரணங்களை முன்வைத்து வெளிநாடுகளுக்கும் செல்கின்றனர். இவ்வாறு எந்தப்பிரயாணம் மேற்கொண்டாலும் அனைவரும் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். காரணம் தற்போது பலர் பிரயாணம் செல்லக்கூடியவர்களிடம் பார்ஸல் பொதிகள், பக்கெற்றுகள், கொடுத்து இதனை இன்னாரிடம் கொடுத்துவிடுங்கள் எனக்கூறி கொடுக்கின்றனர்.

இவ்வாறான பொதிகளை கொடுப்பவர்கள் தனது சொந்த உறவினர்கள், தெரிந்தவர்கள், நண்பர்கள், எவராகவிருந்தாலும் உடன் கொண்டு செல்வதற்கு எக்காரணம் கொண்டும் உடன்படாதீர்கள். அது எத்தகைய பிரயாணமாக இருந்தாலும் சரி. காரணம் அனேகமானோர் பார்சல்களில் கஞ்சா, அபின் போன்ற போதைப்பொருள்களை வைத்து ஒழித்து வைத்து கொடுக்கின்றனர். கங்க இலாக்காவில் மாட்டிக்கொள்கின்றனர்.

பிறகு அவர்களது பிரயாணங்கள் தடைபடுவதுடன் தண்டனைக்குட்படுத்தப்படுகிறார்கள். அண்மையில் உம்ராவுக்காக மக்களை அழைத்துச்சென்ற ஒரு மௌலவியும் இவ்வாறான ஒரு விடயத்தில் ஏமாற்றமடைந்து மாட்டிக்கொண்டுள்ளார் கடைசியில் அவர் சிறையிலிருக்கிறார். உம்ராவுக்கும் செல்லமுடியாமல் போனது. எனவே எவரும் பொதிகளையும் தந்தால் தயவு செய்து பராமெடுக்காதீர்கள். மிகவும் எச்சரிக்கையாக இருங்கள். இன்று பொதுவாக இது சர்வ சாதரணமாக இடம்பெறுகிறது. அவ்வாறு உடன் கொண்டு செல்வதாக இருந்தால் தயவு செய்து பொதிகளை திறந்து பரிசோதித்து பார்த்து கொண்டு செல்லுங்கள். விமான நிலையத்தில் வைத்தும் பொதிகள் தருவார்கள். தயவு செய்து பாராமெடுக்காதீர்கள். இந்த விடயத்தில் மிக எச்சரிக்கையாக இருக்கவும். என்றார்.





பொலன்னறுவை மாவட்டத்தில் நுககஹாதமன முகையதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் மக்தப்பில் ஹிதாயா குர்ஆன் மத்ரஸா 1 ஆம் ஆண்டு பூர்த்தி பரிசளிப்பு வைபவம் மேற்படி முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. பல போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி 1ஆம்,2ஆம்,3ஆம் இடத்தில் சாதனை பெற்ற ஐ.எம். சப்ரான்,ஐ.எம். இப்றாக், ஐ.அனுசியா,எம்.கே.எப்.மாஷா, ஏ.எப்.ரிஸ்மா, எஸ்.எப்.நபீக்கா, எம்.எம்.ஈ.நதா, எம்.எப்.சம்லா, ஆகிய மாணவர்களுக்கு சமய தலைவர்கள், மின்னேரி பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரமுகர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

(பொலன்னறுவை ஏ.றபீக்)

சிரேஷ்ட மனநல ஆலோசகர்
துணைத்தலைவர், இலங்கை உளவள ஆலோசக நிபுணர்கள் சங்கம், இலங்கை மன்றம்
பிரதித் தலைவர் போதைப்பழக்கத்துக்குட்பட்டோருக்கான தேசிய மனவள ஆலோசனை சபை
அஸ்ஹர் அன்ஸார்
M.S Psych (Ind), A.D.Psycho.C (SL), D.Psy.C (SL), D.Y.T (Ind), FRSPH (UK)



# மனநலமும் ஆலோசனையும்

தொடர் 173

# முதுமை மறதி நோய்

ஒருவர் முதுமையை அடையும் போது அல்லது முதுமையின் காலத்தை அனுபவிக்கும் போது பலவிதமான உடல் உள தாக்கங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுவதை காண்கிறோம்.

உடலில் மாற்றங்கள் ஏற்படுவது போன்று நடத்தையிலும் சிந்தனையிலும் சமூக உறவிலும் மாற்றங்கள் ஏற்படவே செய்கின்றன. முதுமை பல அனுபவங்களால் எழுதப்பட்ட ஒரு புத்தகமாக இருந்தாலும் இயல்பாகவே முதுமையில் ஏற்படும் மாற்றங்கள் பல அசௌகரீகங்களை ஏற்படுத்திவிடுகின்றன. இளமைக்காலத்தில் அவர்கள் அனுபவித்த அழகான அனுபவங்கள், அடைந்த வெற்றிகள், சாதித்த சாதனைகள் அனைத்தையும் அனுபவிக்க முடியாத நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

முதுமையை அடையும் போது ஏற்படும் ஒரு மிகப்பெரிய பாதிப்புதான் மறதி. சிலருக்கு சாதாரணமாகவே மறதி ஏற்படலாம். இன்னும் சிலருக்கு மறதியே ஒரு நோயாக மாறி அவர்களை அவதிப்படுத்தலாம். சில முதியவர்கள் சாதாரண விடயங்களைக் கூட மறந்துவிடும் நிலைக்கு உள்ளாகின்றனர். அவ்வாறே

- ★ யோசித்துச் செயற்படுதல்
- ★ ஒரு விடயத்தில் அவதானம் செலுத்துதல்
- ★ நிகழ்கால விடயங்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல்
- ★ ஒருவிடயத்தின் மீது சிந்தனையை நிலைநிறுத்துதல்

போன்ற மூளையோடு தொடர்பான பல விடயங்களை செய்ய முடியாமல் அவதிப்படும் முதியவர்களை காண்கிறோம். இந்த நிலை அவர்களுக்கும் அவர்களோடு இருப்பவர்களுக்கும் தொந்தரவாக அமையுமானால் அது முதுமை மறதி நோயின் அறிகுறிகளாக இருக்கலாம். டிமென்ஷியா எனப்படும் இந்த நோயானது மூளையை சிதைத்து அறிவாற்றலை, சிந்தனையை பாதிக்கச்செய்கிறது.

டிமென்ஷியா எனும் முதுமை மறதி நோய் மிகவும் மெதுவாக விருத்தியடைவதால் அதன் ஆரம்ப அறிகுறிகளை வைத்து தீர்மானத்திற்கு வந்துவிட முடியாது. முதுமையில் சாதாரணமாகவே ஞாபகமறதி ஏற்படுகிறது. அதே நேரம் வேறுவிதமான நோய்களின் காரணங்களாலும் ஞாபகமறதி ஏற்படலாம். அதனால் அவசரமாக எந்த முடிவுக்கும் வந்துவிட முடியாது. இது திடீர் என்று ஏற்படும் நோயாகவும் கருதப்படுவதில்லை. இதன் அறிகுறிகள் மிகவும் அமைதியாக ஒரு சில வருடங்களாக கண்களுக்கு புரியாதவிதத்தில் விருத்தியடைந்து செல்கின்றன.

### நோய் அறிகுறிகள்

ஒருவருக்கு முதுமை மறதி நோய் விருத்தியடைவதை சில அறிகுறிகளை வைத்து ஓரளவு அனுமானித்துக்கொள்ள முடியும். என்றாலும் மருத்துவ பரிசீலனைகளின் பின்னரே இதுதான் நோய் என்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும். ஞாபகசக்தி குறைவடைவதே இந்நோயின் மிகமுக்கிய அறிகுறியாக கருதப்படுகிறது. இங்கு ஞாபகம் குறைவடைதல் என்பது சாதாரணமாக நிகழ்வதைவிட அசாதாரணமாக நிகழ்வதை அவர்களின் செயற்பாடுகளை வைத்து கண்டுகொள்ள முடியும்.

### முதுமை மறதி நோயுள்ள ஒருவர்

- ★ சாப்பிட்ட சிறிது நேரத்தில் சாப்பிடவில்லை என்று கூறலாம்.
- ★ திகதி, நாட்கள், மாதம் என்பன மறந்து போகலாம்.
- ★ தனக்கு நன்கு தெரிந்த அல்லது பழக்கமான இடங்களை அடையாளம் காண முடியாமல் போகலாம்.
- ★ தனது பெயரை அல்லது குடும்ப உறுப்பினர்களின் பெயரை மறந்துவிடலாம்.
- ★ சில சமயம் வீட்டில் இருந்து வெளியே சென்று மீண்டும் வரமுடியாமல் மறந்து விடலாம்.
- ★ பிரச்சினைகளை தீர்க்க முடியாமல் அவதிப்படலாம்.
- ★ முடிவுகள் எடுக்க முடியாமல் போகலாம்.
- ★ மற்றவர்களோடு தொடர்புகள் மேற்கொள்வதில் அவதிப்படலாம்.
- ★ யோசித்து செயற்பட முடியாமல் போகலாம்.
- ★ பணத்தைக் கையாளவும் கணக்கிடவும் மறந்துவிடலாம்.
- ★ உற்சாகமாக இருந்தவர் உற்சாகம் குறைந்து அமைதி அடையலாம்.



- ★ மக்களோடு மகிழ்ச்சியாக இருந்தவர் சில சமயம் கோபப்பட்டு மரியாதை இல்லாமல் நடந்து கொள்ளலாம்.
- ★ தான் அழகாக உரையாடிக் கொண்டிருந்த மொழியை கையாள்வதில் சிரமப்படலாம்.
- ★ சில சமயம் வெளியே சென்றால் சென்ற இடத்தை மறந்துவிடலாம்.
- ★ மனதில் அச்சம் பதகளிப்பு என்பன பெரும்பாலும் இவர்களில் காணப்படும்.

நோய் தீவிரம் அடையுமானால் அன்றாடம் செய்துவந்த மிகவும் எளிய வேலைகளான உண்ணல், குடித்தல், ஆடை அணிதல், சிறுநீர் கழித்தல் போன்ற வேலைகளைக்கூட செய்ய முடியாமல் அவதிப்படுவார்கள்.

ஆனால் முதுமை மறதி நோயால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள ஒவ்வொரு நோயாளியினதும் அறிகுறிகளும் ஆளுக்காள் வேறுபடும். இங்கு குறிப்பிடப்படாத அறிகுறிகளும் வெளிவரவும் செய்யலாம்.

இந்நோய் பெரும்பாலும் 60-65 வயதை தாண்டியவர்களுக்கே அதிகமாக ஏற்படுகிறது. சில சமயங்களில் குறித்த வயதை அடைய முன்னரும் இந்நோய் ஏற்பட வாய்பபுண்டு. ஆனால் அதன் வீதம் மிகக்குறைவாகவே இருக்கும்.

இந்நோய் எதனால் ஏற்படுகிறது என்பது பற்றி மிகச்சரியாக கண்டறியப்படவில்லை. என்றாலும் மருத்துவ உலகம் நோயிற்கான சில காரணங்களை முன்வைக்கிறது. மூளைக்கலன்களில் ஏற்படும் சிதைவுகள் இந்நோயை ஏற்படுத்துவதாக கூறப்படுகிறது. மூளையில் உள்ள கலன்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து செயற்படும் திறனை இந்த சிதைவுகள் இல்லாமல் ஆக்கிவிடுகின்றன. மூளைக் கலன்கள் தன் பாட்டில் அல்லது அதனதன் இயல்பான நிலையில் ஒன்று மற்றொன்றுடன் தொடர்புபட்டு செயற்பட முடியாது போனால் அது சிந்தனை, நடத்தை, உணர்வு என்பவற்றை கடுமையாக பாதிக்கச் செய்துவிடும்.

மூளை பல வேறுபட்ட பகுதிகளை உள்ளடக்கிய அற்புதமான ஒரு படைப்பாகும். அதன் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு விதமான தொழில்பாட்டில் ஈடுபடுகிறது. ஞாபகம், தீர்வுகாணல், இயக்கம் போன்ற ஒவ்வொன்றும் மூளையின் ஒவ்வொரு பகுதியினதும் செயற்பாடுகளாகும். ஒரு குறித்த பகுதியின் கலன்கள் சிதைவடைந்தால் அந்தப் பகுதி அதன் முறையான ஒழுங்கில் செயற்பட முடியாமல் போய்விடும்.

முதுமை மறதி நோய் பல வகைகளில் காணப்படுகின்றன. அவை மூளையின் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள கலன்களோடு தொடர்புபட்டு அவ்வப்பகுதியை செயல் இழக்கச் செய்கின்றன. உதாரணமாக அல்ஸய்மர் எனும் மூளை அசதி நோய் அல்லது முதுமையில் ஏற்படும் நினைவாற்றல் இழப்பு நோயைக் குறிப்பிடலாம். மூளை நரம்புகளில் உள்ளும் புறமும் ஒரு வகை புரதம் அதிக அளவில் படிந்து கலன்களை ஆரோக்கியமாக இருக்க விடாமலும் மற்றக்கலன்களுடன் தொடர்புபட முடியாமலும் செய்து விடுகின்றன.

மூளையிலுள்ள ஹிபோகம்பஸ் அதாவது மூளைப்பின்மேடு எனும் பகுதி கற்றல் மற்றும் ஞாபகத்துடன் தொடர்புபட்டதாகும். இப்பகுதியிலுள்ள மூளைக்கலன்களே முதலில் சிதைவடைய ஆரம்பிக்கின்றன. அதனால் அல்ஸய்மர் நோயின் ஆரம்ப அறிகுறியாக ஞாபக மறதி ஏற்படுகிறது என மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர்.

முதுமையை அடைந்த பலருக்கு ஞாபக மறதி ஏற்படுவதை காண முடியும். அதை வைத்து அவர்கள் எல்லோருக்கும் முதுமை மறதி நோய் ஏற்பட்டுள்ளது என்று ஒரு போதும் கருத முடியாது. ஞாபக மறதி வருவதற்கு பல காரணங்கள் உண்டு. வீட்டிலுள்ள முதியவர் ஒருவருக்கு ஞாபக சக்தி குறைந்து சென்றால் அல்லது அவர் ஏதோ ஒரு வகையில் குழப்பம் அடைந்தால் அது முதுமை மறதி நோய் என்று கூறவும் முடியாது. மனஅழுத்தம், மனஉளைச்சல், தொடர்ந்து மருந்து மாத்திரைகள் பாவித்தல் என்பனவாலும் ஞாபக மறதி ஏற்படலாம். அது முதுமை மறதி நோயாகாது.

முதுமை மறதி நோயை மருத்துவ நிபுணர்களின் ஆழமான பரிசோதனைகளின் பின்னரே கண்டறிய முடியும். பாதிக்கப்பட்டவரின் மருத்துவ வரலாறு, உடல் சோதனைகள், ஆய்வுகூட சோதனைகள், அவரது சிந்தனையில் ஏற்படும் மாற்றங்கள், அன்றாட செயற்பாடுகள், நடந்துகொள்ளும் முறைகள் என்பவற்றை ஆய்வு செய்வதன் பின்னர் மறதி நோய் எந்த வகையைச்சார்ந்தது என்ற முடிவுக்கு மருத்துவர்கள் வருவார்கள். மறதி நோயின் வகை மற்றும் காரணங்கள் என்பவற்றை பொறுத்து சிகிச்சைகள் வேறுபடும். அதனால் டிமென்ஷியா எனும் இந்த முதுமை மறதி நோய் பற்றிய ஐயங்கள் ஏற்படுமானால் அல்லது அறிகுறிகள் தென்படுமானால் தாமதமின்றி தகுந்த மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள தவறக் கூடாது.

முதுமை மறதி உள்ள வயோதிபர்களுக்கான விசேட நடவடிக்கைகள் மற்றும் அணுகுமுறைகள் காணப்படுகின்றன. அவற்றை வைத்தியர்களை அல்லது மனநலசுகாதார நிபுணர்களை நாடி பெற்றுக்கொள்ள முடியும்.

★★★




### இந்தவார வெற்றியாளர்

★ ஏ.ஏ. பாயிஸ். நீர்கொழும்பு.

கேள்வி - கோபம் வராதவன் சிறந்தவனா..?

பதில் - இல்லை. வரும் கோபத்தை அடக்கிக் கொள்பவனே சிறந்தவன்.

**வெற்றியாளர் தனது பரிசை பெற்றுக்கொள்ள 0773153618 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்**

★ **ஏஸ்.ஏ. பஸீர். திஹாரிய.**
கேள்வி - ராஜதந்திரம் என்பது என்ன..?
பதில் - சந்தர்ப்பத்தை சாதுரியமாக, சாதகமாகப் பயன்படுத்துவது.

★ **எம். பாரிஸ். மக்கொன.**
கேள்வி - உண்மை உயர்வு தருமா..?
பதில் - தரும். தாமதமாகலாம்.

★ **ஏ.எம். முனாஸ். மாபோளை.**
கேள்வி - பணம் இல்லாதவன் பிணம் என்கிறார்களே..?
பதில் - பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்றும் சொல்கிறார்கள்.

★ **என்.எம். சாதிக். அம்பாறை.**
கேள்வி - அரசியல் தொடர்பில்லாமல் வாழ முடியாதா?
பதில் - வேடர்களுக்கும் அரசியல் தொடர்பு தேவைப்படுகிறதே.

★ **ஏ.கே. நிலாம். சம்மாந்துறை.**
கேள்வி - ஆடைக்குறைப்பு தவறா..?
பதில் - இல்லை. ஆடையின் அளவு குறைவதுதான் தவறு.

★ **எஸ். ஆறுமுகம். மாத்தளை.**
கேள்வி - என்னைப் பார்த்து சிலர் சிரிக்கிறார்களே..?
பதில் - சந்தோஷப்படுங்கள் பலர் அழுகின்ற நிலைமைக்கு நீங்கள் ஆளாகவில்லை என்று.

★ **என்.எஸ். வஹாப். ஏறாவூர்.**
கேள்வி - இலக்கியத்தால் என்ன பயன்..?
பதில் - படைத்தோனுக்குப் பயன் இல்லாமல் இருக்கலாம். படிப்போருக்குப் பல படிப்பினைகளைக் கொண்டதே அழியா இலக்கியம்.

★ **பி. உதயகுமார். பன்வில.**
கேள்வி - நன்றி உள்ளது நாய்தானே..?
பதில் - நாய் அப்படிச் சொன்னதில்லை.

★ **எம். முஹ்ஸீன். கொழும்பு - 09.**
கேள்வி - நமது மூதாதையர்கள் காதல் செய்தார்களா..?
பதில் - ஆம். உறவில் இல்லாத உண்மைக் காதல்.

★ **றிஸ்வான். கண்டி.**
கேள்வி - சம்சாரம் மின்சாரம் என்பது ஏன்?
பதில் - சுடரும் தரும். ஷொக்கும் அடிக்கும் என்பதால்.

★ **எம்.எம். பாறூக். வெலிகம.**
கேள்வி - எல்லா இன மக்களும் என்றாவது ஒரு நாள் ஐக்கியமாவார்களா..?
பதில் - மையவாடியில்கூட ஐக்கியமாகாதவன் தான் மனிதன்.

★ **எம்.வை.எம். நிஹாரா. ஹாலிஎல.**
கேள்வி - சிலரிடம் இரக்கம் இல்லாததற்குக் காரணம் என்ன?
பதில் - ஏமாந்து விடுவோமோ என்ற ஐயம்தான்.

★ **ஏ.எம். காதர். குருநகர்.**
கேள்வி - உழவுத் தொழிலை விட உயர்ந்த தொழில் உண்டா?
பதில் - உண்மையும், நேர்மையும் உள்ள தொழில் எதுவோ அதுவும் உயர்ந்த தொழில்தான்.

★ஒவ்வொரு வாரமும் பிரசுரிக்கப்படும் கேள்விகளில் சிறந்த கேள்விக்கு, இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் வழங்கும் 1000/- ரூபா பணப்பரிசு காத்திருக்கிறது.

★ கேள்விகளை சுருக்கமாக தபாலட்டையில் மாத்திரம் எழுதி பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

★ முகவரி வெட்டி ஒட்டப்படாத தபாலட்டை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

NAVAMANI Newspaper
Samookajothiyin Sangamam
# 156, Hospital Road,
Kalubowila, Dehiwala

# வாரம் ஒரு நோய்

## எலும்புப்புரை நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ளுங்கள்!

உங்கள் எடையை தாங்கிக்கொள்ள உங்கள் கால், முதுகு, தண்டுவட எலும்புகள் உறுதியுடன் இருக்க வேண்டும். ஆனால் மருத்துவ ஆய்வுகளின் படி நமக்கு எலும்புகள் 55 வயதுக்கு பின்பு உறுதி தன்மையை இழக்க ஆரம்பித்து விடுகின்றன. உறுதித்தன்மை இழப்பதால் அதன் நிலைத்தன்மை இழக்க நேரிடுகிறது. இதனை ஆங்கிலத்தில் ஆஸ்டியோபோரோசிஸ் (OSTEOPOROSIS) எலும்பு மெலிதல் அல்லது எலும்பு சிதைவு நோய் என்கிறார்கள். சமீபத்திய ஆய்வுகளின் படி இந்த நோயின் பாதிப்பு அதிகரித்து கொண்டே செல்வதாக கூறப்படுகிறது,



இதனை மருத்துவர்களும் பல்வேறு உடல் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தி வருகின்றனர்.

மருத்துவ ஆய்வறிக்கைகளின் படி உலகில் வாழும் மூன்று பெண்களில் ஒருவருக்கு இந்த நோய் தாக்குவதாகவும், அதேபோல் ஆண்களில் 5 இல் ஒருவருக்கு இந்த நோய் தாக்குவதும் கண்டறியப்பட்டுள்ளது.

### எதனால் வருகிறது?

எலும்பின் உறுதித்தன்மை குறைவதால் இந்த நோய் ஏற்படுகிறது. இதனால் எளிதில் எலும்பு முறிவு ஏற்படும் வாய்ப்பு அதிகமாகிறது.

### யாருக்கெல்லாம் வரும்?

உடலில் கல்சியம் மற்றும் விற்றமின்-டி குறைவாக இருக்கும் நபர்களுக்கு அதிக அளவில் இந்த நோய் தாக்கும். தற்போது ஆண்களை, இந்த நோய் அரிதாகத் தான் தாக்குகிறது. புகை பிடித்தல், மது அருந்துபவர்கள், உடலுக்குத் தேவையான அளவு கல்சியம் எடுத்துக் கொள்ளதவர்கள், சூரிய ஒளி உடலில் படாமல் பெரும்பாலும் குளிர்சாதன வசதி உள்ள அறைகளிலேயே முடங்கிக் கிடப்பவர்கள், கர்ப்பிணிகள் ஆகியோருக்கு அஸ்டியோபோரோசிஸ் வரும் வாய்ப்பு அதிகம். குடும்பத்தில் யாருக்காவது இந்த நோய் இருந்தால் பரம்பரை வழியாகவும் இந்த நோய் தாக்கும்.

### எப்படி அறியாலாம்?

எலும்பின் அடர்த்தித் தன்மை அறிவதற்கு என 'டெக்சா' என்றொரு மருத்துவ பரிசோதனை இருக்கிறது. டெக்சா பரிசோதனை முடிவில் ஒருவரின் எலும்பின் அடர்த்தித் தன்மை எவ்வளவு, வருங்காலத்தில் அவருக்கு ஆடியோபோரோசிஸ் நோய் வருமா எனக் கண்டறிய முடியும்.

### மருந்து உண்டா?

நோயை முற்றிலுமாகத் தீர்க்க எந்த மருந்தும் கிடையாது. எலும்பு மெலிதல் நோயின் காரணமாக வரும் வலியை குறைக்க நிவாரணி மட்டுமே உள்ளது. இந்த நோய் வந்தவர்கள், அதிகளவில் உடல் இயக்கம் சார்ந்த விளையாட்டுக்களை விளையாடக் கூடாது. அதிக எடைகளைத் தூக்கக் கூடாது.

கடினமான உடற்பயிற்சிகளைச் செய்யக் கூடாது. எனினும், மருத்துவர் ஆலோசனைபடி சிறு சிறு எளிய பயிற்சிகளைச் செய்து வரவேண்டும். கல்சியம் அதிகளவில் எடுத்துகொள்ள வேண்டும். கால்சியம் மாத்திரைகளை மருத்துவர் பரிந்துரைத்த அளவு தினமும் உண்ண வேண்டும். தினமும் சூரிய ஒளி உடலில் படுமாறு 30 நிமிடங்கள் நடை பயிற்சி செய்ய வேண்டும்.

உணவில் கீரைகள், காய்கறிகள், பழங்கள், நார்ச்சத்துள்ள உணவுகளை அதிகளவில் எடுத்துக்கொள்ள வேண்டும். உயரத்துக்கு ஏற்ற எடையில் இருக்கிறீர்களா என்பதைப் பரிசோதிக்க வேண்டும். உயரத்துக்கு ஏற்ற எடையில் மட்டுமே இருக்க வேண்டும். உடலின் எலும்புகளைப் பலவீனமாக்கும் ஆஸ்டியோபோரோசிஸ் நோயை விரட்டி அடிக்க இன்றே உறுதி எடுத்துக் கொள்வது தான் ஆரோக்கியமான வாழ்வுக்கு வழி.




## வாழ்க்கையும் விருப்பமும்

மனிதனின் வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் உலகில் இன்றியமையாத எத்தனையோ துறைகள் உள்ளன. கல்வி, விஞ்ஞானம், செல்வம், பட்டம், பதவி, விளையாட்டு, இலக்கியம் மற்றும் சுயவாழ்விலும் பொதுவாழ்விலும் பெறுகின்ற பல்வேறு முன்னேற்றங்கள் என பல துறைகளில் அமைந்துள்ளன. முன்னேற்றம் காண விழையும் மனிதன் விரும்பும் துறைகளும் ஏற்றுக் கொள்ளும் இலட்சியங்களும் பலதரப்பட்டவையாகும்.

ஆயினும் எத்தகைய இலட்சியங்களும், நோக்கமும் முன்னேற்றம் காண்பது மனிதனுடைய உணர்வுகளும் செயல்களும் எந்த அளவுக்குப் பிரதிபளிக்கிறதோ அந்த அளவுக்குத்தான் அமையும் என்பது நாம் காணும் உண்மையாகும்.

மனிதனுடைய இயல்பான இயக்கங்களை முடுக்கிவிடுவதும், புதிய பல உணர்வுகளை உருவாக்கி தளர்வில்லாது செயற்படத் தூண்டுவதும் விருப்பமாகும்.

எனவே விருப்பம் இல்லையேல் எத்தகைய வாழ்வும் இல்லை. வளமும் இல்லை. செயல்களில் சிறப்பும் இல்லை. சிந்தனையில் பலனும் இல்லை.

சாதாரண நிலையில் இருந்தவர்கள் எல்லாம் சிறப்புமிக்க தலைவர்களாகவும், அறிஞர்களாகவும், கலைஞர்களாகவும், கவிஞர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், மெஞ்ஞானிகளாகவும் இன்னும் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் காண்பதற்கு அந்த விருப்பம் தான் மூல காரணமாக இருந்துள்ளது.

மனிதனது உள்ளத்தில் மலர்ந்துவிடுகின்ற அவ்விருப்பங்கள் அவனிடத்தில் பெரும் இலட்சியங்கள் உருவாகிவிடக் காரணமாக அமைகின்றன. விருப்பங்கள் இலட்சியங்களை உருவாக்கிவிடலாம். இலட்சியங்களின் அடிப்படையில் விருப்பங்கள் எழுந்திடலாம். வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சங்களிலும் சரி, அன்றாடம் செயற்படும் ஒவ்வொரு காரியங்களிலும் சரி, விருப்பம் எந்தளவுக்கு இடம்பெறுகிறதோ அந்தளவிற்குத்தான் உருப்படியான பலனை அடையமுடியும்.

தொகுப்பு- உக்குவளை ஜலீல்
கவிஞர் அல்லாமா இக்பால்

## 7 பேரில் நாமும் ஒருவராக...

கீழ்காணும் ''ஹதீஸை'' நாம் ஒவ்வொருவரும் மனதில் இருத்திக்கொள்வோம். இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் அந்த ஏழு பேரில் ஒருவராகவாவது நாம் இருக்க வேண்டும் என்று முயற்சி எடுப்போம், ''அர்ஷின் நிழல்'' நமக்கும் வேண்டுமே. மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்வோம். அவர்களுக்கும் 'அந்த அர்ஷின் நிழல்' கிடைக்க வேண்டுமல்லவா?

இதோ அந்த ஏழுபேர்;

அபூஹுரைராரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ''ஏழு பேர், இவர்களுக்கு தன் நிழலைத்தவிர வேறு நிழல் இல்லாத அந்த (மறுமை நாளில்) தன் அர்ஷின் நிழலில் அல்லாஹ் நிழல் தருவான்.''

(1) நீதமான அரசன்.

(2) அல்லாஹ்வை வணங்குவதில் ஈடுபடும் வாலிபர்.

(3) பள்ளிவாசல்களில் தன் உள்ளத்தைப் பறி கொடுத்த மனிதர்.

(4) அல்லாஹ்வுக்காக பிரியம் கொண்டு, அவனுக்காகவே ஒன்று சேர்ந்து, அவனுக்காகவே பிரிந்தும் நிற்கின்ற இருவர்.

(5) அழகும், குடும்பப் பெருமையும் நிறைந்தப் பெண் விபச்சாரத்திற்கு அழைத்தும், ''நான் அல்லாஹ்வைப் பயப்படுகிறேன்'' என்று கூறும் நபர்.

(6) தன் வலது கை செய்யும் செலவை இடது கைக்குத் தெரியாமல் அதை மறைத்துக் கொண்டு தர்மம் செய்கின்ற ஒருவர்.

(7) கலப்பற்ற நிலையில் அல்லாஹ்வை நினைவு கூர்ந்து, இதனால் ''கண்கள் கண்ணீரைச்சிந்தும் ஒருவர்'' என்று நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)



# வியாபாரிகளின் பண்பாட்டால் இனவாதிகளை வெல்லலாம்

* வகக்கோட்டை - ஏ.சீ.ஏ.முனாஸ்

நாம் இந்நாட்டில் சிறுபான்மையினராக இருப்பதோடு பல சலுகைகளையும் பெற்றவர்களாகவும் இருக்கிறோம். இலவச கல்வி, இலவச மருத்துவம் உட்பட பல வசதிகளையும் பெறுகிறோம். எமது சமுதாயம் கூடுதலாக வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். இதில் நாம் பொறுமையையும் நேர்மையையும் கடைபிடிக்க வேண்டும். அப்படியானால் எமது முஸ்லிம் சமூகம் நிமிர்ந்து வாழ முடியும். இனவாதத்தை இல்லாமலாக்க முடியும் என்று தம்புள்ளை ஹைரியா பள்ளிவாசல் வெள்ளிக்கிழமை ஜும்ஆ பிரசங்கத்தின் போது மௌலவி ஏ.எல்.எம். மிஹ்லார் (தீனி) உரை நிகழ்த்தும் போது கூறினார்.

கடந்த வாரம் தம்புள்ளை முஸ்லிம் கடைகள் மூடப்பட்டிருந்ததால் ஜும்ஆவுக்கு களம் இல்லாமல் இருந்ததோடு இந்த வார ஜும்ஆவுக்கு கனம் இல்லாமல் இருந்ததோடு இந்த வார ஜும்ஆவுக்கு கூடுதலான ஜனம் வந்திருந்தது. பள்ளிவாசல் வளவுக்குள் பொலிஸ் காவலரண் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதோடு 3 பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்பு வழங்கியதையும் காணக்கிடைத்தது.

தொடர்ந்து ஜும்ஆ பிரசங்கங்கத்தின் போது மௌலவி ஏ.எல்.எம். மிஹ்லார் (தீனி) அவர்கள் நாம் வியாபாரம் செய்வது அன்றாட மனிதவாழ்வில் உள்ள பிரச்சினைகள் நிவர்த்தி செய்து கொள்வதற்கு இதில் நாம் கூடுதலான வியாபாரத்தை மேற்கொள்வது மாற்று சகோதரிடத்திலேயே என்பதை மறந்துவிடலானது லாபம் நஷ்டம் இரண்டையும் ஏற்க வேண்டும் நஷ்டம் ஏற்பட்டால் நாம் அல்லாஹ்வுக்காக பொறுமை காக்க வேண்டும். லாபத்தை மட்டும் நாம் குறிக்கோளாக கொண்டு செயல்பட்டால் பல பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேரிடும் என்பதை மன்தில் கொள்ள வேண்டும் வியாபாரிகளும் சிப்பந்திகளும் தனது வாடிக்கையாளரை இன்முகத்தோடு வரவேற்று வியாபாரம் செய்ய முன்வரவேண்டும். நாம் மாற்று சகோதரர்களை மதிக்க வேண்டும் இந்த பண்பாடுகளை எமது நபி (ஸல்) அவர்கள் கற்று தந்திருக்கிறார். முஸ்லிம் ஆட்சியின் போது சி காபிர்களுக்கு மதிப்பளித்து எமது படிப்பினையை தந்துள்ளார். ஒரு சமயம் வியாபாரம் தொடங்கிய ஒரு சஹபியை வியாபாரத்தை தொடங்குமாறு அறிவுரை வழங்கினார். அதற்கு காரணம் செய்யும் தொழிலில் வாடிக்கையாளருடன் எப்படி பழக வேண்டும். சரியான நிலுவைகள் பழுதடையான உணவுகளை கொடுக்காதிருப்பது போன்றவை பேணப்பட வேண்டும். என்பவை கருத்தில் கொள்ள வேண்டம். இவை வியாபாரத்தில் ஹராம் நாமும் ஹராத்தை தின்று நமது மனைவி மக்களுக்கும் ஹராத்தை கொடுக்க வேண்டும் என்று சூரியே நபிகள் நாயகம் (ஸல் ) அவர்கள் நமக்டகு சொல்லிக்கொடுத்தார்.

கடந்த வாரம் தம்புள்ளை சம்வத்தால் 3 நாள் கடை மூடியதால் எவ்வாளவு பொருளாதார சிறிது விட்டுக்கொடுத்திருக்க எவ்வளவு நன்மை தம்புள்ளை மண்ணில் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் சிப்பந்திகள் கட்டாயம் பொறுமையுடனும் இன்முகத்துடனும் இருக்கவேண்டும் விட்டுக்கொடுக்க வேண்டும். ஏதாவது ஒரு வியாபாரத்தில் விட்டுக்கொடுப்பதில் நஷ்டம் ஏற்பட்டாலும் அல்லாஹ்வுக்காக விட்டுக்கொடுக்கிறேன் என்று மன உறுதி கொள்ள வேண்டும் நஷ்டம் ஏற்பட்டாலும் எமது முஸ்லிம் சமுதாயம் கஷ்டத்துக்கு உள்ளாகாதவாறு பாதுகாக்க அது உதவும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மாற்று சகோதரர்களோடு பழகும் முறையும் எமது கக்க வேண்டும் நாம் அவர்களின் சுக துக்கங்களில் கலந்து கொள்வேண்டும். இதனால் இனவாதிகளுக்கு இடம் இல்லாமல் போய்விடும் இது எமது எகையிலேயே உள்ளது. இலங்கையின் சிங்கள சகோதரர்களின் 98 சதவீதமானோர் நல்ல மக்களே 2 சதவீதமானோர் மட்டுமே பிரச்சினைகளுக்கு முன்நிற்கின்றனர்.

எமது சமுதாயத்தை எடுத்துக்கொண்டால் ஒற்றுமை இல்லை பேராசை வேறு தான் மட்டும் சம்பாதித்து தான் மட்டும் சாப்பிட்டும் சொகுசாக வாழவேண்டும் என்ற நினைப்பில் உள்ளனர். நாம் எதை செய்தாலும் செய்த நன்மையைத் தவிர எல்லாவற்றை விட்டு ஒரு நாள் போகத்தான் வேண்டும் நாம் சிந்திக்க வேண்டும். நடந்து முடிந்த சம்பவத்தை மறந்து நம்பிக்கை நாணயம் விட்டுக்கொடுக்கும் தன்மை இன்முகத்தோடு வாடிக்கையாளருடன் பழகுதல் கஷ்ட நஷ்டங்களை அல்லாஹ்வுக்காக ஏற்றுக்கொள்ளல் போன்ற நல்ல பழக்கங்களை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் நடந்து முடிந்த கசப்பான சம்பவங்கள் தம்புள்ளை மண்ணில் இனிமேல் தொடராது இருக்க வியாபாரிகள் சிப்பந்திகள் முன்வர வேண்டும் என்றுகுறிப்பிட்டார்.

# அவரவர் வண்டிகள் அவரவர் திசைகளில்

* எம்.ஐ.எம். அப்துல் லத்தீப்
முன்னாள் ஆசிரிய ஆலோசகர்

சமூக வழிகாட்டிகளான ஆலிம்கள், உலமாக்கள் இயக்க ரீதியாகப் பிளவுபட்டிருப்பதால் அவர்களின் மாணவர்களும், ஏனையோரும் பிளவுண்டு தனித்தனி குடும்பங்களில் பிளவுகளும் பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன. தந்தை ஓர் இயக்கத்திலும், தனயன், சகோதரன், மருமகன் வெவ்வேறு இயக்கங்களிலும் உள்ளனர்.இது காத்திரமான நிலைப்பாடல்ல. சமூக அமைதிக்கும், நல்வாழ்வுக்கும் இடர் விளைவிப்பது.

தப்லீஃ, தவ்ஹீத், ஜமாஅத்தே இஸ்லாமி ஆகிய மூன்று பிரதான இயக்கங்களும் இன்னும் சிலவும் இலங்கையிலும் உலகின் பல பாகங்களிலும் இஸ்லாமிய பிரச்சாரங்கள் புரிவதில் தீவிரமாக செயல்படுவது கண்கூடு. இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளில் இவர்களிடையே வேறுபாடுகள் இல்லாவிட்டாலும் பிரச்சார நடவடிக்கைகளிலும் கலாசார மற்றும் மார்க்கக்கிரியைப் பின்பற்றல்களிலும் வேறுபாடுகள் காணப்படுவதானாலும் இவர்கள் குழுக்களாகத் தனித்துச் செயல்படுகின்றனர் என விளங்க முடிகின்றது.

முஸ்லிம்களைக் கணக்கெடுப்பின் இயக்கங்கள் சார்ந்தோர் பத்து முதல் இருபது வீதமானோரே இருப்பர். இவர்கள் நாட்டிலுள்ள மத்ரசாக்களைத் தம் செல்வாக்கிலாக்கி அங்கே தெரிந்தோ தெரியாமலோ சேர்ப்பிக்கப்பட்ட மாணவர்க்கு தம் இயக்கம் சார்ந்த கருத்துக்களையும் புகுத்தி விடுகின்றனர்.

மேல் குறிப்பிடப்பட்ட இருபது வீதமான முஸ்லிம்கள் போக 80 வீதமான முஸ்லிம்களில் கணிசமானோர் அல்லது அதிகமானோர் மார்க்க அனுஷ்டாணங்களில் சிறப்பானவர்களாக இருப்பதோடு மஸ்ஜித்களில் இடம்பெறும் சகல இயக்கங்களாலும் நடத்தப்படும் உபதேசக் கூட்டங்களில் கலந்து கொள்பவர்களாக உள்ளனர். இவர்கள் பொதுவான நிலைப்பாட்டிலுள்ளவர்கள். இத்தகையோரில் சிலர் தனது பிள்ளைகளில் ஒரு மகனை அல்லது மகளை மார்க்க அறிஞராக உருவாக்க விரும்பினால் அவர் அப்பிள்ளையை ஊரிலுள்ள பல ஆண், பெண் மத்ரசாக்களில் எந்த மத்ரசாவில் சேர்ப்பது என்ற தடுமாற்றத்துக்குள்ளாகின்றார். ஏனெனில் அவை ஒவ்வொன்றையும் இன்னின்ன ஜமாஅத் மத்ரசா என ஊர் மக்களும், ஏனையோரும் அறிந்து வைத்துள்ளனர்.

நாட்டிலுள்ள மத்ரசாக்களின் இந்நிலைமைக்கான காரணம் ஐம்பது முதல் அறுபது வருடங்களுக்கிடையில் தோற்றம் பெற்ற மார்க்கப் பிரச்சார இயக்கங்களே. இவர்களிடையே உருவான போட்டி மனப்பாங்குகளே மத்ரசாக்களையும், மஸ்ஜித்களையும், மக்களையும் பிரித்து வைத்துள்ளன என்று கூறினால் மிகையாகாது.


'நீங்கள் இறைவனுக்குப் பயப்படுவதிலும், நன்மையான காரியங்களிலும் உங்களுக்கிடையே பரஸ்பரம் ஒத்துழைத்துக் கொள்ளுங்கள். எனினும் பாவம் செய்வதிலும், அத்துமீறுவதிலும் உங்களுக்கிடையே ஒத்துழைத்துக் கொள்ளாதீர்கள்' (அல்குர்ஆன் 5:2)

'நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் கயிற்றைப்(பலமாகப்)பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் பிரிந்து விடாதீர்கள்' (அத். 3: 103)

'தங்களிடம் (சத்தியத்துக்கான) தெளிவான ஆதாரங்கள் வந்த பின்னரும், தமக்கிடையே கருத்து வேறுபட்டு பிரிந்து கொண்டவர்களைப் போன்று நீங்களும் ஆகிவிட வேண்டாம், அவர்களுக்கு மகத்தான வேதனை இருக்கின்றது' (அத். 3: 105)

'நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் கட்டுப்படுங்கள், உங்களுக்கிடையே சண்டையிட்டுக் கொண்டு பிரிந்து விடாதீர்கள்.அவ்வாறாயின் உங்களது பலத்தை இழந்துவிடுவீர்கள்' (அத். 8: 46)

'தங்களுக்கிடையே பிரிவினைப்பட்டுக் கொண்டு (சிதறிய) குழுக்களாகப் போய் விட்ட, முஷ்ரிகீன்களைப் போன்று நீங்களும் ஆகிவிட வேண்டாம். அவர்களுள் ஒவ்வொரு பிரிவினரும் தங்களிடம் இருப்பதைக் கொண்டு பெருமைப்பட்டுக் கொண்டனர்' அத். 30: 30,31



பிரிவினையைத் தடை செய்கின்ற மேற்படி குர்ஆன் வசனங்களைப் போல, நபி(ஸல்)அவர்களும் பிரிவினையைத் தடை செய்துள்ளார்கள்.

'நான், பிரிவினையை இட்டும் உங்களை எச்சரிக்கின்றேன்,
நீங்கள் கூட்டமைப்பாக இருப்பது உங்கள் மீது கடமை. ஏனெனில் ஷைய்த்தான் தனித்திருப்பவரோடுதான் இருக்கிறான் இரண்டு பேராகிவிட்டால் அவன் தூரமாகிவிடுவான்' - புஹாரி.

பிரிவினை பற்றிய மேற்படி குர்ஆன் எச்சரிக்கைகளையும், நபி(ஸல்) உபதேசத்தையும் சகல ஜமாஅத்துகளையும் சேர்ந்த உலமாக்களும், உறுப்பினர்களும் நன்கு அறிந்தும் விளங்கியும் பல உரைகளிலும் உரைத்தும் உள்ளார்கள். எனினும் தங்கள் ஜமாஅத் அமைப்பே சரியானது என ஒவ்வொரு பிரிவாரும் வாதிட்டு தங்கள் தங்கள் அணிக்கு ஆள் சேர்க்கும் பணியில் ஆர்வம் காட்டிப் பிரிவினையை வலுப்படுத்திக் கொண்டே செல்கிறார்கள்.

ஆனால் அனைத்து ஜமாஅத்தினரும் ஒன்றுபட்டிருக்கும் 'அகில இலங்கை ஜம்இயதுல் உலமா' நிர்வாக மற்றும் பொதுக் கூட்டங்களில் ஒன்று கூடிக் கதைக்கிறார்கள், முடிவுகளும் எடுக்கிறார்கள், வெளியில் அந்த ஒற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. அவரவர் வண்டிகளை வழமைபோல அவரவர் திசைகளிலேயே ஓட்டிச் செல்வது போல் ஜமாஅத்துகளும் செயல்படுகின்றன.

இதன் பிரதிபலிப்புகளில் ஒன்றுதான் பெரும்பான்மைச் சமூகத்தினர் சுட்டிக்காட்டுவதுபோல அதிகரித்த மத்ரசாக்களும், மஸ்ஜித்களும் அவற்றில் ஒலிபெருக்கிகள் மூலம் உரத்த குரலில் விடுக்கப்படும் பாங் கோசைகளும். முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் குறுகிய தூர இடைவெளிகளில் அமைந்துள்ள மஸ்ஜித்களின் ஒலிபெருக்கிக் குரலோசை ராக அமைப்புப் பேதங்களும், ஒன்றுக்கொன்று ஆரம்ப முடிவு பேதங்களும் ஏககாலத்தில முஸ்லிம்களால் அவற்றுக்கு பதில் கூற முடியாதுள்ளது. சுபஹ் நேர அதான்களும் முஅத்தின் தொடங்கும் நேரத்தைப் பொறுத்து வேறுபாடுகள் அமையும்.

இந்த சூழலில் அயலயலில் வதியும் மாற்று மதத்தவரின் நிலை பற்றி நாம் சிந்திப்பதில்லை. அவர்களுக்கு இவை தொல்லையாக அமைவதாக உணர்கின்றனர்.

இவையெல்லாம் சரியான திட்ட ஒழுங்குகளின்றி சூழல் சுற்றாடல் ஆய்வு, நாட்டு நிலைமை, சிறுபான்மையினரான நமது நிலைமை பற்றியெல்லாம் சிந்தியாது ஜமாஅத்துகள் மத்ரஸாக்களையும், மஸ்ஜித்களையும் சமூகத்துக்கான நன்மையென்று கருதி நிர்மாணித்து மாறான விளைவுகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

முற்காலத்தில் சிங்கள மன்னர்கள் பலர் மஸ்ஜித்கள் அமைக்க நிலம் வழங்கி கொடைகளும் வழங்கிய வரலாறுண்டு.

ஆனால் தற்காலம் அப்படியல்ல, நமது மஸ்ஜித் காணியையும் கூட அவர்கள் தமது என எல்லையிடும் காலமாயுள்ளது.

இயக்கங்களின் நோக்கங்கள் ஒன்றாயினும், வெவ்வேறு செயற்றிட்ட அடிப்படையில் பயணிக்கின்றன. கிளை நதிகளின் போக்கு வெவ்வேறாயினும் அவை சேரும் இடம் ஒன்றே. எனவே இவ்வியக்கங்கள் மேற்சொல்லப்பட்ட குர்ஆன், ஹதீஸ் போதனையையேற்று வேற்றுமையில் ஒற்றுமை காணவேண்டும்.

# பலஸ்தீன் நெருக்கடியும் ஐரோப்பிய ஒன்றியமும்



■ றவூப் ஸெய்ன்

பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் குச்னர் ஐரோப்பிய ஒன்றியம் பேச்சுவார்த்தை அறைக்கு வெளியே இருப்பது வெட்கக் கேடானது என்று கவலை வெளியிட்டுள்ளார். பிரேஸல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய தலைமை காரியாலயத்திற்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் இது குறித்து தனது அதிருப்திகளை வெளியிட்டுள்ளார்.

பலஸ்தீன அதிகார சபைக்கு நிதியுதவி அளிக்கும் மிகப் பெரும் அமைப்பு ஐரோப்பிய ஒன்றியமே. சமாதான செயற்பாடுகளோடு சம்பந்தமான Quartet எனப்படும் சர்வதேச அமைப்பின் அங்கத்தவராகவும் ஐரோப்பிய ஒன்றியம் விளங்குகின்றது. எனவே, நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் ஒரு வினைத்திறனுள்ள பங்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இருக்க வேண்டும் என குச்னர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீன அதிகார சபைக்கும் இடையில் தற்போது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை. நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஐரோப்பிய ஒன்றியம் கலந்துகொள்ளாமை இது முதன்முறை அல்ல. எனினும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இப்பேச்சுவார்த்தையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்கு முக்கியமானது.

இதுவரை காலமும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் பூகோள அரசியல் (Geopolitics) நிலவரங்களில் தன்னை ஒரு ராஜதந்திரியாகவும் இடையீட்டாளராகவும் மாற்ற வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து வந்துள்ளன. ஆனால், உலகப் பிரச்சினைகளில் ஒன்றாகக் கருதப்படும் பலஸ்தீன நெருக்கடியில் பலபோது அது மௌனம் காத்து வருவது அதன் கொள்கைகள் குறித்து சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. பலஸ்தீன் மீதான இஸ்ரேலின் அடாவடித்தனங்கள் தீவிரமடையும்பாது மட்டும் தலைமைக் காரியாலயத்திலிருந்து ஒரு கண்டன அறிக்கையை வெளியிடுவதோடு ஐரோப்பிய ஒன்றியத்தின் பணி முடிந்து விடுகின்றது. இதுகாறும் இஸ்ரேல்-பலஸ்தீன் பிரச்சினை தொடர்பாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேலை வழிப்படுத்தும் நோக்கம் இடையீட்டாளராகக் கலந்துகொள்ளும் அமெரிக்காவுக்கு இருக்கவில்லை. இதற்குப் பிற்பாடும் இருக்கப் போவதில்லை. பலஸ்தீன மக்கள் சார்பாக பேச்சில் கலந்துகொள்ளும் அதிகார சபைத் தலைவர்கள் மீதே (முன்னாள் யாஸிர் அறபாத், தற்போது மஹ்மூத் அப்பாஸ்) வொஷிங்டன் இஸ்ரேலுக்கு சார்பான அழுத்தங்களைப் பிரயோகித்து அதன் நலன்களுக்கு ஏற்ப அவர்களை அடிபணிய வைத்து வருகின்றது.

பேச்சுவார்த்தைகள் ஒவ்வொன்றும் முன்பை விட மோசமான விளைவுகளை பலஸ்தீனர்கள் மீது சுமத்து வதற்கும் மேலும் பல இழப்புகளை அவர்கள் சந்திப்பதற்கும் பிரதான காரணம் இந்நெருக்கடியில் இடையீட்டாளராகக் கலந்துகொள்ளும் வொஷிங்டன் எப்போதும் இஸ்ரேல் ஆதரவுப் போக்கை கையாண்டு வருவதே.

பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்காமைக்கான காரணங்கள் குறித்து ஆராய்ந்த நேர்மையான அறிவுஜீவிகள் எல்லோரும் ஒருமித்த தொனியில் முன்வைக்கும் வாதம் என்னவெனில், இடையீட்டாளர் என்ற நிலையிலிருந்து வொஷிங்டன் விலக வேண்டும் என்பதே. இங்குதான் 27 அங்கத்தவர்களைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம் இப்பிரச்சினையை மிக மேலெழுந்தவாரியாக அல்லது மெத்தனமாகக் கையாள முயற்சிப்பது ஏன் என்ற ஐயம் எழுகின்றது. அமெரிக்காவுச்குச் சார்பான அதிலுள்ள சில உறுப்பு நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இப்பேச்சுவார்த்தையில் செல்வாக்கில்லை என்றும் அது ஆற்ற வேண்டிய பங்குகள் எதுவும் இல்லை என்றும் அதன் நிலைப்பாட்டை நியாயம் கண்டு வருகின்றன.

இஸ்ரேல் சார்பான யூத லொபிகள், அதன் பிரதிநிதிகள் ஐரோப்பாவில் செயல்படும் பல்கலைக்கழக அறிவுஜீவிகள் பலஸ்தீன் -இஸ்ரேல் பிரச்சினையில் ஐரோப்பிய ஒன்றியம் ஈடுபடுவதைத் தவிர்க்கும் வகையிலேயே தமது நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இஸ்ரேல்-பலஸ்தீன் மோதல் குறித்து ஒருமித்த நிலைப்பாடு எதுவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடைய ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் இஸ்ரேல் ஆதரவுச் சக்திகள் மிக நிதானத்துடன் செயற்படுகின்றன. இதற்கு முன்பாக அமெரிக்காவின் வெளிவிவகார செயலாளராக இருந்த ஹென்றி கிசிங்கர், 1974இல் எத்தனை மில்லியன் ஆண்டுகள் ஆனா ஐரோப்பிய பல்கலைக்கழக நிறுவனத்தின் சர்வதேச உறவுகள் துறையில் பேராசிரியராகக் கடமையாற்றும் ஒலிவர் ரோசு, ஐரோப்பிய ஒன்றியம் தற் போது நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள எவ்விதத் தேவைமயுமில்லை. அது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும்'' என்று கூறியுள்ளமை இதற்கோர் உதாரணம் மட்டுமே.

ளும் மத்திய கிழக்குப் பேச்சுவார்த்தைகளில் ஐரோப்பியர்கள் ஈடுபடுவது பயனளிக்காது என்று தெரிவித்திருந்தார். பலஸ்தீன்-இஸ்ரேல் பிரச்சினையை தான் தோன்றித்தனமாகக் கையாள விரும்பும் வொஷிங்டன் ஐரோப்பிய ஒன்றியம் இதில் சம்பந்தப்படக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக உள்ளது.

1980 ஜூன் மாதம் வெனிஸ் நகரில் நடைபெற்ற வெனிஸ் பிரகடனத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கைச்சாத்திட்டன. அதில் பலஸ்தீன மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உள்ளது என்றும் அதற்காகப் போராடும் உரிமை பலஸ்தீன் விடுதலை அமைப்புக்கு (PLO) உள்ளதென்றும் ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக் கொண்டன. அக்காலகட்டத்தில் இஸ்ரேலும் அமெரிக்காவும் (PLO) வை ஒரு பயங்கரவாத அமைப்பாகவே கூறி வந்தன.

வொஷிங்டன் இப்பிரகடனத்தை விமர்சித்த போதும் எதிர்கால பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகளைத் திறப்பதில் இப்பிரகடனம் ஒரு முக்கிய கருவியாக விளங்கியது.

1999 மார்ச்சில் ஐரோப்பிய ஒன்றியம் பேர்லின் பிரகடனத்தை வெளியிட்டது. அதில் பலஸ்தீன நாட்டை உருவாக்குவதற்காக வெளிப்படையான அர்ப்பணத்தை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மேற்கொள்ளும் என்று ஏற்றிருந்தது. 2002ல் ஜோர்ஜ் புஷ், அவரது பாதை வரைபடத் திட்டத்திலும் ஒப்புக் கொண்டிருந்த இரு நாட்டுத் தீர்வுத் திட்டத்தை இது ஒத்திருந்தது.

எனினும், இவ்வாறான பிரகடனங்களை வெளியிட்ட ஐரோப்பிய ஒன்றியம் நடைமுறையில் அவற்றை செயல் படுத்துவதற்கு எவ்வித அக்கறையும் காட்டவில்லை. எனினும், பலஸ்தீன அதிகார சபைக்கு பெருமளவு நிதியுதவிகளை வழங்கி வருகின்றது. வருடாந்தம் 500 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை ஐரோப்பிய ஒன்றியம் வழங்குகின்றது. யதார்த்தத்தில் அமெரிக்காவை விட மத்திய கிழக்கில் பாரியளவிலான அரசியல் அழுத்தங்களை ஐரோப்பிய ஒன்றியத்தினால் ஏற்படுத்த முடியும். அது வழங்கி வரும் நிதியுதவி அதற்கான ஆதாரமாகும். அறபு நாடுகள் மீதும் ஐரோப்பிய ஒன்றியம் பாரியளவிலான செல்வாக்கை கொண்டுள்ளது. தற்போதைய சூழலில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்கு மிகவும் அவசியமானதும் கூட. ஐரோப்பிய ஒன்றியம் எப்பாதும் ஒரு நேர்மையான சமாதானத் தரகராக செயல்படும் என்று பிரெஸலில் உள்ள பத்திரிகையாளர் டவிட் க்ரானின் தெரிவித்துள்ள அதேநேரம், இது அமெரிக்கர்களைப் பாதிக்காது என்றும் கருத்து வெளியிட்டுள்ளார். டெல்அவிவை தளமாகக் கொண்டு செயற்படும் லீஸா கோல்மென் எனப்படும் மற்றொரு உலகப் புகழ்பெற்ற பத்திரிகையாளர், ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்கா போன்று செயற்படுமாக இருந்தால் அது இஸ்ரேலுக்கு ஆதரவாகவே நடந்துகொள்ளும். அதனால் சமாதான நடவடிக்கைகளில் நம்பிக்கைக்குரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படாது என்று கருத்து வெளியிட்டுள்ளார். 2004இல் கிழக்கு ஜெரூசலத்திலும் மேற்குக் கரையிலும் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் யூதக் குடியேற்றத் திட்டங்கள் சமாதான நடவடிக்கைகளுக்கு பாரிய முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது எனவும், இஸ்ரேல் தனது குடியேற்றக் கொள்கையை மீள்பரிசீலிக்க வேண்டும் எனவும் வலியுறுத்திய ஐரோப்பிய ஒன்றியம், பின்னர் அமெரிக்க அழுத்தங்களைத் தொடர்ந்து அந்நிலைப்பாட்டைக் கைவிட்டு விட்டது. அப்போதிருந்து குடியேற்றத் திட்டங்களை இடைநிறுத்துமாறு மட்டுமே ஐரோப்பிய ஒன்றியம் கூறிவருகிறது. மத்திய கிழக்கிலுள்ள மக்களின் பொது அபிப்பிராயத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடு பல்வேறு கண்ணோட்டங்களில் பார்க்கப்படுகின்றது. சிலர் அமெரிக்காவை விட ஐரோப்பிய ஒன்றியம் தரகராகச் செயற்படத்தகுதி வாய்ந்தது என்று கருதுகின்றனர். வேறு சிலரோ ஐரோப்பிய ஒன்றியமும் இஸ்ரேல் சார்பாகச் செயற்படலாம் என்று அச்சம் வெளியிட்டுள்ளனர். எவ்வாறாயினும், சமாதான செயல்பாடுகளில் உண்மையான தாக்கம் ஏற்படவேண்டுமாயின் ஹமாஸோடு பேச்சுவார்த்தை நடத்தல் மிகவும் முக்கியமானதாகும். அமெரிக்கா விட்டுச்சென்றுள்ள இவ் இடைவெளியை ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிரப்ப முடியும் என்று அவதானிகள் நம்புகின்றனர்.

மோதலோடு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரப்பட வேண்டும் எனவும், இதில் முக்கியமான பங்கினை ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்க முடியும் எனவும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள பல்கலைக்கழக பேராசிரியர்கள் பலர் வலியுறுத்தியுள்ளனர்.

# குழந்தைக்கு பசியின்மையா?



குழந்தைகள் மிட்டாய்கள், பிஸ்கட், பழச்சாறுகள் மற்றும் மற்ற ஆரோக்கியமற்ற மாற்று உணவுகளை உண்டு தனது வயிற்றை நிரப்புகிறார்கள் எனில், சத்தான உணவுகளை உண்பதற்கு வயிற்றில் இடமோ ஆர்வமோ இருக்காது.

குழந்தைகள் முழுமையான எண்ணெய் நிறைந்த உணவை உண்டால் வயிறு முற்றிலும் நிரம்பிவிட்டதாக நினைப்பார்கள். இதனால் அதற்கடுத்த வேளை உணவை முற்றிலும் மறுப்பார்கள்.

குழந்தைகளுக்கு உடல் நிலை சரியில்லை என்றால் அவர்கள் சாப்பிடமாட்டார்கள்.

விதவிதமான வகைகளில் உணவு வகைகளை குழந்தைகளுக்கு கொடக்காவிட்டாலும், அவர்கள் சலிப்படைந்து விடுவார்கள். அவர்களுக்கு வெவ்வேறு வகையான உணவுகளை தயாரித்து கொடுக்கவேண்டும்.

பலவந்தமாக உணவூட்டுவதினால் குழந்தைக்கு உணவின் மீது வெறுப்பு ஏற்படும்.

புழுக்கள் மற்றும் மலச்சிக்கல் இரண்டுமே பசியின்மைக்கு வழிவகுக்கும். முதலில் அதனை கவனிக்க வேண்டும்.

## கருவளையத்திலிருந்து பாதுகாப்பு

தண்ணீர் நிறைய குடிப்பது முகப்பொலிவைக் கொடுக்கும். ஆரோக்கியமான உணவுகளான காய்கறிகள், பழங்கள் எடுத்துக் கொள்ளும்போது அவை கண்களுக்கு கூடுதல் பொலிவைக் கொடுக்கும்.

வைத்தியரின் பரிந்துரை இல்லாமல் மாத்திரை எடுத்துக் கொள்ளும் போது கருவளையம் ஏற்படும். அதனால் மருந்துகளை உட்கொள்ளும்போது கவனம் தேவை. கண்களுக்கு மேக்கப் போடும் போது சரியாக சுத்தம் செய்யாவிட்டால் கருமை நிறம் ஏற்படும். தக்காளிச் சாறு, எலுமிச்சைச் சாறு இரண்டையும் கலந்து கண்களுக்குக் கீழாக தடவி சிறிது நேரம் கழித்து முகத்தைக் கழுவினால் கருவளையம் குறையும்.

# உயர் இரத்த அழுத்தமா? பெண்களின் கவனத்திற்கு



தற்போதுள்ள பெண்கள் உயர் இரத்த அழுத்தத்தால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்படும் பெண்களே உங்களை நீங்கள் கவனித்து கொள்ளுங்கள்.

உணவுக் கட்டுப்பாடு மிகவும் முக்கியம். வயிறு புடைக்க உண்பதைத் தவிர்த்து எளிதில் சீரணமாகக்கூடிய உணவை மட்டுமே உண்ண வேண்டும். எண்ணெயில் பொரித்த உணவுகளை அதிகம் உண்பதைத் தவிர்ப்பது நல்லது.

மாமிச கொழுப்பு வகைகளை அறவே நீக்க வேண்டும். புளிப்புப் பண்டங்கள், மசாலாப் பொருட்கள், கோப்பி, தேநீர் , அதிக உப்பு, அசைவ உணவுகள், பருப்பு வகைகள் வாயுவைப் பெருக்கும் உணவுப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும்.

உணவில் அதிகளவு கீரைகள், பழங்கள் சேர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக குப்பைக்கீரை, முருங்கைக் கீரை, சிறுகீரை போன்றவற்றை சாப்பிடவேண்டும். கறிவேப்பிலையை அதிகம் சேர்த்துக்கொள்வது நல்லது.

காலை உணவை கண்டிப்பாக சாப்பிட வேண்டும். உணவை நன்றாக மென்று சாப்பிடவேண்டும். உணவு அருந்திய உடனே தூங்கச் செல்லக்கூடாது. பகல் தூக்கத்தைத் தவிர்க்க வேண்டும். அதிக நேரம் கண்விழித்திருப்பது தவறு. இரத்த அழுத்தத்தை தடுக்க உடலுக்கும், மனதிற்கும் போதிய பயிற்சி தேவை. இவை இரண்டும் சீராக இருந்தால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து நோய் வராமல் தடுக்கும்.

## பேசன் நான் கட்டாய்

**தேவையான பொருட்கள்**

கடலை மா - 500 கிராம், பட்டர் - 250 கிராம், சீனி - 250 கிராம், பேக்கிங் பவுடர் - 1 தேக்கரண்டி, உப்பு - 1 தேக்கரண்டி, ஏலக்காய் - 2, கஜு - 5.

**செய்முறை**

சீனி மற்றும் ஏலக்காயை தண்ணீர் இல்லாத மிக்சியில் தூள் செய்து வைக்கவும். கஜுவையும் பொடியாக நறுக்கி வைக்கவும். பின்னர், கடலை மாவுடன் உப்பு, பேக்கிங் பவுடர் சேர்த்து சலித்து வைக்கவும். பட்டர் மற்றும் தூளான சீனியையும் சேர்த்து பீட்டரினால் அடித்துகொள்ளவும்.

இக்கலவையுடன் மா கலவையை சேர்த்து சப்பாத்தி மா போல பிசைந்து, சிறிய உருண்டைகளாக உருட்டி இரண்டு உள்ளங்கைகளுக்கு இடையில் வைத்து லேசாக அழுத்தவும்.

அனைத்து உருண்டைகளையும் இதுபோல செய்து கஜுவையும் இவ்வுருண்டைகளின் நடுவில் வைத்து லேசாக அழுத்தி விடவும். ஒவனில் 12 நிமிடங்கள் 180 டிகிரி செல்சியஸில் பேக் செய்து எடுத்தால் பேசன் நான் கட்டாய் ரெடி!!!





பா.மலரம்பிகை

# மகளிர் மட்டும்

## பொறாமை குணத்தை இல்லாதொழிப்போம்



மனிதர்களின் நிம்மதியை கெடுக்கும் குணங்களில் பொறாமையும் ஒன்று. இந்த பொறாமைக்குணம் யாரையும் விட்டுவைப்பதில்லை. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து வயதினர் இடையேயும் இந்த பொறாமைக்குணம் இருப்பதைக் காணலாம்.

இந்தப்பொறாமைக்குணம் ஒருவரது வாழ்க்கையில் துன்பங்களையும், துயரங்களையும் தந்துவிடக்கூடும். எனவே அறிந்தும் அறியாமலும் இந்த பொறாமைக் குணம் நம்மை அணுகாமல் இருக்க புத்திசாலித்தனத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

எந்த ஒரு விஷயத்திலும் போட்டி இருக்கலாம். ஆனால் பொறாமை இருக்க கூடாது. ஓட்டப்பந்தயம் நடக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதில் கலந்துகொண்டு நாம் முதலில் வந்து வெற்றி பெற வேண்டும் என்ற போட்டி மனப்பான்மை இருக்கலாம். ஆனால் அடுத்தவன் ஜெயிக்கக் கூடாது, அவனை எப்படியாவது தள்ளிவிட்டு நாம் முதலில் வரவேண்டும் என்ற பொறாமைக்குணம் மட்டும் இருக்கக் கூடாது. நமக்கு கிடைக்காத ஒரு பொருள் அடுத்தவருக்கு கிடைக்க கூடாது என்று நினைப்பதும் பொறாமையின் ஒரு வடிவம் தான்.

இதுபோன்ற சூழ்நிலைகளை நாம் கவனமாக கையாள வேண்டும். பொறாமைக் குணம் ஏன் ஏற்படுகிறது, எதனால் ஏற்படுகிறது என்பதை கவனிக்க வேண்டும். பொறாமையின் அடிப்படையைக் கண்டு பிடித்து அதை அகற்ற முன்வரவேண்டும்.

பொறாமைக்குணம் தோன்றும் போது அப்போது உங்கள் மனதில் என்ன தோன்றுகிறது என்பதை ஒரு காகிதத்தில் உடனே எழுதுங்கள். சில மணி நேரம் கழித்து அந்த பட்டியலில் உள்ளவற்றை படித்துப் பாருங்கள். அப்போது தான் பொறாமைக் குணம் எந்த அளவுக்கு உங்கள் உள்ளத்தில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பது தெரியவரும்.

பெற்றோர் அல்லது குடும்பத்தில் உள்ளவர்கள் மீது பொறாமைக்குணம் தோன்றினால் அதை வெளிப்படுத்தாமல் சம்பந்தப்பட்டவர்களிடம் மனம் விட்டுப்பேசுங்கள். மனம் விட்டு பேசினாலே பெரும்பாலான பிரச்சினைகள் தீர்ந்துவிடும்.

பொறாமைக்குணம் உங்கள் மனதில் தோன்றும் போதெல்லாம் உங்கள் தன்னம்பிக்கை திறனை வளர்த்துக்கொள்ளுங்கள். மற்றவர்கள் போல நாமும் வாழ்வில் முன்னேற முடியும் என்ற எண்ணம் தோன்றும்போது யார் மீதும் நமக்கு பொறாமை ஏற்படாது.

## கல்கிசை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தயாரான நிலையிலிருந்த இரண்டு சீன நாட்டு துப்பாக்கிகள் பொலிஸாரினால் மீட்கப்பட்டன.

குருநாகல் பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவரை கொலை செய்தமை தொடர்பில் கொழும்பில் செயற்படும் பாதாள குழுவொன்றின் தலைவரான ரோஹா என்பவர் நேற்றுமுன்தினம் நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்டிருந்தபோதே இந்தத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன. ஏற்கனவே, இதுபோல பாதாள உலகக்குழுத் தலைவரான சமயங் என்பவரை நீதிமன்றுக்கு அழைத்துவரும் வழியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 7 பேர் பலியாகியுள்ளமையால், தற்போது இந்தச் சம்பவமும் பொதுமக்களிடத்தில் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், துப்பாக்கிகளை கைப்பற்றும்போது நீதிமன்றில் இருந்த 9 பேரையும் அவ்வேளையில் நீதிமன்ற வளாகத்துக்குள் நுழைந்த 11 பேரையும் கல்கிசைப் பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களின் 16 பேர் ரத்மலான, வெட்டகெய்யாவத்த பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட 20 பேரையும் நேற்றைய தினம் கல்கிசை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே அவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தனித்துச் செயற்பட இருப்பதாக குறிப்பிட்டிருந்தது தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளதோடு, விமல் வீரவன்சவுக்கு கடிதமொன்றை அனுப்பும் படி ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

விமல் வீரவன்ச தொடர்பாக எதிர்வரும் காலங்களில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு மத்திய குழுவுக்கு அறிவிக்கும் படியும் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

இதேநேரம், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் அநேக உறுப்பினர்கள் கூட்டு எதிரணியில் இருப்பதால் மேற்படி நிறைவேற்றுக் குழு கூட்டம் சட்டவிரோதமானது என்று பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாபா அபேவர்தன தெரிவித்திருந்தார்.

## சபாநாயகர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஏ.எச்.எம்.பௌஸி, செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சந்தித் சமரசிங்க, பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை- ஈரான் பாராளுமன்ற நற்புறவைப் பலப்படுத்திக்கொள்ளும் நோக்கிலேயே மேற்படி விஜயம் மேற்கொள்ளப்படுவதாக இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்தார்.

இதேநேரம், வர்த்தக அமைச்சின் கீழுள்ள நாடா நிறுவனத்தின் தலைவர் ஓமர் காமிலும் கைத்தொழில் முயற்சிகளை விரிவாக்குதல் தொடர்பாக கூட்டமொன்றில் கலந்துகொள்ள ஈரான் பயணமாகியுள்ளார்.

## நீதிமன்றங்களின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நிலையில், நாட்டிலுள்ள சகல நீதிமன்றங்களினதும் பாதுகாப்பை பலப்படுத்த பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் ஆலோசனையின் பிரகாரமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்ட கைதிகள் கொல்லபட்ட சம்பவத்தின் பரபரப்பே இன்னும் குறையாத நிலையில், நேற்று முன்தினம் கல்கிசை நீதிமன்றில் வைத்து சுடுவதற்கு தயாரான நிலையிலிருந்த இரண்டு துப்பாக்கிகள் மீட்கப்பட்டன.

பொலிஸாரின் பலத்த பாதுகாப்பையும் மீறி இந்த துப்பாக்கிகள் நீதிமன்றுக்குள் கொண்டுசெல்லப்பட்டுள்ளமையாலேயே தற்போது நீதிமன்றங்களுக்கு இருக்கும் பாதுகாப்பை மேலும் பலப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## விகிதாசார...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

புதிய தேர்தல் முறைக்கு சிறுபான்மைக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. மற்றும் கட்சிகளான ஜே.வி.பி., ஹெல உறுமய என்பன எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்த எதிர்ப்பில் நியாயம் இருக்கின்றது, எனவே இக்கட்சிகளும் இணங்கும் ஒரு தேர்தல் முறையை வகுக்க வேண்டும்.

தேர்தலை அவசரமாக நடத்த வேண்டும் என்பதற்காக ஒரு பொருத்தமற்ற முறையில் தேர்தலை நடத்தினால் எதிர்காலத்தில் அக்கட்சிகள் மாற்று வழிகளை நாடிச் செல்லலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இக்கட்சிகளது நியாயமான கோரிக்கைக்கு இடமளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே ஐ.தே.க. இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவுடன் தமது கட்சி பேச்சு வார்த்தை நடத்தி வருவதாகவம் அமைச்சர் தெரிவித்தார்.

சிறு, மற்றுமட் சிறுபான்மைக் கட்சிகளது பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக பல அங்கத்தவர் தொகுதிகளை உருவாக்குதல் போன்ற மாற்று வழிகளை அறிமுகப்படுத்துவது பற்றியும் ஆராய்ந்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## வசீம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வசீம் தாஜூதீன் படுகொலை வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரால் டிரான் ரத்னாயக்க நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கையை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே கொழும்பு மேலதிக நீதவான் ஜெயராம் ட்ரொக்சி இவ்வாறு உத்தரவு பிறப்பித்தார்.

இந்நிலையில், ரக்பி வீரர் வசீம் தாஜூதீனின் படுகொலை சம்பவம் தொடர்பில், கைதுசெய்யப்பட்டுள்ள மேல்மாகாணத்துக்குப் பொறுப்பான முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்கவை எதிர்வரும் 16 ஆம் திகதிவரை இவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

றக்பி வீரர் வசீம் தாஜூடின் கொலை வழக்கில் அனுர சேனாநாயக்க மற்றும் நாராஹேன்பிட்ட குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோர் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், முதலாம் சந்தேக நபரான சுமித் பெரேரா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த வழக்கின் மற்றுமொரு சந்தேகநபரான, நாரஹேன்பிட பொலிஸ் நிலையத்தின் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி சுமித் பெரேராவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## நிலை தடுமாறு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பயணிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன்அலி நிந்தவூர் ஜும்ஆப்பள்ளிவாசலில் நடைபெற்ற மக்கள் சநதிப்பின் போது தெரிவித்தார்,

பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்ட இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

என்னைத் தலைவர் மிகவும் மோசமாக ஏமாற்றியுள்ளார். இதனால், நான் மிகவும் துன்பப்பட்டேன். நான் அடைந்த துயரங்களை உம்ராவுக்கு சென்று அல்லாஹ்விடம் ஒப்படைத்துள்ளேன். மக்காவில் எமது நாட்டைச் சேர்ந்த முஸ்லிம் சகோதர்கள் என்னைச் சந்தித்து எனது நியாயத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் உள்ள உயர்ந்த பதவியாகவுள்ள செயலாளர் பதவி பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்குரிய அதிகாரங்கள் முடக்கப்பட்டுள்ளன. அப்பதவி மிகவும் மோசமாக அவமானப்படுத்தப்பட்டுள்ளது. ஆதலால், மீண்டும் தலைவர் மர்ஹூம் அஸ்ரப்பின் யாப்பு கொண்டு வரப்பட வேண்டும். அதற்கான போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

தனி மனித ஆதிக்கம் கட்சியில் காணப்படும் தனி மனித சர்வதிகார ஆதிக்கம் இல்லாமல் செய்யப்பட வேண்டும். இதற்காக நாம் மீண்டும் 1986ஆம் ஆண்டிற்கு திரும்ப வேண்டியுள்ளது. அன்றைய உணர்வுகளை மீட்டெடுத்து கட்சியை பாதுகாக்க வேண்டும். அதன் மூலம் சமூகத்தின் விடுதலையைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும், 17 வருடங்களாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் இழந்துள்ள 62ஆயிரம் ஏக்கர் காணி இன்னும் மீட்டெடுக்கப்படவில்லை. கோப்பாபுலவு மக்கள் தங்களின் காணியை மீட்டெடுப்பதற்காக மேற்கொண்ட தொடர்ச்சியான சாத்வீகப் போராட்டத்தினால் தமது காணியை மீட்டெடுத்துள்ளார்கள். அவ்வாறான உணர்வுடன் நாங்களும் செயற்பட வேண்டியுள்ளது.

சமூக ஒற்றுமைக்காகவும், எங்களுக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கும் அநியாயங்களுக்கு நியாயங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் தொடங்கிய கட்சி தடுமாறி, நிலைமாறி போய்க் கொண்டிருக்கின்றது. இந்த அவல நிலையிலிருந்து கட்சியையும், சமூகத்தையும் மீட்டெடுத்து அஸ்ரப் காட்டிய நேர்மையான பழைய பாதையில் பயணிக்க வேண்டியுள்ளது.

இந்தப் போராட்டத்தில் யார் இணைந்து கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை. மக்களின் ஆதரவுடன் தனித்துப் போராடவே எண்ணினேன். அல்ஹம்துதில்லாஹ் இப்போது என்னோடு கட்சியில் உள்ள பலர் இணைந்துள்ளார்கள். மேலும், என்னோடு இணைந்துள்ள உயர்பீட உறுப்பினர்களில் பலரை உயர்பீடத்திலிருந்து நீக்கியுள்ளதாக அறிகின்றேன். அவர்கள் பல தியாகங்களுக்கு மத்தியில்தான் இந்தப் போராட்டத்தில் என்னோடு இணைந்துள்ளார்கள். இதே போன்று நீங்களும் என்னோடு இணைந்து முஸ்லிம் சமூகத்தின் இன்றைய நிலைமையை மாற்றியமைக்க அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முதலாவது பிரச்சாரக் கூட்டம் நிந்தவூரில் அதுவும் எனது வீட்டு வாசலில்தான் தலைவர் மர்ஹூம் அஸ்ரப்பினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அது போன்று கட்சியை மீட்டெடுப்பதற்கான போராட்ட பிரச்சாரத்தையும் நிந்தவூரிலிருந்து ஆரம்பிக்கவுள்ளோம். இப்போராட்டத்தில் மிகப் பெரிய கோடீஸ்வரர்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. இப்போது எனக்கு வயது 72 ஆகும். எனக்கு தலைவர் பதவியும் வேண்டாம், பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் வேண்டாம், அமைச்சர் பதவியும் வேண்டாம். இந்த மீட்புப் போராட்டத்திற்கு ஒரு ஆலோசகராக செயற்படவே முன் வந்துள்ளேன்.

கட்சியின் தலைவரை விலக்க வேண்டுமென்று நான் ஒரு போதும் கூறவில்லை. அவர் திருந்த வேண்டுமென்றுதான் சொல்லுகின்றேன். அவர் பழைய யாப்புக்கு திரும்ப வேண்டுமென்று கேட்கின்றேன். நான் பிரதேசவாதம் பேசவில்லை. என்னிடம் அது கிடையாது என்பதனைக் நிரூபிப்பதற்காகத்தான் தலைவரின் பெயருக்கு ரவூப் ஹக்கீமின் பெயரை நான்தான் முதலில் பிரேரித்தேன்.

தலைவருக்கும் எனக்குமிடையிலான பிணக்கு 2007ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. கட்சியை கொள்கை அடிப்படையில் கொண்டு செல்ல வேண்டுமென்ற எனது போராட்டத்தில் சில வெற்றிகளையும் கண்டுள்ளேன்.

கடைசியாக நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தராஜபக்ஷவை ஆதரிப்பதற்கே இவர்கள் முடிவு செய்திருந்தார்கள். நான்தான் பலாத்காரமாக மிகவும் தைரியத்துடன் மைத்திரியின் அணிக்கு இழுத்த வந்தேன். அதிகாரம் கொண்ட செயலாளர் பதவியை எனக்கு தந்தால் தங்களின் இஸ்டத்திற்கு செயற்பட முடியாதென்பதற்காகவே என்னை ஓரங்கட்டியுள்ளார்கள்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது நான் 03 நாட்கள் காணாமல் போனதாக தலைவர் தெரிவித்துள்ளார். நான் அவரிடம் காசு கேட்டு காணாமல் போகவில்லை. இந்த மண்ணில் முஸ்லிம் காங்கிரஸினதும், முஸ்லிம்களினதும் கௌரவத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே காணாமல் போனேன். அன்றைய அரசாங்கம் தங்களோடு இணைந்துள்ள அனைத்துக் கட்சிகளும் எல்லாத் தேர்தல்களிலும் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட வேண்டுமென்ற தீர்மானத்தை எடுத்தது. இதற்கு இவர்களும் ஒத்துழைக்க சம்மதித்தார்கள். இதனை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. கிழக்கு மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி தேர்தல்களில் மரச் சின்னத்தில் போட்டியிட வேண்டுமென்று கூறினேன்.

இதனைச் சாதித்துக் கொள்ளவே காணாமல் போனேன்.

பின்னர், 04 பக்கங்களைக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினை செய்வதற்கான ஆவணத்தை தயார் செய்து தலைவரிடம் கொடுத்தேன். அன்று நான் மேற்கொண்ட போராட்டத்தினால் தான் முஸ்லிம் காங்கிரஸினால் முதலமைச்சரை பெற்றக் கொள்ள முடிந்துள்ளது. ஆகவே, நான் கொள்கைக்காகவே முரண்பட்டுள்ளேன். கட்சியை நல்வழிப்படுத்த வேண்டுமென்பதற்காகவே முரண்பட்டுள்ளேன். இன்று கட்சியில் சமூகம் சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கு முடியாதுள்ளது. அத்த கையவர்கள்தான் அதிகம் பேர் உள்ளார்கள். கட்சியின் மூத்த போராளிகள் எல்லா ஊர்களிலும் ஓரங்கட்டப்பட்டுள்ளார்கள்.

# காலமானார்



பொரளையில் நவமணி உட்பட பிரதான பத்திரிகைகளின் முகவரான தமிந்த யஸரத்ன சில்வாவின் அன்புத் தாயாரான கருணாவதி டி அல்விஸ் காலமானார்.

இவரது பூதவுடல் கடந்த புதனன்று உடுமுல்லை பொது மயானத்தில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

இவரது மறைவு குறித்து பிரீலங்கா மீடியா லிமிடட் நிறுவனத்தின் விநியோகப் பிரிவு அதன் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றது.

# சாதாரண தர மாணவர்களுக்கு கொழும்பில் இலவச வகுப்புகள்

கொழும்பு மாவட்டத்தில் கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கு இசவசமாக கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கான வகுப்புகள் நடத்தப்படவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானின் வழிகாட்டலில் மேல்மாகாண சபை உறுப்பினர்களான ஏ.ஜே.எம்.பாயிஸ் மற்றும் அர்ஷாட் நிஸாமுதீன் ஆகியோரின் முயற்சியில் கொழும்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவினால் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்விசேட வகுப்புகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. திங்கள் முதல் வியாழன் வரை மாலை 3 மணிக்கு கொழும்பு 10 அல் ஹிதாய வித்தியாலயத்திலேயே வகுப்புகள் இடம்பெறவுள்ளன. தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் சிங்கள மற்றும் தமிழ் மொழி பிரிவுகளுக்காக நான்கு வகுப்புகள் இடம்பெறவுள்ளன. கட்டாயப்பாடங்கள் அனைத்தும் இதன்போது நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பு மாவட்ட முஸ்லிம் அதிபர்களுக்கான கூட்டமொன்றின் போது அவர்களின் ஆலோசனைகளும் இவ்வகுப்புகளுக்கு பெறப்பட்டது. அத்துடன் இத்திட்டத்தை கட்டாயம் முன்னெடுக்க வேண்டும் எனவும் அதிபர்கள் வழியுறுத்தினர். அத்துடன் பாடசாலைகளினூடாக கல்வியில் பின்தங்கியிருக்கும் மாணவர்களின் பட்டியல் பெறப்பட்டதாகவும் ஆரம்பகட்டமாக 200 மாணவர்களை உள்ளீர்க்க திட்டமிட்டுள்ளதாகவும் இத்திட்டத்துக்கு பொறுப்பான அப்துல் அஸீஸ் ஆசிரியர் மேலும் தெரிவித்தார்.

# இருதின பத்திரிகை நெருக்கடியில்; ஆசிரியர் பதவி விலகல்

இருதின பத்திரிகையின் ஆசிரியர் விமலனாத் வீரரத்ன அப்பதவியிலிருந்து சட்டவிரோதமாக நீக்கப்பட்டமையை ஆட்சேபித்து அப்பத்திரிகையின் ஆசிய பீட ஊடகவியலாளர்கள் பணிகளிலிருந்து ஒதுங்கியுள்ளனர்.

சேவையிலிருந்து ஒதுங்கிக் கொண்ட ஏழு ஊடகவியலாளர்கள் நேற்று பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சண்டே லீடர் பத்திரிகை நிறுவனம் இப்பத்திரிகையை வெளியிட்டு வருகின்றது.

# கெச்சிமலை வருடாந்த ஸஹீஹுல் புஹாரி தமாம் மஜ்லிஸ்



வரலாற்றுப் புகழ்மிகு பேருவளை கெச்சிமலை தர்காவில் நடைபெறும் புனித ஸஹீஹுல் புஹாரி - முஸ்லிம் தமாம் மஜ்லிஸ் மார்ச் 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10மணியளவில் சங்கைக்குரிய அஷ்ஷேஹ் முஹம்மத் காலிப் அலவி ஆலிம் பின் அப்துல்லாஹ் ஆலிம் அலவியதுல் காதிரி தலைமையில் நடைபெறுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரகரிக்கப்படுகிறது.

### புஹாரி - முஸ்லிம் மஜ்லிஸ்

அல் ஆலிம் அஷ்ஷெய்ஹு இஸ்மாயில் (றஹ்) ஹிஜ்ரி 1315ல் இறையடி சேர்ந்ததன் பின்.அவர்களது புதல்வர் அஷ்அஷய்ஹு முஹம்மத் அப்துல்லாஹ் ஆலிம் (1878 - 1952) புனித புஹாரி முஸ்லிம் பராயன மஜ்லிஸ் இங்கு ஆரம்பிக்கப்பட்டது. ஹைத்தராபாத் நிஸாம் மன்னரின் அவையில் ஷெய்ஹாக இருந்தவரே அஷ்ஷெய்ஹு அஹமத் இப்னு அப்துல்லாஹ் பாபஹ்ஹி மௌலானா புஹாரி கிரந்தத்தை ஹிஜ்ரி 1321ஆம் ஆண்டு கெச்சிமலை தர்காவில் அப்துல்லாஹ் ஆலிமுக்கு இதனை ஓத உத்தரவு அளித்தார்.இதனுடன் முஸ்லிம் மஷ்ரவூர் ரவி ஹதீஸ் கிரந்தமும் ஓதப்படுகிறது.

வெள்ளிக்கிழமை தவிர இந்தப் புனித மஜ்லிஸ் தினமும் அதிகாலை தஹஜ்ஜத் தொழுகையுடன் ஆரம்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.கடந்த பல தசாப்தங்களாக இந்த மஜ்லிசை அலவியா தரீக்காவின் ஆன்மீக தலைவர் மர்ஹூம் சங்கைக்குரிய அஷ்ஷெய்ஹ் முஹம்மத் ஹம்ஸா ஆலிம் பின் அப்துல்லாஹ் ஆலிம் அலவியதுல் காதிரி தலைமை தாங்கி நடாத்தி வந்தார்.அதன் பின்னர் இன்று அவரது சகோதரர்கள் பக்கபலமாக நின்று இம்மஜ்லிசை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றனர். அல்லாஹ்வின் கிருபையால் இம் மஜ்லிஸ் வருடம் தோரும் மிகச்சிறப்பாகவே நடைபெறுகிறது.பல்லாண்டு காலமாக நடைபெற்று வரும் இம் மஜ்லிஸ் சம்பிரதாய வழக்கமுறையின்றி சமூக விழிப்புணர்வையும் தூண்டுகிறது மேலும் சமுதாய மறுமலர்ச்சியையும் தோற்றுவித்துள்ளது என்பது வரலாற்று உண்மையாகும். இந்த தர்காவின் சுற்று வட்டாரம் தற்போது மிக அழகான முறையில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

ஷெய்ஹு அப்துல்லாஹ் ஆலிம் ஒரு நாள் உபதேசம் தலைசிறந்த அரபிக்கல்லூரி ஒன்றை இந்நாட்டில் உருவாக்கியது.கொடை வள்ளலான என்.டீ.எச் அப்துல் கபூர் ஹாஜியார் இம் மஜ்லிஸில் கேட்ட உபதேசத்தால் மகரகமையில் கபூரியா அரபிக் கல்லூரியை நிர்மாணித்தார்கள்.

கெச்சிமலை புஹாரிமஜ்லிசின் விளைவால் பிற்காலத்தில் இரண்டு புஹாரி மஜ்லிஸ்கள் தோற்றம் பெற்றன. மூதூர் கிண்ணியா புஹாரி மஜ்லிஸ் ஆகியனவே அவையாகும்.

### இஷாஅதுல் இஸ்லாம் அநாதை இல்லம்

1974ஆம் ஆண்டு ஷெய்குநாயகம் மர்ஹூம் ஹம்ஸா ஆலிம் களுத்துறை மாவட்ட கல்விமான்கள் கொடைவள்ளல்கள் அறிஞர்கள் உலமாக்கள் சிந்தனையாளர்கள் அனுசரணையுடன் தர்காநகரில் இஷாஅதுல் இஸ்லாம் என்ற பெயரில் ஓர் அநாதை இல்லத்தை உருவாக்கினார்.இன்று இந்த நிலையம் மிக வெற்றிகரமாக இயங்கி வருகிறது. கைத்தொழில் தொழில்நுட்ப ஆன்மீக உலக கல்வியும் அனாதை சிறார்களுக்கு வழங்கப்படுகிறது.

மேலும் 1989ம் ஆண்டு கெச்சிமலை தர்காவில் அல் குல்லியதுல் அஷ்ரபிய்யா அரபிக்கலாபீடம் ஆரம்பிக்கப்பட்டதுடன் களுத்துறை மின்கதுல் ஹசனியா அரபிக் கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இரு கல்லூரிகளிலிருந்தும் பல உலமாக்கள் உருவாகி வெளியாகியுள்ளனர். பலர் வெளிநாடுகளில் உயர்கல்வி பெருவதற்கு புலமைப்பரிசில் பெற்று சென்றுள்ளனர்.அஷ்ரபிய்யா அரபிக் கல்லூரி கெச்சிமழை தர்கா வளவில் இஸ்லாமிய கலை வனப்புடன் கம்பீரமாககாட்சியளிக்கிறது. கெச்சிமலை புஹாரி முஸ்லிம் மஜ்லிஸின் விலைளவாக வியாபித்த சேவைகள் அனந்தம்.

கடந்த ஜனவரி 30ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இம் மஜ்லிஸ் எதிர்வரும 4ஆம் திகதி இரவு ராத்தீப், தர்காவில் அடங்கப்பட்டுள்ள சங்கைக்குரிய அஷ்ஷெய்ஹு அஷ்ரப் வலியுல்லாஹ்வின் ஸியாரத் நிகழ்ச்சியும் 5ஆம் திகதி அதிகாலை அல் குர் ஆன் தமாம் நிகழ்ச்சியும் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெறும்.

தமாம் நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை வழமைபோல் நேரடியாக அஞ்சல் செய்யவுள்ளது.

பீ.எம். முக்தார்
-பேருவளை நிருபர்-

Red Rose Industries
BEST QUALITY SOCKS
For trade enquires
011 2764690
/GOODFIT.LK

# கொமர்ஷல் வங்கி அட்டைகள் வைத்திருப்பவர்களுக்கு 'டைன் அன்ட் ஸ்மைல்' ஊக்குவிப்பு




சுவையான விருந்தினை அருந்துபவர்கள் மத்தியில் புன்னகை மலருவது உண்மையானால்; கொமர்ஷல் வங்கியின் கிரடிட் மற்றும் டெபிட் அட்டை வைத்திருப்பவர்கள் அடுத்த இரண்டு மாதங்களுக்கு புன்னகை பூத்தவர்களாக இருக்கலாம். வங்கியின் புதிய சுடைன் அன்ட் ஸ்மைல் திட்டம் இதற்கு வழி வகுக்கின்றது.

64 பிரபலமான உணவகங்களில் இந்த ஊக்குவிப்புத் திட்டம் அமுலில் இருக்கும். அவற்றுள் 40, நாட்டில் உள்ள முன்னணி 21 ஹோட்டல்களில் அமைந்துள்ளன. கொம்பேங்க் கிரடிட் கார்ட்டுகளுக்கு 30 வீத கழிவும் டெபிட் கார்ட்டுகளுக்கு 20 வீத கழிவும் 2017 ஏப்ரல்10 வரை கிடைக்கும் என்று வங்கி அறிவித்துள்ளது.

விஸா மற்றும் மாஸ்டர் கார்ட்கள் ஊடாக கொடுப்பனவுகளைச் செலுத்துகின்ற போதும் இந்தக் கழிவு கிடைக்கும் என்று கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

GOODFIT
BRA · UNDERWEAR SOCKS
Distributors
Pettah - 011 5749657
Maharagama - 011 2089609
/GOODFIT.LK

# வணிகச் செய்திகள்

# செரண்டிப் ஃப்ளவர் மில்ஸ் புதிய கூட்டாண்மை இணையத்தளத்தில் அங்குரார்ப்பணம்




செரண்டிப் ஃப்ளவர் மில்ஸ் Serendib Flour Mills (SFML) தமது இணைய வெளிஇருப்பினை மேலும் பலப்படுத்தும் நோக்கத்துடன், தமது கூட்டாண்மை இணையத்தளத்தினை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துள்ளது.

இந்த இணையத்தளமானது, நிறுவனத்தின் பங்குதாரர்கள் இலகுவாகவும், சௌகரியமாகவும் தமக்கு வேண்டிய தகவல்களை பெற்றுக்கொள்ளும் வகையில் முக்கிய தகவல் விபரங்களை உள்ளடக்கியவாறு, நவீன முறையில் உருவமைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய இணையத்தளமானது (www.sfml.lk) புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ள சிறப்பம்சங்களுடன், நேர்த்தியான வடிவமைப்பு, புதிய உள்ளடக்கங்களுடன், புத்தமைவு நோக்குடன் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். உள்ளக வர்த்தக மாற்றங்களை வெளிப்படுத்தும் மேலதிக விபரங்கள் மற்றும் நிறுவனத்தின் மீளமைக்கப்பட்ட ஆரோக்கியம் மற்றும் பேண்தகைமைக்கான அர்ப்பணிப்பு குறித்த மேலதிக தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த புதிய இணையத்தளம் அண்மையில் எயார்ப்போர்ட் கேற்வே ஹோட்டலில் இடம்பெற்ற வருடாந்த விற்பனை மாநாட்டில் வைத்து நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்தினர், பிரிவுத் தலைவர்கள், ஒட்டுமொத்த விற்பனைக் குழுவினர் ஆகியோர் முன்னிலையில் வைத்து செரண்டிப் ஃப்ளவர் மில்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. கெவின் ஓலெயரி அவர்களால் அங்குரார்ப்பணம்; செய்துவைக்கப்பட்டது.

இந்த புதிய இணையத்தளமானது, Pxyle இன் துணையுடன் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின், கூட்டாண்மை வீடியோ, கோதுமை மாவின் ஆரோக்கிய அனுகூலங்கள் குறித்த தகவல்கள், அத்தியாவசிய சேவை விபரங்கள், நிறுவனத்தின் தரக்கட்டுப்பாட்டு நெறிமுறைகள், கூட்டாண்மை சமூகப்பொறுப்புணர்வு மற்றும் பேண்தகைமை முனைப்புகள், விநியோகஸ்தர் விபரங்கள், நாடளாவிய ரீதியிலுள்ள நேரடி முகவர்கள் மற்றும் அவர்களின் தொடர்பு விபரங்கள் போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

# புதிய இடத்தில் யூனியன் வங்கியின் புறக்கோட்டை கிளை




யூனியன் வங்கியின் புறக்கோட்டை கிளை, வாடிக்கையாளர்களுக்கு மீளமைக்கப்பட்ட வங்கி அனுபவத்தினை அளிக்கும் நோக்குடன் தற்போது, இல. 111, பிரதான வீதி, கொழும்பு 11 என்ற விசாலமான அமைவிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

யூனியன் வங்கியின் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான இந்திரஜித் விக்கிரமசிங்க யூனியன் வங்கியின் புதிய புறக்கோட்டை கிளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தார். புறக்கோட்டை கிளை யின் இடமாற்றத்துடன், யூனியன் வங்கியானது, கொழும்பின் வர்த்தக மையமாக விளங்கும், அதிதுரித மேம்பாட்டினை பெற்றுவரும் புறக்கோட்டையில் எழுந்துள்ள மிகையான வங்கியியல் தேவைகளை தீர்க்கும் முனைப்பினை மேலும் வலுப்படுத்துகின்றது.

# Ceylinco Life இன் புலமைப்பரிசில் தொகை 120 மில்லியனை தாண்டியுள்ளது




ஆயுட் காப்புறுதி முன்னோடியான Ceylinco Life நாட்டின் எதிர்கால தலைவர்களுக்கான முதலீடாக அதன் 16வது பிரணாம புலமைப்பரிசில் வழங்கல் வைபவத்தின் போது உயர் சாதனை படைத்த மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கு வழங்கிய 160 புலமைப்பரிசில்களுடன் 120 மில்லியன் ரூபா பெறுமதியான பிரணாம புலமைப்பரிசில்களை பகிர்ந்தளித்துள்ளது.

நாட்டின் அதிசிறந்த திறமைசாலிகளுக்கு பரிசுகளை வழங்கி ஊக்குவித்து அவர்களுக்கு எழுச்சியூட்டும் முயற்சியில் அவர்களது கல்விசார் மற்றும் புறக்கிருத்திய செயற்பாடுகளின் மகத்துவத்தை கொண்டாடும் இந்த வருடாந்த நிகழ்ச்சியை பார்ப்பதற்காக இலங்கையின் சகல மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்த பாடசாலை மாணவ, மாணவிகள், பெற்றார் ஆசிரியர்கள், சிரேஷ்ட கல்விமான்கள் ஆகியோரால் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தின் பிரதான சாலை நிரம்பி வழிந்ததை காணக்கூடியதாக இருந்தது.

Ceylinco Life வழங்கிய இந்த ஆகப்பிந்திய தொகுதி புலமைப்பரிசில்களை பெற்றுக் கொள்வோரில் 2016ஆம் ஆண்டு 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் திறமையாக சித்தி அடைந்த 28 மாணவ, மாணவிகள், 2015ம் ஆண்டு சாதாரண தர பாரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்ற 24 மாணவ, மாணவிகள், 2015ம் ஆண்டு உயர்தர பாரீட்சையில் உயர் சாதனையாளர்கள் 24 பேர் மற்றும் விளையாட்டு, கலாசாரம், கலைகள், நாடகம், புதியன கண்டுபிடிப்பு ஆகியவற்றில் தேசிய அல்லது சர்வதேச மட்டத்தில் சிறந்த இடத்தை பெற்ற 10 பேர் ஆகியோர் அடங்குவர்.

விவசாயத்திற்கு நல்லாரோக்கியமும் போதிய மழையும் எவ்வளவு அவசியமோ அதுபோல ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு கல்வி அத்தியாவசியமானது என்றும் அவர் கூறினார்.

எமது மக்கள் நன்கு படித்தவர்ளாகவும் சரி, பிழை அறிந்து அதன்படி நடப்பவர்களாகவும் இருந்தால் இலங்கை 5 வருடங்களில் அபிவிருத்தி அடைந்துவிடும் என்றும் பேராசிரியர் அமரதுங்க தெரிவித்தார்.





நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி கொழும்பு 7இல் அமைந்துள்ள மூனுநுடு கிளையை, அதிகளவு இடவசதிளுடன்16, வோர ட் பிளேஸ், கொழும்பு 7 எனும் முகவரிக்கு பெப்ரவரி 21ம் திகதி முதல் இடமாற்றப்பட்டுள்ளது.இந்த கிளையின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமாக, வினைத்திறன் வாய்ந்த வகையில் மற்றும் இலகுவாக சகல சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

பெப்ரவாரி மாதம் 21ஆம் திகதி உத்தியோகபூர்வமாக நடைபெற்ற இந்த அங்குரார்ப்பண நிகழ்வில்,வாடிக்கையாளர்கள், வாடிக்கையாளர்கள், விருந்தினர்கள் மற்றும் வங்கியின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.


# சுனாமியால் அனைத்தையும் இழந்த எனக்கு மொபிடெல் புது வாழ்க்கையைக் கொடுத்தது

## மொபிடெல் கேஷ் பொனன்ஸா அதிஷ்டசாலி ராசநாயகம் அற்புதராஜா

Sri Lanka Telecom Mobitel CASH BONANZA

■ பீ.எப்.எம். றிஷாட்





சுனாமியினால் அனைத்தையும் இழந்து எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாமல் திருகோணமலைக்கு தொழில் தேடி வந்து மிகவும் கஷ்டத்துக்கு மத்தியிலும், இருப்பதற்கு வீடொன்று இல்லாமல் மனைவியுடன் வாழ்ந்து வந்த எனக்கு உண்மையில் சொல்லப்போனால் மொபிடெலினால் கிடைத்த வரம் முற்றுமுழுதாக மாற்றிவிட்டது. இந்த சந்தோஷத்தை வார்த்தைகளால் விபரிக்க முடியாது என மொபிடெல் கேஷ் பொனன்ஸா அதிஷ்டசாலி ராசநாயகம் அற்புதராஜா ஆனந்த கண்ணீருடன் தெரிவித்தார். மொபிடெல் நிறுவனம் மாதாந்தம் முன்னெடுக்கும் கேஷ் பொனன்ஸா எனும் மாபெரும் அதிஷ்ட சீட்டிழுப்பில் 350 மில்லியன் ரூபா பெறுமதியான மென்டோரோ வகை ஜீப் ரக வாகனத்தை வென்ற அதிஷ்டசாலியான திருகோணமலையைச் சேர்ந்த ராசநாயகம் அற்புதராஜாவுடனான நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், நான் கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவன். கடந்த 2004ஆம் ஆண்டு சுனாமி பேரலையினால் அனைத்து உடமைகளையும் இழந்தேன். இதில் குறிப்பாக எனது அம்மா, அக்கா மற்றும் அக்காவின் 2 பிள்ளைகளும் சுனாமி அலையில் சிக்கி உயிரிழந்தார்கள். இந்நிலையில் சுனாமியின் காரணமாக வீடு, உறவினர்கள் என அனைத்தையும் இழந்த பின்னர் 2005ஆம் ஆண்டு திருகோணமலைக்கு வந்தேன். அதன்பிறகு தனியார் நிறுவனமொன்றில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமை புரிந்தேன். தற்போது திருகோணமலையிலுள்ள தனியார் கல்வி நிறுவனமொன்றில் பணிபுரிகின்றேன். ஆனாலும் பல்வேறு கஷ்டங்கள், இன்னல்களுக்கு மத்தியில் எனது நண்பரொருவரின் நண்பியொருவரை நான் திருமணம் செய்தேன். அப்போது எனக்கு 47 வயதாக இருந்தது. எனது மனைவியின் பெயர் பரமேஸ்வரி. மூதூர் கிளிவெட்டியைச் சேர்ந்தவர். அவரும் யுத்தம் காரணமாக அனைத்தையும் இழந்து திருகோணமலைக்கு வந்தவர். சுனாமியால் நான் அனைத்தையும் இழந்து தொழிலுக்காக திருகோணமலைக்கு வந்தேன். அதேபோல யுத்தத்தினால் எனது மனைவி அனைத்து உடமைகளையும் இழந்து இங்கு வந்தார். எனவே கடந்த 12 வருடங்களாக நாம் இருவரும் மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். எமக்கு குழந்தைகள் இல்லை. குறிப்பாக இருப்பதற்கு வீடொன்று இல்லாமல் வாடகை வீட்டில் வாழ்ந்து வந்தோம். ஆனால் எனது தொழில் மூலம் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடிந்தாலும், வீட்டு வாடகையை எனது மனைவியின் சகோதரிதான் செலுத்தி வந்தார். அவர் ஒரு ஆசிரியராவார். இவ்வாறு எமது வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்க, கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி, வழமைபோன்று பாதுகாப்பு கடமைக்காக சென்றிருந்தபோது காலை 10 மணியளவில் மொபிடெல் இலக்கமொன்றிலிருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அழைப்பு வந்தவுடன் நான் பேசினேன். ஆனால் பேசிய நபர் நான் தான் வெற்றியாளர் என்பதை உடனடியாக தெரிவிக்கவிக்காமல், எனது விபரங்களை மட்டும் அந்த நபர் கேட்டுக்கொண்டார். அதன்பிறகு மீண்டும் அதே இலக்கத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வர, மீண்டும் அதே நபர் விபரங்களை கேட்கத் தொடங்கினார். ஆனால் நண்பர்கள் யாராவது கேலிக்காக குழப்புகின்றார்கள் என்றுதான் நான் நினைத்தேன். அதன்பிறகு 3ஆவது தடவையாக மீண்டும் அதே தொலைபேசி அழைப்பு வந்தது. நான் மறுபடியும் பேசிய போது நீங்கள்தான் வெற்றியாளர் என்று தெரிவித்தார். ஆனால் குறித்த செய்தியைத் தொடர்ந்து எனது நெஞ்சு படபடக்க ஆரம்பித்தது. உடனடியாக எனது மனைவிக்கு தொடர்பை ஏற்படுத்தி சம்பவம் தொடர்பில் தெரிவித்தேன். அவர் என்னை சமாதானப்படுத்துவதற்காக இவ்வாறு போலி அழைப்புக்கள் ஏற்படுத்தி சிலர் குழப்புவார்கள் என தெரிவித்தார்.

ஆனால் அடுத்த தொலைபேசி அழைப்பு வரும் வரை நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்க, அன்றைய தினம் மாலை 4 மணியளவில் அதே மொபிடெல் இலக்கத்திலிருந்து அழைப்பு வந்தது. அப்போது நான்தான் மொபிடெல் கேஷ் பொனன்ஸா வெற்றியாளர் என அவர் தெரிவித்தார். ஆனால் நான் அதனை நம்பவே இல்லை. உடனே நான் பணிபுரிகின்ற நிறுவனத்தில் நன்கு சிங்களம் தெரிந்த ஒருவரிடம் விபரங்களைத் சொல்லி அதே இலக்கத்துக்கு மீண்டும் அழைப்பினை எடுத்து சிங்களத்தில் பேசினேன். அப்போது நான்தான் வெற்றியாளர் என்பதை உறுதிப்படுத்தினார். அதன் பின்னர் ஓரளவு நம்பிக்கை பிறந்தது.

ஏதோ ஒருவகை சந்தோஷம் ஏற்பட, உடனே வேலையிலிருந்து வீடு நோக்கிச் சென்றேன். அப்போது வீட்டில் மனைவி, உறவினர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். எனக்கு கிடைத்த இந்த அதிஷ்டத்தைப் பற்றி அவர்களுக்கும் நம்பவே முடியாமல் இருந்தது. இந்நிலையில், மறுநாள் நான் திருகோணமலையிலுள்ள மொபிடெல் நிறுவனத்திற்குச் சென்று அங்குள்ள அதிகாரியுடன் பேசினேன். அப்போதுதான் எனக்கு மொன்டேரோ ரக ஜீப் வண்டியொன்று பரிசாக கிடைத்தமை உறுதியானது.

சுனாமியின் பிறகு நான் 2005ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மொபிடெல் சிம் அட்டை தான் பாவித்தேன். ஏனென்றால் அப்போதெல்லாம் மொபிடெல் மட்டும் தான் இலங்கையில் அதிகமாக பயன்படுத்தப்பட்டு வந்தன. குறிப்பாக மொபிடெல் கேஷ் பொனன்ஸா அதிஷ்ட சீட்டிழுப்பு ஆரம்பமாகிய காலத்திலிருந்து ஒவ்வொரு நாளும் 50 அல்லது 100 ரூபா மொபிடெல் ரீலோட் அட்டையை வாங்குவது வழக்கம். ஆனால் எனக்கு சாப்பிடக்கூட இல்லாவிட்டாலும் மொபிடெல் ரீலோட் வாங்குவதும், அதிஷ்ட சீட்டிழுப்பு வாங்குவதுதான் நாளாந்தம் செய்துவந்தேன். இதற்காக எனது மனைவியுடன் சண்டை செய்த சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் ஆரம்பத்திலிருந்து மொபிடெல் என்றால் ஒருவகையான அன்பு இருந்தது. எந்தவொரு தடங்கலும் இல்லாமல் குறைந்த அழைப்புக் கட்டணத்துடன் இருந்த காரணத்தால் அப்போது முதல் மொபிடெல் பாவித்து வந்தேன். இதனால் வேறு சிம் அட்டைகளை வாங்கிப் பாவிப்பதற்கு எண்ணியதும் கிடையாது. இந்த நம்பிக்கையும், என்னிடமிருந்த அதிஷ்டமும் தான் இன்று என்னை வெற்றியாளராக மாற்றியுள்ளது என்றார்.

குறித்த வாகனத்தைப் பெற்றுக் கொள்வதற்காக கடந்த செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி மதுகமவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிக்கு குடும்பத்தாருடன் சென்றேன். வாகனத்தைக் கண்டவுடன் என்னுடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லாமல் போனது. என்னால் இந்த வாகனத்தைப் பராமரிப்பதற்கும், ஓட்டுவதற்கும் கடினமாக இருந்ததால், வாகனத்தை மொபிடெல் நிறுவனத்திற்கு திருப்பிக் கொடுத்துவிட்டு பணத்தை பெற்றுக்கொண்டு எனது நீண்ட நாள் கனவான சொந்த வீடொன்றைப் பெற்றுக்கொள்ளவே தீர்மானித்தேன். இதன்படி 150 கோடிக்கு வாகனத்தைக் கொடுத்து மொபிடெல் நிறுவனத்திற்கு வந்து காசோலையைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்பினேன். கிடைத்த பணத்திலிருந்து முதலில் கோவிலில் பூஜையொன்று செய்தேன். அதன்பிறகு என்னுடன் வேலைப் பார்க்கின்ற மிகவும் கஷ்டத்துடன் வாழ்கின்ற சக ஊழியர்களுக்கு பணம் கொடுத்து உதவினேன். இதனையடுத்து எனது நீண்ட நாள் கனவான வீடொன்றை 55 இலட்சம் ரூபா செலவில் வாங்கியுள்ளேன். இன்னும் சில வாரங்களில் எனது சொந்த வீட்டிற்குச் செல்லவுள்ளேன். இதற்குத் தேவையான அனைத்து வேலைகளையும் முடித்துவிட்டேன். ஆனால் என்றாவது ஒருநாள் கடவுள் எனக்கு இப்படியொரு அதிஷ்டத்தைத் தருவார் என்று நம்பிக்கை கொண்டிருந்தேன். அந்த நீண்டநாள் கனவை கடவுள் பூர்த்தி செய்து கொடுத்தார். இறுதியாக மொபிடெல் கேஷ் பொனன்ஸா அதிஷ்ட சீட்டிழுப்பின் மூலம் பெற்று எஞ்சியுள்ள பணத்தை தொழில் ஒன்றில் பயன்படுத்த எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 05th MARCH 2017